உதயன்
விலை ரூபா 15.00
www.uthayan.com
சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 21 செவ்வாய்க்கிழமை (07.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 011

### யுத்தக் குற்ற விசாரணை நடத்தக் கோரியிருக்கும்

# கரு ஜயசூரியவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை வரும்

## அமைச்சர் வீரவன்ஸ நேற்று அறிவிப்பு





கொழும்பு, டிசெம்பர் 07

யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கை அரசு விசாரணை நடத்தவேண்டும் என்று ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்குக் கூறியமைக்காக அவருக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்றுக் கூறினார்.

நாடாளுமன்றக் குழு அறையில் அரசு நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து கரு ஜயசூரிய 16 எம்.பிக்களுடன் அரசுடன் இணைந்தார். அவ்வாறு ஆதரவு தெரிவித்தவர் இப்போது யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றன என்று கூறுகின்றார்.

புலிகள், சர்வதேச சக்திகள் உள்ளிட்டவர்களே யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றன என்றும் அதற்காக விசாரணை தேவை என்றும் கூறுகின்றனர். ஆனால், இப்போது அவர்களுடன் சேர்ந்து கரு ஜயசூரிய மற்றும் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோரும் கூறுகின்றனர். (28 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதிக்கு நடந்த அசௌகரியத்துக்காக

## பிரிட்டன்தான் அவமானப்பட வேண்டும் இலங்கை அல்ல என்கிறார் கெஹலிய

கொழும்பு, டிசெ. 07

பிரிட்டனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட சம்பவத்தால் நாம் அவமானப்படவில்லை. ஐந்து நட்சத்திர ஜனநாயக நாடான பிரிட்டனில் இச்சம்பவம் இடம்பெற்றதால் உண்மையில் அவமானப்பட வேண்டியவர்கள் யார் என்று எண்ணிப்பார்க்க வேண்டும்- என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுக் கூறினார்.

நாடாளுமன்றக் குழு அறையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் உலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அந்தப் பல்கலைக்கழகம் உலகின் பல அரசியல் தலைவர்களை உருவாக்கியிருக்கின்றது. இந்தப் பல்கலைக்கழகம் உலகத் தலைவர்களை உரையாற்றுவதற்கு அழைப்பதுண்டு. அதன் அடிப்படையில்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் (28 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
உள்நாடு 2
புலிகள் மட்டுமே யுத்தக் குற்றம் புரிந்தனர் - சஜித்
குடாநாடு 3
மழை, வெள்ளத்தால் 15 ஆயிரம் பேர் பாதிப்பு
விளையாட்டு 24
ஆஷஸில் தடுமாறுகிறது ஆஸ்திரேலியா

## தென்னிந்தியாவில் தளம் அமைக்க வசதியாக கொழும்பில் லஷ்கர் தீவிரவாதிகளின் முகாம்

### அம்பலப்படுத்துகிறது விக்கிலீக்ஸ்

கொழும்பு, டிசெ. 07

இலங்கையில் லஷ்கர்-இ-தொய்பாவின் செயற்பாடுகள் பரந்துவிரிந்துள்ளன என்றும், இந்தியாவின் கேரளா மற்றும் தமிழ்நாட்டில் தளங்களை அமைப்பதற்கான உதவி முகாமொன்றை கொழும்பில் அமைப்பதற்கு அந்த இயக்கம் முயற்சித்தது என்றும் விக்கி லீக்ஸ் இணையத்தளம் அம்பலப்படுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் 19.06.2009 ஆம் திகதியிடப்பட்ட தகவலொன்றில் இத்தகவல் குறிப்பிடப்பட்டுள்ளதை அந்த இணையத்தளம் எடுத்துக்காட்டியுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளில் (28 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதிகள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டு!

கண்டி, டிசெ. 07

நிரந்தர நியமனம் கோரி உண்ணாவிரதம் இருந்துவந்த மின்சாரசபை ஊழியர்கள் மீது பொலிஸார் நேற்று கண்ணீர்ப் புகைக் குண்டு மற்றும் நீர் பிரயோகித்ததனால் பதற்றநிலை ஏற்பட்டது.

இலங்கை மின்சார சபையின் தற்காலிக மற்றும் ஒப்பந்த முறையில் பணி புரிபவர்கள் தம்மை உடனடியாக நிரந்தர சேவையில் இணைக்குமாறு கோரி இலங்கை மின்சார சபையின் கண்டி பிரதான காரியாலய கூரை மேல் (28 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு 20 கோடி டொலர் கடன் வழங்குகிறது பாகிஸ்தான்

கொழும்பு, டிச. 07

இலங்கைக்கு 20 கோடி டொலர் இலகு கடனை வழங்கவுள்ள பாகிஸ்தான் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகத்தை 100 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறது என பாகிஸ்தானிய அரசு தெரிவித்துள்ளது.

தமது கொழும்பு பயணம் வெற்றிகரமாக அமைந்தது எனவும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இரு நாடுகளும் முடிவெடுத்துள்ளன என கடந்த மாதம் பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் இலங்கைக்கு பயணம் செய்திருந்த முதலீட்டுச் சபையின் தலைவரும் பாகிஸ்தானிய முதலீட்டு அமைச்சருமான சலீம் எச் மண்ட்விவெல கூறியுள்ளார்.

இதுதவிர ஏற்றுமதி, பண்டமாற்று மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக இலங்கைக்கு 20 கோடி டொலரை இலகு கடனாக வழங்குவதற்கும் பாகிஸ்தான் முடிவெடுத்திருக்கிறது என மண்ட்விவெல தெரிவித்துள்ளார். (ஒ-சி)

# கிளிநொச்சி, முல்லைத்தீவில் பெரும் வெள்ளப்பெருக்கு

### உதவிக்கு இராணுவம் அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.07

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள மோசமான வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கை இராணுவத்தின் 57ஆவது பிரிவினரின் உதவி நாடப்பட்டுள்ளது. திருகோணமலை கடற்படையினரின் படகுகளும் உதவிக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கண்டாவளை, கட்டுவன் கொட்டி பிரதேசத்துக்குச் செல்வதற்கான ஒரே ஒரு பாதையும் வெள்ளத்தினால் முற்றாக மூழ்கியுள்ளதால், அங்குள்ள மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்லும் பணியில் திருகோணமலை கடற்படையினரின் படகுகள் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை, இரணைமடுக் குளத்தின் பன்னிரண்டு வான் கதவுகள் திறந்து விடப்பட்ட நிலையிலும், அங்கு வெள்ள நீர் இன்னும் வடியவில்லை என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை 13,528இற்கும் அதிகமான மக்கள் தமது சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், உறவினர்களின் வீடுகளிலும் தங்கி உள்ளனர்.

இவர்களுக்காக 16 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (28 ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தால் இடம்பெயர்ந்து சமீபத்தில் தற்காலிக கூடாரங்களிலும் குடிசைகளிலும் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள், கடும் வெள்ளம் காரணமாக மீண்டும் தற்காலிக வசிப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். கூடாரங்களும் குடிசைகளும் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெங்கு நுளம்புகளின் பரம்பல்:

# அரச நிறுவன தலைவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, டிசெ.07

டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு வாய்ப்பான இடங்களைத் துப்புரவு செய்யாது கைவிட்டுள்ள அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக உடனடியாக வழக்குத் தொடருமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தின் கீழ் கடந்த ஐந்து தினங்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள சோதனை நடவடிக்கையின் போது அரச நிறுவனங்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீத மானவைகளிலும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளன. இது குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வருவது தொடர்பாக மேற்படி அரச நிறுவனங்கள் குறித்த அறிக்கையொன்றைத் தம்மிடம் கையளிக்குமாறு சுகாதார அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

அத்தோடு மேற்படி அரச நிறுவனங்கள் இரு வாரகாலத்துள் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களைத் துப்புரவு செய்யத்தவறும் பட்சத்தில் அவற்றை ஊடகங்கள் வாயிலாகப் பகிரங்கப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்துள் மேற்கொள்ளப்பட்டுள்ள சோதனை நடவடிக்கையின் போது இ.போ.வ சபையின் சாலைகள், பஸ்கள் நிறுத்திவைக்கும் இடங்கள் நீதிமன்ற வளாகங்கள் உட்பட்ட பெருமளவு அரச நிறுவனங்களில் இவ்விதம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

முக்கியமாக கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் பதின்மூன்று பாடசாலைகளில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. (ஒ-22)

# ஜனாதிபதியை ஆதரித்து யாழ்.நகரில் ஊர்வலம்

யாழ்ப்பாணம், டிசெ.07

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் பிரமாண்டமான ஊர்வலம் இன்று யாழ்.நகரில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து ஊர்வலம் யாழ். பஸ் நிலையத்தை வந்தடையும் என்றும், குடாநாட்டின் பல பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இன்றைய ஊர்வலத்தில் பங்குபற்ற உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# நல்லிணக்க ஆணைக்குழு பணிகளுக்காக ஒரு கோடி 83 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கடந்தகாலங்களில் நடந்த சம்பவங்களை விசாரிப்பதற்கென நிறுவப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்காக ஒரு கோடியே 83 லட்சத்து 11 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தன நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு இது வரை 52 அமர்வுகளை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான ரஞ்சித் சில்வா அம்ரின் ரொஹான் பெரேரா மற்றும் மொஹமட் தௌபீக்மொஹமட் பாயிக், பேராசிரியர் கருணாரத்ன ஹங்கவத்த, சந்திர பால் சண்முகம், சிரிபால பலிஹகார, மனோகரி இராமநாதன், மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம ஆகியோர் இந்த ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

ஐ.தே.க எம்.பி.ரவி கருணாநாயக்க நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை - சாட்சியங்களை இன்னும் சேகரிப்பதற்கு வசதியாக ஆணைக்குழுவின் ஆயுட்காலம் 6 மாதங்களுக்கு நீடிப்பு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# புலிகள் மட்டுமே யுத்தக்குற்றம் புரிந்தனர் என்கிறார் சஜித்

கொழும்பு, டிசெ. 07



இலங்கையில் புலிகளால் மாத்திரமே போர்க்குற்றங்கள் புரியப்பட்டுள்ளன என்று ஐ.தே. கட்சி எம்.பி. சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அப்போது குறுக்கீடு செய்த அமைச்சர் விமல் வீரவன்ஸ, ''இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அதுதொடர்பாக விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் ஐ.தே.கட்சி பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கூறியுள்ளார். ஆனால், புலிகள்தான் போர்க்குற்றங்கள் புரிந்தனர் என்று சஜித் பிரேமதாஸ கூறுகிறார்'' என்றார்.

இதற்கு பதிலளித்த சஜித், இந்த நாட்டில் புலிகள் மட்டுமே போர்க்குற்றங்கள் புரிந்தனர் என்பது எனது நிலைப்பாடு என்று கூறினார்.

சஜித்தின் உரையைத் தொடர்ந்து பேசிய அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா கூறியவை வருமாறு:-

இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இதுதொடர்பாக விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கரு ஜயசூரிய கூறுகின்றார். ஆனால், சஜித் பிரேமதாஸ வேறுமாதிரி கூறுகின்றார்.

இதுதொடர்பில் ஐ.தே.கட்சி எம்.பிக்கள் ஒன்றுக்கொன்று முரணான வகையில் கருத்துக் கூறுகின்றனர்.

மொத்தத்தில் இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கம்.

ஐ.தே.கட்சி புலிகளால் அதிகம் பாதிக்கப்பட்ட கட்சியாக இருக்கின்றபோதிலும் சர்வதேச சமூகத்தைப் பயன்படுத்தி அக்கட்சி இலங்கையை அவமானப்படுத்த முயற்சிக்கின்றது. - என்றார். (ஒ-சி)

### சேவை...



பரிசு:- யாழ். மாவட்ட விவாக இறப்பு பிறப்பு பதிவாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் மேலதிக பதிவாளர் நாயகம் ந. சதாசிவஐயர், பதிவாளர் நாயகம் ஈ.எம் குணசேகர ஆகியோருக்கான பாராட்டு விழா யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

வடக்கு வலய உதவி பதிவாளர் நாயகம் திருமதி. ம.இராசரத்தினம், நினைவுப் பரிசில்களை மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் மற்றும் பதிவாளர் நாயகம் ஈ.எம்.குணசேகர ஆகியோருக்கு வழங்குகிறார். (த-15)

குடாநாட்டில் விபத்துக்களைத் தடுக்க

# போக்குவரத்து விதிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்

### பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.17

குடாநாட்டில் அதிகரித்து வரும் விபத்துக்களை தடுக்க போக்குவரத்து விதிகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

பிரதிப்பொலிஸ் மா அதிபருக்கு இணையம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் தினமும் தொடர்ந்த வண்ணம் உள்ள விபத்துக்கள் குறித்து தாங்கள் அறிவீர்கள் என நம்புகிறோம்.

இந்த விபத்துக்களுக்கு காரணங்கள் வருமாறு:-

* வாகன ஓட்டுநர்களுக்கு போக்குவரத்து விதிகள் தொடர்பான விழிப்புணர்வு இல்லாமை.
* சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணிக்கும் போது கைத்தொலைபேசி பயன்படுத்தல்.
* சமாந்தரமாக பயணிப்பது
* கனரக மற்றும் நீளமான வாகனங்களில் தரிப்பு ஒழுங்கில்லாமல் இருத்தல்.
* ஒரு பாதைப் பயணம், வாகன தரிப்பிட ஒழுங்கு, வீதிகளை கடக்கும் அடையாளம் ஆகியன சீராக இல்லாமை.

எனவே இந்தக் குறைபாடுகளை நீக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் வீதிப்போக்குவரத்து விதிகளை சரியான போக்குவரத்து விதிகளை சரியான முறையில் கடைப்பிக்க விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளன. கடிதத்தின் பிரதியாக்கம் அரச அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. (ஐ)

# பெரிய மரங்களை தறிக்க உத்தரவு

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏ-9 வீதியோரமாக போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படும் பெரிய மரங்களைத் தறிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா பிரதேச சபை செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (எ)

# ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி மத்திய நிலையம்

ஆங்கில ஆசிரியர் பயிற்சி மத்திய நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜித்த முனி சொய்சா நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார். நாட்டில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இந்த நட வடிக்கை எடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

ஆங்கிலக் கல்வி மற்றும் ஆசிரியர் பிரச்சினை தொடர்பாக வாய் மூல பதிலுக்காக எதிர்க்கட்சியினால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே பிரதி அமைச்சர் இவ்வாறு குறிப் பிட்டார்.

அழகியற்கலை ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் பணிகள் பகிரங்மாகவே மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதிக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்கு அவருடன் கூட இருந்தோரே காரணம்

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

கொழும்பு ,டிசெ.07

லண்டன் ஒக்ஸ்போர்ட் யூனியனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உரை ரத்துச் செய்யப்பட்டதற்கு, ஜனாதிபதியுடன் இருந்தவர்களே காரணம். ஐக்கிய தேசியக் கட்சியே இதற்குக் காரணம் என்று எம்மீது குற்றம் சுமத்தப்படுகிறது. இருந்தும் உரை ரத்துச் செய்யப்பட்டது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கவலையடைகிறது என்று அக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

லண்டனில் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன மீது குற்றம் சுமத்தப்பட்டது. நாடாளுமன்றத்தில் டாக்டர் ஜயலத் ஜயவர்தன எம்.பி.மீது ஆளுந்தரப்பு அமைச்சர்கள் தாக்குதல் நடத்தினர். இது நாடாளுமன்ற சம்பிரதாயங் களை மீறும் செயலாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

வரவு-செலவுத் திட்டத்திலுள்ள குறைபாடுகளை மூடி மறைப்பதற்கு அரச தரப்பு இவ்வாறு செயற்படுகின்றது. இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்கு எந்தவித பயனும் கிட்டுவதில்லை.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இளைஞர்களுக்கும் நன்மை கிடைக்கக்கூடிய விடயங்கள் அரிதாகும். இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கத்தக்க வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்காது, எவ்வித நன்மையற்றதும், அரச தரப்பு மற்றும் உயர் நிலைகளில் உள்ளவர்களுக்கு நன்மை அளிக்கக்கூடியதுமான ஒரு வரவு-செலவுத் திட்டத்தையே அரசு முன் வைத்துள்ளது -என்றார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் மழை, வெள்ளத்தால் 15 ஆயிரம் பேர் இதுவரை பாதிப்பு

## 158 வீடுகள் முழுமையாகச் சேதம்

யாழ்ப்பாணம், டிசெ. 07

குடாநாட்டில் தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக நேற்று மதியம் வரை 4 ஆயிரத்து 598 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 770 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

மேலும் 158 வீடுகள் முழுமையாகவும், ஆயிரத்து 350 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. 683 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 423 பேர் வரை பாடசாலைகள், பொது இடங்கள் என்பவற்றில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 534 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 928 பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 560 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 98 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 112 குடும்பங்களைச் சேர்ந்த 376 பேரும், மருதங்கேணி உதவி அரசங்க அதிபர் பிரிவில் 761 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 241 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேரும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 64 குடும்பங்களைச் சேர்ந்த 236 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 872 குடும் பங்களைச் சேர்ந்த இரண்டா யிரத்து 880 பேரும், சண்டிலிப் பாய் பிரதேச செயலர் பிரிவில் 210 குடும்பங்களைச் சேர்ந்த 332 பேரும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 480 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 724 பேரும், தெல்லிப் பழை பிரதேச செயலர் பிரிவில் 124 குடும்பங்களைச் சேர்ந்த 465 பேரும், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 221 பேரும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேரும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 389 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 245 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 33 குடும்பங்களைச் சேர்ந்த 98 பேரும், வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 384 குடும்பங்களைச் சேர்ந்த 1350 பேரும் வெள்ள அனர்த்தத்தினால் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

### சமைத்த உணவு வழங்க ஏற்பாடு

பொது இடங்களில் தங்கியுள்ள 683 குடும்பங்களுக்கும் 3 நாள்களுக்கு தொடர்ச்சியாக சமைத்த உணவுப் பொருள்களை வழங்குமாறு பிரதேச செயலர்களுக்கு அரசாங்க அதிபரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பண்ணைப் பாலத்தினூடான தீவகத்துக்கான போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டுள்ளது. கடல் அலையின் அரிப்பினால் பண்ணை வீதி மிக மோசமாக சேதமடைந்திருப்பதன் காரணமாக இதனூடான போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை தற்காலிக பாவனைக்கு ஏற்ற வகையில் பண்ணை வீதியின் கரைகளில் மண்மூடை அடுக்கப்பட்டு பாவனைக் கேற்றவகையில் ஒழுங்கு செய்திருப்பதாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு பகுதிக்கான புதுகாட்டு சந்தி மருதங்கேணி பாதையிலுள்ள பால திருத்த வேலைக்காக தற்காலிக பாலம் அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பாலத்துக்கு மேலாக வெள்ளம் பாய்வதினால் இந்த வீதியும் தற்போத மூடப்பட்டுள்ளது. இதற்காக பருத்தித்துறை மருதங்கேணி நாகர்கோயிலூடான வீதியை உடனடியாக மக்கள் பாவனைக்குத் திறந்து விடுமாறு பொது மக்களினால் படைத்தரப்பினிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் போக்குவரத்துப் பிரச்சனைக்குத் தீர்வு காணுமாறும் அரச அதிபரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிக்கப்பட்டுள்ளது.

மேலும் மழை வெள்ளம் காரணமாக பொம்மைவெளிப் பகுதியிலிருந்த குடும்பங்கள் இடம் பெயர்ந்து ஒஸ்மானியாக் கல்லூரியில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை இவர்களுக்கு அரசாங்கத்தின் தற்காலிகமான உதவிப் பொருள்களும் வழங்கப்படவில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

மழை காரணமாக நெடுந்தீவில் பல கால்நடைகள் இறந்து போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### வடமராட்சியில் வெள்ள நிலை

கடந்த இரு வாரங்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையினால் வடமராட்சிப் பகுதியில் பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(துன்னாலை, அல்வாய் போன்ற இடங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் குடியிருப்பாளர்கள் பெரிதும் சிரமமடைந்து வருகின்றனர். கடும் மழையினால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் அரச ஊழியர்கள் கடமைக்குச் சொல்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

விறகு பற்றாக்குறையும், மரக்கறி, விறகு பற்றாக்குறையும், மரக்கறி வகைகளின் விலை உயர்வும் பொது மக்களைப் பாதித்துள்ளன.

நெல் வயல்களுக்கு இம் மழை வரப்பிரசாதமாக இருக்கின்ற போதிலும் மரக்கறி, வெங்காயம், புகையிலைச் செய்கையாளர்கள் இம் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-15-236)

**கவனிப்பாரில்லை...**



இடையூறு: கடும் மழை காரணமாக இராசாவின் தோட்டப் பகுதியில் ரயில் பாதைக்கு அருகில் மழை வெள்ளம் வழிந்தோட முடியாது புகைப்பிரதப்நிற்கிறது.
(த-23)

# ஜனாதிபதியின் பிரிட்டன் பயணம் தோல்வி; வெளிநாட்டு அமைச்சு மீது கடும் அதிருப்தி

கொழும்பு, டிசெ.. 7

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரிட்டன் விஜயத்தை ஏற்பாடு செய்தவர்கள் தொடர்பில்; விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்படலாம் என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசின் தகவல்படி இந்தச் சுற்றுப்பயணம் அங்கு நிலவும் களத்தகவல்களின் அடிப்படையில் இல்லாமலும், இராஜதந்திர நடவடிக்கைகள் இன்றியும் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் லண்டன் சுற்றுப் பயணத்தை ஏற்பாடு செய்திருந்தவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்த, பிரிட்டனில் உள்ள சிறிலங்கா சுதந்திர கட்சியின் கிளைத் தலைவர் ராணி புலத்வெல நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் பிரிட்டன் விஜயம் தோல்வி கண்டமைக்கு, ஐரோப்பிய நாடு ஒன்றில் உள்ள பெண் இராஜதந்திரி ஒருவர் பின்னணியில் செயற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தால் இந்த சுற்றுப்பயணத்தில் உள்ள அச்ச நிலைகளும் மற்றும் சிக்கல்கள் குறித்தும் முழுமையான அறிக்கை ஒன்று வெளிநாட்டு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதி இலங்கையில் இருந்து வெளியேறிய பின்னரே இந்த அறிக்கையை வெளிநாட்டு அமைச்சு, ஜனாதிபதி செயலகத்துக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே வெளிநாட்டு அமைச்சின் மீது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிருப்தி காணப்படுகின்ற நிலையில், இந்த தகவல் மேலும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த)

# சட்டவிரோதக் குடியிருப்பாளர்களுக்கு கொழும்புக்குள் தொடர்மாடி வீடுகள்

## பாதுகாப்புச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 7

கொழும்பு நகரில் சட்டவிரோதமான குடியிருப்புக்களில் வாழும் மக்களுக்கு தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

'கொழும்பில் இடம்பெற்ற சுஜாதா ஜயவர்த் தன நினைவுக் கருத்தரங்கில் கொழும்பு நகரின் அபவிருத்தித் திட்டம் என்ற தொனிப்பொருளில் உரையாற்றும் போதே பாதுகாப்பு செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு நகரில் சட்டவிரோத குடியிருப்புக்களில் வாழும் மக்களுக்கு கொழும்பு நகருக்குள்ளேயே அடிப்படை வசதிகளுடனான தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்படும். சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வீடுகளில் சுமார் 70 ஆயிரம் குடும்பங்கள் வசிக்கின்றன. இதனால் நகரில் பெரும் நெருக்கடிகள் தோன்றியுள்ளன.

இந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை நகரிலேயே தேடிக் கொள்கின்றனர். எனவே இவர்களை நகரிலிருந்து அப்புறப் படுத்த முடியாது.

எதிர்வரும் 2 வருடகாலப் பகுதிக்குள் 30 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்தோடு நகரில் உள்ள அரசாங்க அலுவலகங்கள் அனைத்தும் பத்தரமுல்லையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் செத்சிரிபாய இரண்டாம் கட்டடத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

(த)

# கிளிநொச்சி, மன்னார் பகுதிகளில் அதிகளவான வெள்ளப் பாதிப்பு

கொழும்பு,டிச.07

நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் 20, 336 குடும்பங்களைச் சேர்ந்த 62, 068 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இருவர் உயிரிழந்துதாகவும் தெரிவிக்கப்பட்டது. 188 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 1237 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 6,244 பேர் 56 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதைவிடக் கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளானவர்களைத் தங்கவைப்பதற்காக 19 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அம்பாந்தோட்டை, நுவரெலியா, புத்தளம், கம்பஹா, கண்டி, வவுனியா, ஆகிய மாவட்டங்களிலும் மேலதிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய மழை வெள்ளத்தினால் கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களிலேயே அதிக குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் கிளிநொச்சியில் 3,330 குடும்பங்களும், மன்னாரின் 7,533 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இதைவிட அம்பாந் தோட்டையில் 830 குடும் பங்களும், குருநாகலையில் 194 குடும்பங்களும் கண்டி யில் 78 குடும்பங்களும் புத்தளத் தில் 1,176 குடும்பங்களும், கம் பஹாவில் 2,225 குடும்பங்களும் வவுனியாவில் 1,218 குடும்பங்களும், யாழ்ப்பாணத்தில் 1,405 குடும்பங்களும் முல்லைத் தீவில் 1,120 குடும்பங்களும் பாதிக் கபட்டுள்ளதாக அனர்த்த முகா மைத்துவ நிலையம் மேலும் தெரிவித்தது.

(க)

# போக்குவரத்துச் சபைக்கு புதிதாக ஆயிரம் பஸ்கள்!

கொழும்பு, டிசெ. 07

இலங்கைப் போக்குவரத்து சபையின் வருமானத்தை அதிகரிக்கச் செய்யவும் மேலும் 1000 பஸ்களைப் புதிதாக சேவையில் ஈடுபடுத்தவும் திட்டமிட்டுள்ளத்ாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

அதற்காகச் சபைக்குச் சிறந்த இலாபத்தை ஈட்டுவதற்கு சபையின் ஊழியர்கள் செயற்பட வேண்டும். அவ்வாறாயின் அவர்களது வருமானத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் குறிப்பட்டார்.

அதற்கமைய இலங்கைப் போக்குவரத்து சபை ஊழியர்களின் வருமானத்தை அடுத்த வருடம் முதல் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் தொவித்தார்.

சேதமடைந்தநிலையில் இருந்து புதுப்பிக்கப்பட்ட 37 பஸ்களை தங்கல்லை பஸ் நிலையத்திற்கு கையளித்து உரையாற்றும்போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 6 ஆயிரம் பஸ்கள் தற்போது இயங்கி வருகின்றன.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்.




மானிப்பாய்
ப.தெ.வ.அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் கணக்காளராகப் பணிபுரியும்

### திருமதி தவம் கிருபாகரன்

அவர்கள் மனித உரிமைச் சங்கத்தின் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். பொது ஊழியர் நலன்புரி சங்கத்தின் உப தலைவரான இவர் மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று இறையருளால் சிறப்புடன் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

*ஊழியர் நலன்புரி சங்கம்,*
*பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம், மானிப்பாய்.*

## ஒட்டகப்புலம் புனித அமல உற்பவ மாதா ஆலயப் பெருவிழா



21 ஆண்டுகளுக்குப் பின் (05.12.2010) அன்று கொடியேற்றத்துடன் திரிதின ஆராதனைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. இன்று (07.12.2010.) மாலை 4 மணிக்கு திருச்செப மாலையுடன் நற் கருணை வழிபாடும், நாளை (08.12.2010) காலை 8.30 மணிக்கு ஆலயப் பெருவிழாவும் நடைபெறும்.
மரியாயின் பக்தர்கள் அனைவரும் வருக!
அன்னையின் ஆசீரை நிறைவாகப் பெறுக.

பங்குத் தந்தையும்,
பங்கு மக்களும்.

*குறிப்பு யாழ்ப்பாணத்திலிருந்து (சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயம் அருகில்) காலை 6.30 மணிக்கு போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.*

JOB Skills எந்த வேலையில் சேர்வதற்குமான ஆளுமை விருத்தியுடன் கூடிய தொழில் பயிற்சி

"Certified Medical Assistant" (An US Curriculum)

மருத்துவத்துறையில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்கத் தகுதியானவர்களிடமிருந்து ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வைத்திய சாலைகளில் உடனடி வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிநெறியை லாவா வைத்தியசாலையில் சர்வதேச கல்வித்திட்டத்திற்கு அமைவாகத் தகுதியான வைத்திய விரிவுரையாளர்கள் மூலம் பெற்றிடுங்கள்.

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு02)

CMA US Curriculum

கல்வித்தகமை: G.C.E O/L நாலு பாடங்களில் சித்தி
காலம் : 6 மாதங்கள்(உள்ளகப்பயிற்சியுடன்)
தெரிவு : நேர்முகப்பரீட்சை மூலம் அனுமதி.

யாழ் வைத்தியசாலை வைத்தியர்களால் விரிவுரைகளும் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்.

விபரங்களை இணையத்தில் பார்வையிடலாம்.www.kugroup.info
Call: 0777302882
உள்ளக பயிற்சி வழங்குவோர்:
Lava Hospitals
Quality Assured
City & Guilds Qualified

Knowledge Universe®
Malaysian College of Business and IT
Tel: 0777302882 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info




## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், டிசெ.07

யாழ்.வண்ணார்பண்ணை, அரசடி வீதி, இந்துக் கல்லூரி ஒழுங்கையில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் கோயில் மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு இடம்பெறும்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (ஒ)

## இராமாவில் முகாமில் சட்ட விரோத மின்சாரம்

தென்மராட்சி, டிசெ.7

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் உள்ள பல வீடுகளில் சட்ட விரோதமாக மின்சாரம் பெறப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

நிலையத்தைச் சுற்றிப் பொருத்தப்பட்டுள்ள மின் கம்பங்களிலிருந்தே இவ்வாறு சட்ட விரோதமாக மின்சாரம் பெறப்படுகின்றது.

எனினும் தற்போது அங்குள்ள நிலையில் இத்தகைய சட்ட விரோதமாக மின்சாரம் பெறப்படுவது பல உயிர்களைக் காவு கொள்ளலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டது.

எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-207)

## 2011 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியத் திகதிகள்

தென்மராட்சி, டிசெ.7

2011 ஆம் வருடத்துக்குரிய ஓய்வூதிய திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் ஓய்வூதிய திகதிகள் வருமாறு:-

ஜனவரி - 10, பெப்ரவரி - 10, மார்ச் - 10, ஏப்ரல் - 07, மே - 10, ஜூன் - 09, ஜூலை - 08, ஓகஸ்ட் - 11, செப்ரெம்பர் - 08, ஒக்ரோபர் - 06, நவம்பர் - 09, டிசெம்பர் - 08 (ஒ-207)

## பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வார நிகழ்வுகள்

தென்மராட்சி, டிசெ.7

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தையொட்டி தென்மராட்சி பிரதேச செயலகத்தின் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் விழிப்புணர்வு கருத்துரைகளை யாழ். போதனா வைத்தியசாலை உளநல வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சா.சிவயோகன், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் சட்டத்தரணி செல்வி ம.கோசலை ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நிகழ்வில்பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பான விழிப்புணர்வு நாடக ஆற்றுகையும், குறும்படக் காட்சியும் இடம்பெறும். (ஒ-207)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 1950 | 2009 |
| ★ | ★ |
| 02 | 12 |
| ★ | ★ |
| 08 | 07 |

### அமரர் முருகன் யோகநாதன்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ வைத்த
தெய்வமே!" அப்பா
ஆண்டொன்று ஆனது அப்பா
உங்கள் பாசமுகம் பார்த்து
எம் நினைவு நீங்கும் வரை
உம் நினைவு எம்மைவிட்டு அகலாது ஐயா?

உம் நினைவால் வாடும்:
*12/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.* மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லப்பா மாமாங்கம்



கொல்லங்கட்டி மேற்கு தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், கொட்டடி பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பா மாமாங்கம் நேற்று (06.12.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும், ராதா (லண்டன்), ஜெயராணி, மல்லிகாதேவி ஜெகநாதன் (இ.மி.ச) காலஞ்சென்ற காத்தவராயர் மற்றும் பத்மநாதன் (சவுதி), ரவீந்திரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஸ்பராணி, காலஞ்சென்ற ரட்ணசிங்கம், மற்றும் மகாலிங்கம், சிவகௌரி, கனகாம்பிகை, இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சசிகலா (சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம்), இலக்ஸ்மணன் அனுசியா (கால்நடை வளர்ப்பு கூட்டறவுச் சங்கம், மல்லாகம்), ரமணன், ராகுலன், அபிராமி, கஜானனி, பிரசன்னா, மயூரன், கலைவாணி, திவாணி, கிரீசன், பிரசாந், கிரிசாந், கஜானன், கஜீபன், கஜானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி வடக்கு கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பூதரா கோயிலடி, கொட்டடி, பன்னாலை, தெல்லிப்பழை.* தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி இலட்சுமிப்பிள்ளை சோமசுந்தரம்



தும்பளையைப் பிறப்பிடமாகவும் கெற்பேலியை நிரந்தர வசிப்பிடமாகவும் விடத்தற்பளையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை சோமசுந்தரம் நேற்று (06.12.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் சோமசுந்தரத்தின் (முன்னாள் முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்) அன்பு மனைவியும் சிவகுமார் (கனடா), ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதர்சினி (கனடா), சிவசோதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சதுஷ், லதுஷா, நிதுஷ், ஜெனுஸ், ஜெசோ ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் தம்பிப்பிள்ளை இராசேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கனகசிங்கம் சிவயோகம், தம்பிப்பிள்ளை பத்மநாதன், தம்பிப்பிள்ளை பரஞ்சோதி ஆகியோரின் சகோதரியும் சிவநேசன் (டென்மார்க்), சிவனேஸ்வரி (ஆசிரியை, யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை), ஞானேஸ்வரன் (கனடா), கேதீஸ்வரன் (அமெரிக்கா) ஆகியோரின் பெரியம்மாவும் பாமினி (லண்டன்), நிருஜா (ஆசிரியை, யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), தர்சன் (ஜேர்மனி), கீர்த்தனா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு விடத்தற்பளையிலுள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சம்பாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விடத்தற்பளை, மிருசுவில்.* தகவல்:
*தொடர்பு இல. 0779753318, 0776264272* குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அனர்த்தங்களும் அரச இயந்திரமும்

நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில், பிரதேசங்களில் கடந்த ஒருவாரமாக அடை மழை பெய்து வருகிறது. அதனால் ஆங்காங்கே உள்ள நீர்த்தேங்கங்கள், ஆறுகள், குளங்கள் அணைக்கட்டுகள் ஆகியவற்றில் நீர் நிறைந்து வெள்ளமாகப் பாய்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ள குளங்கள் நிரம்பி வெள்ளம் வழிந்தோடுவதால் தாழ்ந்த பகுதிகளில் வசித்த பல குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாடசாலைகளிலும் வேறு இடங்களிலும் சென்று தங்கியுள்ளன.

வன்னி மாவட்டத்தில் இரணைமடுக் குளம், முத்தையன்கட்டுக் குளம் ஆகிய பெரும் நீர்த்தேங்கங்களின் வான் கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன. மன்னாரில் கடல் அலைகள் எழுந்து நிலப்பகுதியில் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பெரு வெள்ளம் மீளக் குடியமர்ந்த மக்களை சோதனை மேல் சோதனையாக வாட்டி வதைக்கிறது.

கிழக்கில், அம்பாறை மாவட்டத்தில் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கரையோரப் பகுதிகளில் பெரு வெள்ளம் ஏற்பட்டு மக்களைக் குடியெழுப்பி உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மலையகத்தில் மிகப் பெரிய நீர்த்தேக்கமான விக்ரோறியா அணையின் வான் கதவுகள் பல வருடங்களுக்குப் பிறகு தானாகத் திறந்து பெரு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

தெற்கில் காலி மாவட்டத்தில் அம்பாந்தோட்டை உட்பட பல இடங்களில் வெள்ளப்பெருக்கு உண்டாகியுள்ளது.

மேற்கிலும் குருநாகல், புத்தளம், கம்பஹா உட்பட பல இடங்களிலும் கொழும்பின் தாழ்ந்த பிரதேசங்களிலும் பெரு வெள்ளம் பாய்ந்தோடுகிறது.

மொத்தத்தில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மழை கொட்டித் தீர்த்து மக்களைச் சோதித்துள்ளது. நாடு முழுவதிலும் சுமார் 70 ஆயிரம் மக்கள் ஞாயிற்றுக்கிழமை வரை அகதிகளாக மாறியுள்ளனர். சுமார் 30 ஆயிரம் குடும்பங்கள் தங்கள் வீடுகளில் இருந்து இடம்பெயர நேர்ந்துள்ளது. அவர்களுக்கென 60 க்கும் மேற்பட்ட முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மழை தாராள மனதுடன் இம்மாதம் முடிந்து புது வருடத்திலும்(2011 இலும் தொடரும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறுகிறது) எதிர்வு கூறல் மெய்த்தால் இன்னும் பெரும் எண்ணிக்கையானோர் இடம்பெயரவும், எண்ணற்ற பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கவும் நேரிடலாம். இதனைக் கருத்திற்கொண்டு, எச்சரிக்கையாக எடுத்து, இடர்முகாமைத்துவ அமைச்சும் அதன் அங்கங்களும், அந்தந்த மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் அவர்களின் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்களும் செயற்படத் தயாராக வேண்டும்.

இயற்கை காலத்துக்குக் காலம் மனிதனைப் பல்வேறு வகைகளில் சோதிப்பதுண்டு. ஒரு காலத்தில் பலத்த தொடர்மழையாலும், இன்னொரு காலத்தில் தாங்கொணாக் கடும் வெப்பத்தாலும், பூகம்பம், எரிமலை, ஆழிப்பேரலை என்று வந்து பல வகையான பேரழிவுகளைத் தந்து மனிதர்களைச் சோதிக்கிறது, இன்னலுற வைக்கிறது.

விஞ்ஞானம் பல விந்தைகளைச் செய்தபோதிலும், பல தடங்களில், இயற்கையின் பல்வகைப் பரிமாணங்களை மனிதனால் மாற்றமுடியவில்லை; வெல்ல முடியவில்லை. அதனால் மனிதன் தனது தோல்வியை ஏற்றுக்கொண்டு இயற்கையின் நியதி என்று பெயர்சூட்டித் தப்பித்துக்கொள்கின்றான். நிற்க

மொத்தத்தில் வருண பகவான் பாரபட்சம் பாராது, எமது நாட்டின் நான்கு திசைகளிலும் 'கருணை மழை' பொழிந்திருக்கிறார். வானம் கிழிந்து கொட்டோ கொட்டெனத் தரும் நீரைத் தக்கவாறு பயன்படுத்தும் அளவுக்கு, அதனை விவசாய த்துக்கும் குடிதண்ணீர்த் தேவைக்குச் சேமித்து வைக்கும் அளவுக்கு தொழில்நுட்பம் இன்னமும் எமது நாட்டில் வளர்ச்சி காணவில்லை.

வானம் வாய்திறந்து தரும் தண்ணீரை, அது வெள்ளமாக மாறி மக்களுக்கு கஷ்டம் தராது தடுத்து அவர்களின் தேவைகளுக்கும் சேமித்துவைக்கக் கூடிய நவீன விஞ்ஞானம் தரும் மார்க்கங்களும் இங்கு அறிமுகமாகவில்லை.

அது மட்டுமன்றி, இயற்கையின் சீற்றங்களிலிருந்து நாட்டின் பிரசைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகள் தானும் திட்டமிட்டமுறையில் தக்கவாறு திருப்தி தரும் வகையில் வகுக்கப்படவில்லை. மக்களால் தெரிவு செய்யப்படும் அரசாங்கங்களும் மக்கள் பிரதிநிதிகளும் மக்களின் வரிப்பணத்தில் வாழ்க்கை நடத்தும் அதிகாரிகளும்(அரசாங்கத்துக்குச் ''சேவை'' செய்து தமது தனிப்பட்ட வாழ்க்கையை மேம்படுத்துவதிலேயே இவர்கள் அதீத கவனம் செலுத்துவதுண்டு. தாங்கள் மக்கள் சேவகர் என்ற நினைப்பே மிகப் பெரும்பான்மையோருக்கு இருப்பதில்லை) இதில் மனங்கொண்டு செயற்பட்டால், முறைக்கு முறை இயற்கை அனர்த்தங்களால் மக்களுக்கு ஏற்படும் இழப்புகளை, பாதிப்புகளை, நிர்க்கதி நிலையை அரைவாசியேனும் குறைக்க முடியும்.

அந்த வழிநோக்கிய செயற்பாடுகள் சாத்தியமா என்பது, எப்போதும் கேள்விக் குறியாகவே இந்த நாட்டில் இருக்கப்போகிறது!

# வலி.வடக்கில் மீளக் குடியேறியோருக்கு காணி துப்புரவு செய்ய கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ.07

வலி - வடக்கில் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் தமது காணிகளைத் துப்பரவு செய்வதற்கு பரப்பொன்றுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று வலி - வடக்குப் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய பகுதிகளில் மீள்குடியமர்வுக்கு மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் மீள் குடியமர்வுக்கு இதுவரை 970 குடும் பங்கள் பதிவு செய்துள்ளனர்.

அந்த மக்கள் தமது காணிகளைத் துப்பரவு செய்வதற்கு பரப்பொன்றுக்கு ஆயிரம் ரூபா வழங்குதவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காணிகளைத் துப்பரவு செய்ததன் பின்னர் கொடுப்பனவு வழங் கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

## பரீட்சை முடிவுகளை கூடிய விரைவில் வெளியிட திணைக்களம் முயற்சி

கொழும்பு, டிசெ.7

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்கள அதிகாரியொருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

பரீட்சை முடிவுகளை நேற்று வெளியிட ஏற்பாடாகியிருந்தது என்றும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும் முடிவுகளைக் கூடிய விரைவில் வெளியிடுவதற்கான முயற்சி முழு மூச்சில் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

## பண்ணைப் பாலத்தின் நிலையால் தீவுக்கான பஸ்சேவை ஸ்தம்பிதம்

### ஆனால் தனியார் சேவை இடம்பெற்றது



யாழ்ப்பாணம்,டிசெ.7

பண்ணைப் பாலம் சேதமுற்றதை அடுத்து தீவுப்பகுதிக்கான இ.போ.ச பஸ் போக்குவரத்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனால் யாழ்.பஸ் நிலையத்தில் தீவுப் பகுதிக்கான பஸ் தரிப்பிடங்கள் நேற்று வெறிச் சோடிக் காணப்பட்டன.

இதே சமயம் நேற்றைய தினம் தனியார் சேவைகள் இடம் பெற்றன. பெரிய பஸ்களும் இச்சேவையில் ஈடுபட்டிருந்தன. தனியார் பஸ் சேவைகள், சிறிய வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பன பண்ணை வீதியால் போக்குவரத்தில் ஈடுபட்டன. ஆசிரியர்கள், அரச, வங்கி ஊழியர்களது பஸ்களும் சேவையில் ஈடுபட்டன. (ம-7)

## அனலைதீவு - ஊர்காவற்றுறைக்கான போக்குவரத்தில் நேரமாற்றம் தேவை

### பயணிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.7

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளமையால் அனலைதீவு - ஊர்காவற்றுறைக்கான கடல் போக்குவரத்துச் சேவையில் மாற்றம் செய்ய வேண்டும் என அனலைதீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினமும் மூன்று சேவைகள் அனலை தீவுக்கும் ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் துறைமுகத்துக்குமிடையில் நடைபெறுகின்றன.

காலையில் 7 மணி, 8 மணி, 9 மணிக்கு அனலைத்தீவில் இருந்து புறப்படும் படகுகள் பிற்பகல் 2 மணி, 3மணி, 4.30 மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து அனலை தீவுக்குச் செல்கின்றன.

மழை, காற்று என்பன பலமாக உள்ள நிலையில் பிற்பகல் ஊர்காவற்றுறையில் இருந்து புறப்படும் படகுகளின் நேரம் பிற்பகல் ஒரு மணி, 2 மணி, 3.30 மணியாக மாற்றப்பட வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர்.

இந்த நேர மாற்றம் குறித்து படகு உரிமையாளர்களும் தமது ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ம-7)

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 22 | | 08.12.2010 புதன்கிழமை |
| திதி: | : | திருதியை மு.இ. 11.58 வரை |
| நட்சத்திரம் | : | பூராடம் மு.இ.08.48 வரை |
| சுபநேரம் | : | 04.47-06.17 வரை |
| ராகுகாலம் | : | 12.14-01.47 வரை |

## இதழியல் டிப்ளோமா எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.07

முழுநேர இருவருட டிப்ளோமா (2010/2012) கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10.30 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஒ)

## கௌரவிப்பு நிகழ்வு

அச்சுவேலி,டிசெ.7

அச்சுவேலி மத்திய கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்ப பிரிவு பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் வே.அரசகேசரி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி வே. பாலசுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.சுவாமிநாதனும் கலந்து கொள்கின்றனர். (ஐ-11)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.7

வலிகாமம் கல்வி வலயத்தில் அண்மையில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் மூலம் பதவியுயர்வு பெற்ற அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு வலிகாமம் கல்வி வலயத்தில் நடைபெறும் என்று வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம் தெரிவித்துள்ளார்.

அதிபர்களுக்கான கல்விச் சுற்றுலாவுக்கு நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் அதிபர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறும் அவ்வாறு சமுகமளிக்கத் தவறும் பட்சத்தில் பிரதி அதிபர்களை இக் கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## மனித உரிமை தினத்தையொட்டி மாணவர்களிடையே போட்டிகள்

நவாலி,டிசெ.7

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மேற்படி பிரதேச கல்விக்கோட்டப் பாடசாலைகளிடையே கவிதை, கட்டுரை, சித்திரம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

''பாகுபாட்டினை முடிவுக்குக் கொண்டு வருபவர்கள் மனித உரிமை ஆர்வலர்களே'' என்னும் தொனிப் பொருளில் மேற்படி போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, ஆரம்பப் பிரிவு (சித்திரம் மட்டும்) ஆகிய பிரிவுகளாக இடம்பெறவுள்ளன. போட்டிகள் எதிர்வரும் 11ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள மாணவர்களை அன்றைய தினம் பிரதேச செயலகத்துக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கோட்ட மட்டத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்று பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(201-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கையில் வெற்றிகொள்ள எம்முடன் கை கோர்த்துக்கொள்ளுங்கள்

தேசிய லொத்தர் சபையில் தற்போது வெற்றிடங்கள் காணப்படும், கீழ்வரும் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிராம சேவைப் பிரிவு ஆகியவற்றில் சந்தைப்படுத்தும் பிரதிநிதி பதவிக்கான தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோறப்படுகின்றது.

**கவர்ச்சிகரமான கழிவு உயர்ந்த வருமானத்தை ஈட்டித்தரும்**
**எமது விற்பனை இலக்குகளை வென்று வியாபார உலகின் பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளுங்கள்**
**மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட மேற்பார்வை உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளவும்.**

**நுவரெலியா மாவட்டம்**
1 அம்பகமுவ கோறளே
2 ஹங்குராங்கெத
3 கொத்மலே
4 நுவரெலியா
5 வலப்பனை
மேற்பார்வை உத்தியோகத்தர் ப்ரஷான் - 0114378872

**புத்தளம் மாவட்டம்**
1 ஆனமடுவ
2 ஆரச்சிகட்டுவ
3 சிலாபம்
4 தங்கொடுவ
5 கல்பிட்டிய
6 கருவலகஸ்வெவ
7 மஹகும்பு
8 மஹாகும்புக்கடவல
9 மஹவெவ
10 முந்தலம
11 நாத்தண்டிய
12 நவகத்தேகம
13 பல்லம
14 வனாதவில்லுவ
15 வென்னப்புவ
மேற்பார்வை உத்தியோகத்தர் உபேகா - 0114378873

**பதுளை மாவட்டம்**
1 பதுளை
2 பண்டாரவெல
3 எல்ல
4 ஹல்துமுல்லை
5 ஹாலிஎல
6 ஹபுதலே
7 கந்தகெடிய
8 லுணுகல
9 மையாங்கனை
10 மீகஹகிவுல
11 பஸ்ஸர
12 ரிதீமாலியத்த
13 சொரணாதொட்ட
14 ஊவ பரணகம
15 வெலிமட
மேற்பார்வை உத்தியோகத்தர் துஷாஞ்சலி - 0114378885

**கேகாலை மாவட்டம்**
1 அரநாயக்க
2 புலத்கொஹுபிட்டிய
3 தெஹியோவிட்ட
4 தெரணியகல
5 கலிகமுவ
6 கேகாலை
7 மாவனெல்ல
8 ரம்புக்கனை
9 ருவன்வெல்ல
10 வரகாபொல
11 யட்டியந்தொட்ட
மேற்பார்வை உத்தியோகத்தர் ஜீவனி - 0114607065

1 ஏறாவூர்
2 கழுதன்குடி
3 கோறளை பத்து தெற்கு
4 கோறளை பத்து மேற்கு
5 மண்முனை வடக்கு
6 மண்முனை பத்து
7 மண்முனை தெற்கு மற்றும் எருவில்பத்து
8 மண்முனை தெ.மே
9 மண்முனை மேற்கு
10 பொறதீவு பத்து
மேற்பார்வை உத்தியோகத்தர் அனுர - 0114378868

**அம்பாறை மாவட்டம்**
**அட்டாளச்சேனை**
1 அட்டாளச்சேனை 01
2 அட்டாளச்சேனை 02
3 அட்டாளச்சேனை 03
4 அட்டாளச்சேனை 04
5 அட்டாளச்சேனை 05
6 அட்டாளச்சேனை 06
7 அட்டாளச்சேனை 07
8 அட்டாளச்சேனை 08
9 அட்டாளச்சேனை 09
10 அட்டாளச்சேனை 10
11 அட்டாளச்சேனை 11
12 அட்டாளச்சேனை 12
13 அட்டாளச்சேனை 13
14 அட்டாளச்சேனை 14
15 அட்டாளச்சேனை 15
16 அட்டாளச்சேனை 16
17 அட்டாளச்சேனை 17
18 ஒலுவில் 01
19 ஒலுவில் 02
20 ஒலுவில் 03
21 ஒலுவில் 04
22 ஒலுவில் 05
23 ஒலுவில் 06
24 ஒலுவில் 07
25 பாலமுனை 01
26 பாலமுனை 02
27 பாலமுனை 03
28 பாலமுனை 04
29 பாலமுனை 05
30 பாலமுனை 06

**அம்பாறை மாவட்டம்**
**அக்கரைபத்து**
1 அலிம் நகர்
2 ஈசன் காணிச் சீமை
3 கருன்கொடித் தீவு
4 கருன்கொடித் தீவு 02
5 கருன்கொடித் தீவு 03
6 கருன்கொடித் தீவு 04
7 கருன்கொடித் தீவு 05
8 கருன்கொடித் தீவு 06
9 கருன்கொடித் தீவு 07
10 கருன்கொடித் தீவு 08
11 கருன்கொடித் தீவு 09
12 கருன்கொடித் தீவு 10
13 கருன்கொடித் தீவு 11
14 கருன்கொடித் தீவு 12
15 கருன்கொடித் தீவு 13
16 கருன்கொடித் தீவு 14
17 கருன்கொடித் தீவு 15
18 கருன்கொடித் தீவு 16
19 கருன்கொடித் தீவு 17
20 கருன்கொடித் தீவு 18
21 கருன்கொடித் தீவு 19
22 கருன்கொடித் தீவு 20
23 பட்டியடிப்பிட்டி
24 பள்ளிக்குடியிருப்பு 01
25 பள்ளிக்குடியிருப்பு 02
26 நகர் பிரிவு 01
27 நகர பிரிவு 02
28 நகர பிரிவு 03
29 நகர பிரிவு 04
30 நகர பிரிவு 05

**அம்பாறை மாவட்டம்**
**ஆலையடிவேம்பு**
1 அக்கறைபத்து 7/1
2 அக்கறைபத்து 7/2
3 அக்கறைபத்து 7/3
4 அக்கறைபத்து 7/4
5 அக்கறைபத்து 8/1
6 அக்கறைபத்து 8/2
7 அக்கறைபத்து 8/3
8 அக்கறைபத்து 9
9 ஆலையடிவேம்பு
10 அலிகம்பை
11 கண்ணகி கிராமம் 01
12 கண்ணகி கிராமம் 02
13 கோளாவில் 01
14 கோளாவில் 02
15 கோளாவில் 03
16 நாவற்காடு
17 பனங்காடு
18 சின்னப் பனங்காடு
19 சின்னப் பனங்காடு
20 சின்ன முகத்துவாரம்
21 வச்சிக்குடா

**அம்பாறை மாவட்டம்**
**அம்பாறை**
1 அம்பகஹவெல
2 அம்பமல்தலாவ
3 தம்பேதலாவ
4 கொடவெஹெர
5 நாமல்ஓய ii
6 நாமல்ஓய iii
7 நாமல்தலாவ
8 வாவின்ன தெற்கு

**அம்பாறை மாவட்டம்**
**தமன**
1 18A ஜனபதய
2 அலஹேன
3 பக்மிட்டியாவ
4 தேவாலஹிந்த
5 திவியாகல
6 கல்கந்த
7 ஹெங்கம்புர
8 ஹிந்தகமுகம
9 கழுகொல்ல
10 கீனவத்த
11 கிவுலேகம
12 குமன
13 மொரகஹபல்லம
14 பல்லன்ஓய
15 திம்பிரிகொல்ல
16 வெஹெரகல

**அம்பாறை மாவட்டம்**
**தெஹிஅத்தகண்டிய**
1 இஹலகம
2 பரணகம
3 ரிதீல
4 சதுமடுல்ல
5 செவனகம
6 வெவ்மெதகம

**அம்பாறை மாவட்டம்**
**ஏரகம**
1 இறக்காமம் 01
2 இறக்காமம் 02
3 இறக்காமம் 03
4 இறக்காமம் 04
5 இறக்காமம் 05
6 இறக்காமம் 06
7 இறக்காமம் 07
8 இறக்காமம் 08
9 இறக்காமம் 09
10 வரிபதன்சேனை 01
11 வரிபதன்சேனை 02
12 வரிபதன்சேனை 03

**அம்பாறை மாவட்டம்**
**கல்முனை**
1 இஸ்லாமாபாத் மற்றும் கல்முனை நகரம்
2 கல்முனைகுடி 05
3 கல்முனைகுடி 06
4 கல்முனைகுடி 07
5 கல்முனைகுடி 08
6 கல்முனைகுடி 09
7 கல்முனைகுடி 10
8 கல்முனைகுடி 11
9 கல்முனைகுடி 12
10 கல்முனைகுடி 13
11 கல்முனைகுடி 14
12 மருதமுனை 05
13 மருதமுனை 06
14 நட்பிட்டிமுனை 01
15 நட்பிட்டிமுனை 02
16 நட்பிட்டிமுனை 03
17 நட்பிட்டிமுனை 03
18 நட்பிட்டிமுனை 01
19 நட்பிட்டிமுனை 02
20 நட்பிட்டிமுனை 04
21 நட்பிட்டிமுனை 05
22 பாண்டிருப்பு 01A
23 பாண்டிருப்பு 01B
24 பாண்டிருப்பு 01C
25 பாண்டிருப்பு 02
26 பாண்டிருப்பு 02A
27 பாண்டிருப்பு 02B
28 பாண்டிருப்பு 02C
29 பெரியநீலாவணை 02
30 பெரியநீலாவணை முஸ்லிம் பகுதி 01
31 பெரியநீலாவணை முஸ்லிம் பகுதி 02
32 சேனைக்குடியிருப்பு 01
33 சேனைக்குடியிருப்பு 01A
34 சேனைக்குடியிருப்பு 01B

**அம்பாறை மாவட்டம்**
**காரைதீவு**
1 காரைதீவு 03
2 காரைதீவு 04
3 காரைதீவு 05
4 காரைதீவு 06
5 காரைதீவு 07
6 காரைதீவு 08
7 காரைதீவு 09
8 காரைதீவு 10
9 காரைதீவு 11
10 காரைதீவு 12
11 மாவடிபள்ளி கிழக்கு
12 மாவடிபள்ளி மேற்கு

**அம்பாறை மாவட்டம்**
**லாஹுகல**
1 தேவாலகொட
2 ஹுலன்னுகே
3 ஹுலன்னுகே
4 கந்தஹிந்தகம
5 லாஹுகல
6 பாணம மத்திமம்
7 பாணம தெற்கு
8 பாணம வடக்கு
9 பாணம மேற்கு
10 பன்சல்கொட
11 பெரணி லாஹுகல
11 ஷாஸ்த்ரவெல

**அம்பாறை மாவட்டம்**
**மஹாஓய**
1 அழுத்வெவ
2 பெடிரெக்க
3 போகமுயாய
4 இத்தபொல
5 கெகிரிஹேன
6 கெலவின்ன
7 குடாஹராஸ்கல
8 லாஹுகல

**அம்பாறை மாவட்டம்**
**நாவிதன்வெளி**
1 அன்னமலை 01
2 அன்னமலை 02
3 அன்னமலை 03
4 மத்திய முகாம் 01
5 மத்திய முகாம் 02
6 மத்திய முகாம் 03
7 மத்திய முகாம் 04
8 மத்திய முகாம் 05
9 மத்திய முகாம் 06
10 சாளம்பக்கேணி 01
11 சாளம்பக்கேணி 02
12 சாளம்பக்கேணி 03
13 சாளம்பக்கேணி 04
14 சாளம்பக்கேணி 05
15 சவலக்காடு
16 நாவிதன்வெளி 01
17 நாவிதன்வெளி 02
18 சொறிகல்முனை 01
19 சொறிகல்முனை 02
20 சொறிகல்முனை 03

**அம்பாறை மாவட்டம்**
**நிந்தவூர்**
1 நிந்தவூர் 02
2 நிந்தவூர் 03
3 நிந்தவூர் 04
4 நிந்தவூர் 05
5 நிந்தவூர் 06
6 நிந்தவூர் 07
7 நிந்தவூர் 08
8 நிந்தவூர் 09
9 நிந்தவூர் 10
10 நிந்தவூர் 11
11 நிந்தவூர் 12
12 நிந்தவூர் 13
13 நிந்தவூர் 14
14 நிந்தவூர் 15
15 நிந்தவூர் 16
16 நிந்தவூர் 17
17 நிந்தவூர் 18
18 நிந்தவூர் 19
19 நிந்தவூர் 20
20 நிந்தவூர் 21
21 நிந்தவூர் 22
22 நிந்தவூர் 23
23 நிந்தவூர் 24
24 நிந்தவூர் 25

**அம்பாறை மாவட்டம்**
**பதியதலாவ**
1 தொரகும்புர
2 கல்ஓட
3 ஹாகம்வெல
4 ஹேமாலிகே
5 கெஹெலுல்ல
6 கிறவான
7 கோலமன்தலாவ
8 கோமான
9 மாரன்கல
10 மிரிஸ்வத்த
11 மொரதெனிய
12 பலாதுருவெல
13 பல்லேகம
14 புலுன்கஸ்முல்ல
15 சரணகம
16 தலபிட்டஓய
17 தலபிட்டஓய
18 உணான

**அம்பாறை மாவட்டம்**
**பொத்துவில்**
1 கனேஹர் கிராமம்
2 ஹிதயபுரம் 1
3 ஹிதயபுரம் 2
4 ஹிஜ்ரா நகர்
5 இன்ஸ்பெக்டர் இஸ்ஸாம்
6 ஜலால்தீன் ஸ்குயார்
7 களப்புக் கட்டு
8 கோமாரி 01
9 கோமாரி 02
10 குண்டுமடு
11 பாக்கியவத்தை 1
12 பாக்கியவத்தை 2
13 பஸ்ஸரிச்சேனை
14 ரஸாக் மௌலானா நகர்
15 சங்கமன்கந்தை
16 சர்வோதயபுரம்
17 சின்னப் புதுக்குடியிருப்பு
18 சின்ன உல்லை
19 வட்டிவேலி
20 விக்டர் எஸ்டேட் 1
21 விக்டர் எஸ்டேட் 2

**அம்பாறை மாவட்டம்**
**சாய்ந்தமருது**
1 சாய்ந்தமருது 1
2 சாய்ந்தமருது 10
3 சாய்ந்தமருது 11
4 சாய்ந்தமருது 12
5 சாய்ந்தமருது 13
6 சாய்ந்தமருது 14
7 சாய்ந்தமருது 15
8 சாய்ந்தமருது 16
9 சாய்ந்தமருது 17
10 சாய்ந்தமருது 2
11 சாய்ந்தமருது 3
12 சாய்ந்தமருது 4
13 சாய்ந்தமருது 5
14 சாய்ந்தமருது 6
15 சாய்ந்தமருது 7
16 சாய்ந்தமருது 8
17 சாய்ந்தமருது 9

**அம்பாறை மாவட்டம்**
**சம்மாந்துறை**
1 பிளொக் J கிழக்கு 01
2 பிளொக் J கிழக்கு 01
3 பிளொக் J கிழக்கு 02
4 பிளொக் J கிழக்கு 03
5 பிளொக் J மேற்கு 01
6 பிளொக் J மேற்கு 02
7 கல்லரிச்சல் 02
8 கல்லரிச்சல் 03
9 கருவாட்டுகல் 1
10 கருவாட்டுகல் 2
11 கருவாட்டுகல் 3
12 மட்டக்களப்புத்தரவை 1
13 மட்டக்களப்புத்தரவை 2
14 மலையடிக் கிராமம் 1
15 மலையடிக் கிராமம் 2
16 மலையடிக் கிராமம் 3
17 மலையடிக் கிராமம் 4
18 சம்மாந்துறை 9
19 சம்மாந்துறை 10
20 சம்மாந்துறை 11
21 சம்மாந்துறை 12
22 செந்நெல் கிராமம் 01
23 செந்நெல் கிராமம் 02
24 உடங்கா 01
25 உடங்கா 02
26 வலத்தப்பிட்டி 01
27 வலத்தப்பிட்டி 02
28 வீரமுனை 01
29 வீரமுனை 02
30 வீரமுனை 03
31 வீரமுனை 04
32 வீரமுனை 04
33 விழிநாயடி 01
34 விழிநாயடி 02
35 விழிநாயடி 03

**அம்பாறை மாவட்டம்**
**திருக்கோவில்**
1 கஞ்சிக்குடிச்சாறு
2 கஞ்சிரங்குடா
3 சங்கமம்
4 சங்கமன் கிராமம்
5 தம்பிழுவில் 1
6 தம்பிழுவில் 1 கிழக்கு
7 தம்பிழுவில் 1 தெற்கு
8 தம்பிழுவில் 1 மேற்கு
9 தம்பிழுவில் 2
10 தம்பிழுவில் 2 கிழக்கு
11 தம்பிழுவில் 2 வடக்கு
12 தம்பிழுவில் 2 மேற்கு
13 தண்டியடி
14 தம்பவேணாபுரம்
15 விஜயநகபுரம் 1
16 விஜயநகபுரம் 2
17 விஜயநகபுரம் 3
18 விஜயநகபுரம் 4

**அம்பாறை மாவட்டம்**
**உஹன**
1 அபயபுர
2 பண்டாரதுவ
3 பொக்கபெத்த
4 கலபிட்டகல கிழக்கு
5 கலபிட்டகல மேற்கு
6 கெமுனுபுர
7 கஹபட்டகஸ்பாய
8 கொஹொம்பன
9 கொத்மலே
10 குமுதுகம
11 லதுகல
12 மஹகண்டிய
13 மாயாதுன்ன
14 ரஜகம வடக்கு
15 ரஜகம தெற்கு
16 ருஹுனுகம
17 சந்துனபுர
18 சியம்பலவெவ
19 சுஹதகம தெற்கு
20 உஹன திஸ்ஸபுர. கி
21 உஹன திஸ்ஸபுர. மே
22 வெஹெரகம கிழக்கு
23 வெஹெரகம மேற்கு
24 வெலிஹேனகல்ல
மேற்பார்வை உத்தியோகத்தர் அனுர - 0114378868

**திருகோணமலை மாவட்டம்**
1 கோமரன்கடவல
2 கந்தளாய்
3 கின்னியா
4 குச்சவேலி
5 மொறவெவ
6 மூதூர்
7 பதவிசிறீபுர
8 சேருவில
9 தம்பலகாமம்
10 திருகோணமலை
11 வெருகல்
மேற்பார்வை உத்தியோகத்தர் அனுர - 0114378868

**வவுனியா மாவட்டம்**
1 வவுனியா
2 வவுனியா வடக்கு
3 வவுனியா தெற்கு
4 வெங்கல செட்டிகுளம்
மேற்பார்வை உத்தியோகத்தர் தரங்க - 0115638800

**யாழ்ப்பாணம் மாவட்டம்**
1 [illegible]
2 சாவகச்சேரி
3 வடலி
4 யாழ்ப்பாணம்
5 கரவெட்டி
6 கயிட்ஸ்
7 கோப்பாய்
8 மருதன்கேணி
9 நல்லூர்
10 பருத்தித்துறை
11 சண்டிலிப்பாய்
12 தெல்லிப்பலை
13 உடுவில்
14 வேலனை
15 காரைநகர்
மேற்பார்வை உத்தியோகத்தர் தரங்க - 0115638800

**கிளிநொச்சி மாவட்டம்**
**கந்தவளை**

**கிளிநொச்சி மாவட்டம்**
**கராச்சி**
1 அக்கராயன்குளம்
2 கண்டாவளை
3 கிளிநொச்சி
4 பரந்தன்
5 புலியம்பொக்கனை
6 ராமநாதபுரம்
7 தட்டுவன்கொடி
8 தர்மபுரம்
9 உரியன்
10 உருத்ராபுரம்
11 வட்டகச்சி

**கிளிநொச்சி மாவட்டம்**
**பச்சிலைப்பள்ளி**
1 இட்டாவில்
2 கிழாலி
3 கோயில் வயல்
4 முகமாலை
5 முகவில்
6 புலோப்பல்லை
7 சோரன்பற்று

**கிளிநொச்சி மாவட்டம்**
**பூநகரி**
1 செட்டியன்குறிச்சி
2 கிளிநொச்சி மாவட்டம்
3 இரணைதீவு
4 கவுதாரி முனை
5 கவுதாரி முனை
6 கவுதாரி முனை
7 கவுதாரி முனை
8 கொல்லக்குறிச்சி
9 மட்டுவில்நாடு
10 நல்லூர்
11 பல்லவராயன்காடு
12 பொன்னாவெளி
13 பொன்னாவெளி
14 பொன்னாவெளி
15 பொன்னாவெளி
16 பொன்னாவெளி
17 பொன்னாவெளி
18 வலைப்பாடு
மேற்பார்வை உத்தியோகத்தர் தரங்க - 0115638800

**மன்னார் மாவட்டம்**
**மடு**
1 இரணை இலுப்பைக்குளம்
2 காக்கையன் குளம்
3 காக்கையான் குளம்
4 காமடு
5 கீரிசுட்டான்
6 மடு
7 மழுவராயர்கட்டையடம்பன்
8 மாதா கிராமம்
9 பாலம்பிட்டி
10 பண்டிவெட்டுவன்
11 பரசங்குளம்
12 பெரியமுறிப்பு
13 பெரிய-பண்டிவிரிச்சான் கிழக்கு
14 பெரிய-பண்டிவிரிச்சான் மேற்கு
15 பூமலர்ந்தான்
16 தெக்கம்
17 விளாத்திகுளம்

**மன்னார் மாவட்டம்**
**மன்னார்**
1 எழுதூர்
2 எரிழ் நகர்
4 எருக்கலம்பிட்டி கிழக்கு
5 எருக்கலம்பிட்டி வடக்கு
6 எருக்கலம்பிட்டி தெற்கு
7 எருக்கலம்பிட்டி மேற்கு
8 கட்டுக்கரன்குடியிருப்பு
9 கல்லிக்கடைக்காடு
10 மாதோட்டம்
11 மூவர் தெரு
12 நாகதாழ்வு
13 நீலாசேனை
14 ஓலைதொடுவை
15 பள்ளிமுனை கிழக்கு
16 பள்ளிமுனை மேற்கு
17 பணன்கட்டி கொட்டு
18 பணன்கட்டி கொட்டு
19 பரப்பன்கண்டல்
20 பட்டித்தோட்டம்
21 பெரியகடை
22 பெரியகரிசல்
23 பெரியகமம்குளம்
24 பேசாலை வடக்கு
25 பேசாலை தெற்கு
26 பேசாலை மேற்கு
27 புறக்கோட்டை
28 புதுகாமம்
29 புதுக்குடியிருப்பு
30 சவுற்கடு
31 சின்னகடை
32 சிறுதோப்பு
33 பார் - தெற்கு
34 தலைமன்னார் வடக்கு
35 தலைமன்னார் கிழக்கு
36 தலைமன்னார் மேற்கு
37 தலைமன்னார் தெற்கு
38 தலைமன்னார்
39 தாழ்வுப்பாடு
40 தாராபுரம் கிழக்கு
41 தாராபுரம் மேற்கு
42 திருகேதீஸ்வரம்
43 தொட்ட வெளி
44 உப்புகுளம் வடக்கு
45 உப்புகுளம் தெற்கு
46 உயிலங்குளம்
47 உயிர்தரயன்குளம்
48 வன்னமோடை

**மன்னார் மாவட்டம்**
**மந்தை மேற்கு**
1 அடம்பன்
2 ஆல்காட்டி வேலி
3 அந்த குளம்
4 அந்தோனியார்புரம்
5 அத்திமோட்டை
6 இலுப்பைக்கடவை
7 கல்லியடி
8 கன்னாடி
9 கருங்கந்தல்
10 கருங்கந்தல் வன்னாகுளம்
11 கத்தக்குளம்
12 காயாநகர்
13 கூரை
14 கோவில்குளம்
15 மாளிகை திடல்
16 மினுக்கன்
17 நெடுங்கந்தல்
18 பாலைபெருமாள்கட்டு
19 பாலையடி புதுக்குளம்
20 பாலி ஆரு
21 பாலிக்குழி
22 பல்லமடு
23 பாப்பாமோட்டை
24 பறப்புகடந்தன்.கி
25 பறப்புகடந்தன்.மே
26 பெரியமடு கிழக்கு
27 பெரியமடு மேற்கு
28 சொர்ணபுரி
29 தேவம்பிட்டி
30 வட்டகந்தல்
31 வேட்டையர் முறிப்பு
32 வெள்ளாங்குளம்
33 விடத்தல் தீவு மத்திமம்
34 விடத்தல் தீவு கிழக்கு
35 விடத்தல் தீவு வடக்கு
36 விடத்தல் தீவு.மே

**மன்னார் மாவட்டம்**
**முசாலை**
1 ஆக்கிமுறிப்பு
2 அறிப்பு கிழக்கு
3 அறிப்பு மேற்கு
4 சிலாவத்துறை
5 கரடிக்குளி
6 கொக்குப்படையான்
7 கொண்டச்சிகுளம்
8 கொண்டச்சி
9 மரிச்சுகட்டி
10 மருதமடு
11 மேதன்வெளி
12 முல்லிக்குளம்
13 பாலைக்குளி
14 பண்டாரவெளி
15 பெரியபால்லாச்சி பொற்கேணி
16 பூநொச்சிக்குளம்
17 புதுவேலி
18 சேவெரியர்புரம்
19 சின்னபால்லாச்சி பொற்கேணி
20 வேப்பங்குளம்

**மன்னார் மாவட்டம்**
**நானாட்டான்**
1 அச்சன்குளம்
2 அத்திக்குளி
3 செட்டியார் மஹன் கட்டை அடம்பன்
4 சொர்மன்தீவு
5 கம்டிக்குளி
6 இல்லுப்பைக்கடவை
7 இலந்தைமோட்டை
8 இரட்டைக்குளம்
9 இசைமலைத் தாழ்வு
10 காலிமோட்டை புலியங்குளம்
11 காஞ்சித்தாழ்வு
12 கட்கடந்த குளம்
13 மொட்டை கடை
14 முருங்கன்
15 நானாட்டன்
16 நருவிலிக்குளம்
17 பல்லன்கோட்டை
18 பரியாரிக்கண்டல்
19 பெரியக்கடை காடு
20 வான்தீவுக்கண்டல்
21 புத்திரர்கந்தன்
22 ராசாமடு
23 ரசூல்புதுவேலி
24 சிறுகந்தல்
25 தோமஸ்புரி
26 உமாநாகிரி
27 வாழ்க்கைப்பட்டன்கந்தல்
28 வங்கலை கிழக்கு
29 வங்கலை வடக்கு
30 வங்கலை மேற்கு

மேற்பார்வை உத்தியோகத்தர் தரங்க - 0115638800

**முல்லைத்தீவு மாவட்டம்**
**மாரித்திம்பத்து**
1 ஆலம்பில்
2 அம்பலவான்பொக்கனை
3 கொக்கிளாய்
4 கொக்குதொடுவை
5 குமுழமுனை
6 முல்லைதீவு
7 முல்லியாவலை
8 தண்டுவன்
9 தண்ணியூற்று
10 வெல்லமுல்லிவைக்கல்

**முல்லைத்தீவு மாவட்டம்**
**மாந்தை**
1 மூன்று முறிப்பு
2 வன்னிவிலான்குளம்
3 வவுனிக்குளம்

**முல்லைத்தீவு மாவட்டம்**
**புதுக்குடியிருப்பு**
1 கச்சிலமடு
2 மணவாளன் பட்டமுறிப்பு
3 மாங்குளம்
4 மன்னாகந்தல்
5 ஒலுமடு
6 புதுக்குடியிருப்பு கிழக்கு
7 புதுக்குடியிருப்பு மேற்கு
8 உடயார்கட்டு

**முல்லைத்தீவு மாவட்டம்**
**துணுக்காய்**
1 அம்பலபெருமாள்குளம்
2 புத்துவெட்டுவான்
3 துணுக்காய்
4 உயிலங்குளம்
5 யோகபுரம்

**முல்லைத்தீவு மாவட்டம்**
**ஒட்டுசுட்டான்**
மேற்பார்வை உத்தியோகத்தர் தரங்க - 0115638800

உங்களது விண்ணப்பத்தினை 2010.12.21 திகதிக்கு முன்னர் கீழ் உள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்

பொது முகாமையாளர்
## தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0112 470663

(சி/573175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்., வவுனியா, மன்னார் மாவட்டங்களில்

# மேலதிக ஆசிரியர் இடமாற்றத் திட்டம் மீள்பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்

## ஆசிரியர் சங்கச் செயலாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இருந்து மேலதிக ஆசிரியர்களை வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யும் திட்டம் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும் என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரிடமும் மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமும் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக சங்கத்தின் பொதுச் செயலாளரால் விடுக்கப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

✱ மேலதிக ஆசிரியர்களை இடமாற்றுவதாயின் அதற்கென மாகாணத்திற்கு என்ற கொள்கை அல்லது இடமாற்றத் திட்டம் அவசியம். யாழ்ப்பாண மாவட்டத்திற்கு என ஒரு திட்டமும் வவுனியாவுக்கென வேறொரு திட்டமும் மன்னார் மாவட்டத்திற்கென பிறிதொரு இடமாற்றத் திட்டமும் நடைமுறைப்படுத்துவதை சங்கம் கண்டிப்பதோடு தனது கடுமையான எதிர்ப்பையும் தெரிவிக்கின்றது.

✱ இடமாற்றங்கள் செய்யும் போது நியமன சேவை நிபந்தனைகளுக்கு முரணாக இடமாற்றங்கள் ஆசிரியர்களின் சம்மதம் இன்றிச் செயற்படுத்த முடியாது. அவ்வாறு செய்ய முற்படுவது ஆசிரியர்களின் அடிப்படை மனித உரிமை மீறும் செயலாகும்.

✱ சேவை நிபந்தனைகளை மாற்றுவதற்கான அதிகாரம் ஓர் அதிகாரிக்கு இருக்கும் என யாராவது ஒரு மாகாண அதிகாரி கருதுவார் என்றால் அது தவறு.

எந்த அதிகாரியும் தனது சொந்த விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் சேவை நிபந்தனைகளை மாற்ற முடியாது.

அவ்வாறு செய்யமுற்பட்டால் ஆசிரியர்களை நீதிமன்றத்தில் சந்திக்கவேண்டிய நிலை அந்த அதிகாரிக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இச்சூழ்நிலை ஏற்படுவதை தமிழர் ஆசிரியர் சங்கம் விரும்பவில்லை.

✱ மேலதிகமென மாற்றப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலில் உள்ள 98 வீதமான ஆசிரியர்கள் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள். சில நூற்றுக் கணக்கான அங்கத்தவர்களின் அடிப்படை மனித உரிமைகள் ஒரு பிழையான இடமாற்றத் திட்டத்தினால் மீறப்படும்போது சங்கம் அதைப் பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது. அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாகவும் அவர்களின் நலன்களிலும் சங்கம் தீவிர அக்கறையுடன் செயற்படுவது தவிர்க்க முடியாதது.

✱ ஆசிரியர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படாமல் வன்னியில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பக்கூடிய சிறந்த முறைகள் இருக்கின்றன.

சிறந்த முறைகள் இருக்கும் போது பிழையானதும், அடிப்படை மனித உரிமைகள் மீறப்படக்கூடியதுமான முறைகளை ஏன் பின்பற்றவேண்டும்? மாகாண நிர்வாகத்தின் இந்த அணுகுமுறையானது கனியிருக்கக் காய் கவர்ந்த நிலையாக உள்ளது.

✱ ஆசிரியர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படாமல் இடமாற்றத்தின் மூலமும் வேறு சட்டரீதியான நடவடிக்கைகள் மூலமும் வன்னிப் பெரு நிலப்பரப்பிலுள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பி அம்மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக மாகாணக் கல்வி அமைச்சுடனும், மாகாணக் கல்வித் திணைக்களத்துடனும் தமிழர் ஆசிரியர் சங்கம் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவுள்ளது. இதற்கான முயற்சியில் சங்கம் ஈடுபட்டுள்ளது. - என்றுள்ளது.

(ம-14)

# மழை வெள்ளத்தில் மிதக்கும் கைதடி மத்திய மருந்தகம்



கைதடி,டிசெ. 7

கைதடி அரச மத்திய மருந்தகத் தின் கட்டடம் சீரற்ற நிலையில் காணப் படுவதனால் தற் போது பெய்து வரும் கடும் மழை காரணமாக அங்கு மழை நீர் உட்புகுந் துள்ளது. இதனால் நோயாளர்கள் பெரும் அசௌகரி யங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேற்படி அரச மத்திய மருந்தகக் கட்டடம் மிகப் பழமை வாய்ந்த நிலையில் காணப்படுகிறது. கூரைப் பகுதியும் சீராக இல்லாத காரணத்தினால் மழை காலங்களில் மழை நீர் உள்ளே சென்று நிலத்தை ஈரப்படுத்துவதுடன் நோயாளர்கள் சறுக்கி விழும் நிலையை ஏற்படுத்துவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை அங்கு பகல் வேளைகளில் கடமையாற்ற ஆண் சிற்றூழியர் ஒருவரே உள்ளார்.

கடந்த மாதம் ஒருவர் ஓய்வு பெற்று விட்டதால் ஒருவரே எல்லா வேலைகளையும் செய்வதுடன் தனது தேவைக்காக விடுமுறை எடுக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எனவே, மேற்படி மருந்தகத்திற்கு வரும் நோயாளர்களின் நன்மை கருதி இவற்றை சீர் செய்து தரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

(ம-288)

## சுகாதாரச் சீர்கேடு



சிரமம்: யாழ்.நாவலர் வீதியில் ரயில்வே கடவையில் மாநகரசபை ஊழியர்களால் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மழை காலம் ஆரம்பித்துள்ளதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக மாநகரசபையிடம் முறையிடப்பட்டுள்ள போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(9)

# வாராந்த சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,டிசெ.7

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேவி பாகவதம் என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச்சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் இச்சொற்பொழிவு நடைபெறுகிறது.

(ம-236)

கப்பல் மூலம் பொருள்களைத் தருவித்த

# யாழ்.நகர வர்த்தகர்கள் பலர் புலனாய்வுப் பிரிவால் விசாரணை

யாழ்ப்பாணம்,டிசெ.7

கொழும்பில் இருந்து வந்த புலனாய்வு பிரிவினரால் ஐம்பதுக்கும் மேற்பட்ட யாழ் நகரப் பகுதி வர்த்தகர்கள் பல்வேறு கோணங்களில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களாக இந்த விசாரணை யாழ் வணிகர் கழக அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை இறக்குமதி செய்த யாழ்.நகர் வர்த்தகர்களே புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட காலப் பகுதியில் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு தருவிக்கப்பட்ட பொருள்களின் விவரம், செலுத்தப்பட்டுள்ள வரிகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இதன்போது விசாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்தக் காலப் பகுதியில் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்குப் பொருள்கள் எடுத்துவரப்பட்டது தொடர்பான நடைமுறைகள் குறித்தும் விசாரணை செய்யப்பட்டது.

கொழும்பில் இருந்து வந்த புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஐந்து பேரை உள்ளடக்கிய இந்தக் குழுவினர் யாழ். நகர வர்த்தகர் ஒவ்வொருவரையும் சுமார் 30 நிமிடங்கள் வரையில் தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்தி வர்த்தகர்களது வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

யாழ்ப்பாண வர்த்தகர்கள் துருவித்துருவி விசாரிக்கப்பட்டமையானது வர்த்தகர்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

(ஒ-14)

# ‘ரிக்கற்’ பணத்தில் மோசடி செய்த 500 இ.போ.ச நடத்துநர்கள் நீக்கம்

கொழும்பு,டிசெ.7

கடந்த ஆறு மாதங்களில் இலங்கை போக்குவரத்துச் சபையின் நடத்துநர்கள் 500 பேர் ரிக்கற் பணத்தில் மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என சபையின் தலைவர் எம்.டீ.பந்துசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு

இத்தகைய மோசடிகளால் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு நாளாந்தம் 40 இலட் ரூபா வரை நட்டமேற்படுகிறது. போலி ரிக்கற் புத்தகங்கள் மூலம் இவ்வாறு பணம் கையாடப்படுகிறது. இதனைத் தடுப்பதற்காக நாடெங்குமுள்ள 103 டிப்போக்களை உள்ளடக்கி திடீர் சோதனைக் குழுக்கள் பணியில் அமர்த்தப்படும்.

இதற்கிடையில் ஜாஎல டிப்போவைச் சேர்ந்த நடத்து நர் ஒருவர் செய்த மோசடி அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர் தனியார் பஸ் சங்கத்துக்குச் சொந்தமான டிக்கற் புத்தகத்தையும் இ.போ.ச டிக்கட் புத்தகத்தையும் ஒரே நேரத்தில் பாவித்து பெருந் தொகைப் பணத்தைக் கையாடியுள்ளார்.

பிரஸ்தாப நடத்துநர் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஒ-5)

வீதிகள், மதகுகள் புனரமைக்கப்படுகின்ற போதும்

# வெள்ள வாய்க்கால்கள் திருத்தப்படவில்லை வலி.கிழக்கில் குடியிருப்பாளர்கள் சிரமம்

அச்சுவேலி,டிசெ.7

வலி.கிழக்கில் வெள்ளம் பாய்வதற்கு ஏற்ற முறையில் வெள்ள வாய்க்கால் திருத்தி அமைக்கப்படாமல் இருப்பதனால் வெள்ளம் பாய்ந்தோட முடியாமல் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி அகலமாக்கும் பணியில் மதகுகள் எல்லாம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் மதகுகள் ஊடாக மழை வெள்ளம் வெளியேறுவதற்கு ஏற்ற வகையில் வெள்ள வாய்க்கால்கள் உரிய முறையில் புனரமைப்புச் செய்யப்படாமல் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலகங்கள் ஏற்புடைய முன்னெடுப்புக்களை செய்யவில்லை என வரியிறுப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெள்ளவாய்க்கால்கள் மூடப்பட்டிருப்பதும் பொருத்தமான முறையில் துப்புரவு செய்யப்படாமல் இருப்பதும், தூர்ந்த நிலையில் இருக்கும் வாய்க்கால்களை உரிய முறையில் துப்புரவு செய்யாமல் இருப்பதும் வெள்ளப் பெருக்குக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

வெள்ளம் உரிய முறையில் வெளியேறாமல் தேங்கி நிற்பதால் அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால், புத்தூர் சிறுப்பிட்டி நீர்வேலிப் பகுதிகளில் பிரதான வீதிக்கு மேற்குப் புறத்தில் வெள்ளம் பெருமளவில் தேங்கி நிற்கின்றது.

வெள்ளம் தேங்கி இருப்பதால் வீடுகளில் தங்கி இருக்க முடியாமலும் கால்நடைகளைப் பராமரிக்க முடியாமலும் பெருமளவில் சிரமம் அடைவதாக கூறப்படுகின்றது.

பாய்ந்தோட முடியாமல் வெள்ளம் தேங்கி நிற்பதால் தோட்ட நிலங்களில் உள்ள பயிர் வகைகள் அழுகி அழிவடையும் நிலையும் காணப்படுகிறது.

(ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 21.11.2010 முதல் 07.05.2011 வரை




வாசகர்களே !
நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த குருப் பெயர்ச்சி வந்து விட்டது. இதுவரை கும்ப ராசியில் சஞ்சரித்து சிறிது காலப்பகுதியில் குருவாசம் செய்து, பின் மீனத்துக்கு அதிகாரமாகச் சென்று, பலா பலன்களைக் கொடுத்து மீண்டும் கும்பத்துக்கு வந்து ஒரு சில நாள்கள் மட்டும் இருந்த குரு இப்பொழுது 12 ஆம் இடமான மீனராசியில் கடந்த 21ஆம் திகதி முதல் சஞ்சரித்து உங்களுக்கான பலாபலன்களை வழங்க வுள்ளார்.

மகரம் ( உத்திராடம் 2,3,4,
திருவோணம், அவிட்டம் 1,2 )

தன்னம்பிக்கையை மூலதனமாகக் கொண்ட மகரராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு மூன்றாம் இடத்தில் குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். மூன்றில் குரு முயற்சிகளை தாமதப்படுத்தும் என்பது ஜோதிட சாஸ்திரம். இருப்பனும் குருவின் பார்வை பெறுகிற இடங்களால் நற்பலனைப் பெறலாம். குருபகவான் தனது 5, 7, 9 ஆகிய பார்வைகளால் முறையே ராசிக்கு 7, 9, 11 ஆகிய ஸ்தானங்களைப் பார்க்கிறார். முன் யோசனை இல்லாமல் செய்யப்படும் பணிகளால் நட்டம் ஏற்பட வாய்ப்புண்டு. தேவையில்லாமல் பிறரிடம் ஏதாவது பேசி வம்பில் சிக்கும் நிலையும் உண்டு. பேச்சை மிகமிக குறையுங்கள். பணவரவில் தட்டுப்பாடு இருக்கும் என்பதால், செலவுகளை மிகவும் குறைத்துக் கொள்வது நல்லது. சமூகத்தில் பெற்ற நற்பெயரை பாதுகாப்பதில் சில சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். சகோதர, சகோதரிகள் தாங்கள் தான் உயர்ந்தவர்கள் என்ற சிந்தனையுடன் செயல்பட்டு உங்களை மட்டம் தட்டப் பார்ப்பர். உடன் பிறந்தவர்கள் தானே! பேசினால் பேசட்டுமென விட்டு விடுங்கள். ஆனால், தாய்வழியில் பிற உறவினர்களுடன் சுமூக மனப்பான்மை நீடிக்கும். வீடு, வாகன வகையில் பராமரிப்பு பணிகள் வருமென்றாலும், அத்தியாவசியமானதை மட்டும் செய்து கொள்ளுங்கள்.

புத்திரர்கள் உங்களது சிரமம் உணர்ந்து உங்களுக்கு உதவும் வகையில் சிக்கனத்துடனும், பொறுப்புடனும் செயல்படுவர். இஷ்ட தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படும். உடல்நலம் ஒருநேரம் போல் மறுநேரம் இராது. சொத்துக்களின் பேரில் முக்கிய தேவைகளுக்காக பணக்கடன் பெறுவீர்கள். கணவன்,மனைவி நல்ல சிந்தனைகளை மனதில் கொண்டு குடும்ப ஒற்றுமை சிறக்கும் வகையில் செயல்படுவர். நண்பர்கள் உங்களின் சிரமங்களை குறைத்திடும் வகையில் பல்வேறு விதத்தில் உதவுவர். பணியில் கூடுதல் அக்கறையுடன் செயல்படுவதால் இப்போதைய நிலை தொடரும். தொழில் சார்ந்த வகையில் உருவான குழப்பங்களை சரிசெய்து வளர்ச்சிபெறும் வகையில் திறம்பட செயலபடுவீர்கள். கஷ்டமான வாழ்வு நடத்துகிற சூழ்நிலையிலும் சுக சௌகரியங்களுடன் கூடிய இனிய அனுபவ முறைகள் பிறர் தயவில் கிடைத்திடும். மூன்றாமிட குரு விபத்துக்களில் சிக்க வைக்கக் கூடியவர். பயணங்களின் போது மிகுந்த கவனம் இருக்கட்டும். வெளிநாடு வேலைவாய்ப்பில் குறைந்த அனுகூலம்தான் உண்டு.

தொழிலதிபர்கள்: புடைவை, காகிதம், பிளாஸ்டிக், பால் பொருள்கள், தளபாடங்கள், கட்டுமானப் பொருள், தோல், ரப்பர், தண்ணீர் சார்ந்த பொருள்கள், சோப்புப் போன்ற அழகு சாதனப் பொருள்கள் உற்பத்தி செய்பவர்கள் தரத்தில் கூடுதல் கவனம் கொள்வது நலம் தரும். லாபம் சுமாராகக்கிடைக்கும். மற்ற தொழில் செய்வோரும் குறைந்த லாபமே பெறலாம். கவனம். பணியாளர்களின் ஒத்துழைப்பு இருக்கும் என்பதால் சமாளித்து விடலாம்.

**தருபவர் வித்யா**

வியாபாரிகள்: நகை, புடைவை, மளிகை, மருந்து, அழகு சாதனப் பொருள்கள், மின்சார சாதனங்கள், பால்பொருள்கள், பாத்திரங்கள், பேக்கரிப் பொருள்கள், பீங்கான், பிளாஸ்டிக் பொருள்கள், கட்டுமானப் பொருள், மலர், விவசாய இடுபொருள்கள், தளபாடங்கள், உதிரிப்பாகங்கள் விற்பனை செய்பவர்கள் சந்தையில் கூடுதல் போட்டியை எதிர்கொள்வர். லாபம் மிதமாக கிடைக்கும். மற்ற வியாபாரிகளுக்கு இவர்களை விட சற்று கூடுதலாக லாபம் கிடைக்கும். கூட்டாக வியாபாரம் செய்பவர்களுக்கு ஓரளவு அனுகூலம் உண்டு. கடன் மிகுதி வந்து சேரும்.

பணியாளர்கள்: அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள், சஞ்சலத்தினால் பணியில் சில குளறுபடிகளை எதிர்கொள்வர். நிர்வாகத்தின் கண்டிப்பு, ஒழுங்கு நடவடிக்கை வரலாம். சக பணியாளர்கள் முக்கிய சமயத்தில் உறுதுணையாக செயல்படுவர். பணி உயர்வு, சலுகை பெறுவதில் பொறுமையான அணுகுமுறை நற்பலன் தரும். நிர்வாகத்திடம் பெற வேண்டிய நிலுவைத் தொகை கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

பெண்கள்: பணிபுரியும் பெண்களுக்கு வேலையில் கவனம் குறையும். நிர்வாகத்தின் வழிகாட்டுதலை பின்பற்றுவது அவசியம். சலுகைகளை கேட்டுப் பெறுவதில் நிதானம் வேண்டும். குடும்பப் பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர். வீட்டுச்செலவுக்குத் தட்டுப்பாடு இருக்கும். ஆபரண பாதுகாப்பில் கவனம் வேண்டும். சுயதொழில் புரியும் பெண்கள் அளவான மூலதனத்தில் அதிக உழைப்பால் சராசரி உற்பத்தி, விற்பனை, பணவரவு என்கிற நிலை காண்பர்.

மாணவர்கள்: பொறியியல், மருத்துவம், சட்டம், விவசாயம், கணினி, இதழியல், இசை, நடனம், ஓவியம், இரசாயனம், பௌதிகம், உயிரியல், பொருளாதாரத்துறை மாணவர்கள் படிப்பில் பின் தங்க நேரிடலாம். ஏனையதுறை மாணவர்கள் இவர்களை விட நன்றாகப் படிப்பர். சக மாணவர்கள் தரும் ஊக்கம் உங்களை உற்சாகப்படுத்தும். பயன்படுத்திக் கொள்ளுங்கள். பெற்றோரிடம் நற்பெயர் பெறுவதில் சிரமம் உள்ளதால் கடுமையாக உழையுங்கள். படித்து முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு தாமதம் ஏற்படும்.

விவசாயிகள்: பயிர் வளர்ப்பில் குறுக்கீடுகளை எதிர்கொள்வீர்கள். நிலம் தொடர்பான விவகாரங்களில் நிதான அணுகு முறையைப் பின்பற்றுங்கள். கால்நடை வளர்ப்பு திருப்திகர பலன் தரும். முக்கிய தேவைகளை நிறைவேற்றக் கடன் பெறுவீர்கள்.

---

# தொலைக்காட்சி போன்றே பிள்ளைகளையும் பெற்றோர் கவனித்துப் பராமரிக்க வேண்டும்

## பேராசிரியர் சின்னத்தம்பி எள்ளலுடன் அறிவுரை

சுன்னாகம்,டிசெ.7

தொலைக்காட்சியைக் கவனித்துப் பராமரிப்பது போன்று பெற்றோர் தமது பிள்ளைகளையும் கவனிக்க வேண்டும் என்று எள்ளலுடன் கூடிய அறிவுரையை வழங்கினார் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. சின்னத்தம்பி.

வலிகாமம் கல்லி வலயத்தின் ஆரம்பப்பிரிவு பரிசளிப்பு விழா வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் தலைமையில் இராமநாதன் கல்லூரியில் இந்த வார ஆரம்பத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார் பேராசிரியர் மா.சின்னத்தம்பி.

### முன்னேற்றத்துக்குக் கல்வி

அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

மனிதர்கள் சகல வழிகளிலும் முன்னேறி வாழ்வதற்கான வாய்ப்பினைக் கல்வி வழங்குகிறது. வறுமை, பெற்றோரின் அக்கறையின்மை, கற்றலில் நாட்டமின்மை போன்ற காரணங்களால் பல பிள்ளைகள் தமது கல்வியை இடை நடுவில் நிறுத்துகின்றனர்.

இவ்வாறு கல்வியை இடைநிறுத்தும் மாணவர்களே கூலித் தொழிலாளர்களாக, வீதிகளில் அலைவோராக சிறு குற்றவாளிகளிகளாக மாறுகின்றனர்.சிறு வயதில் கல்வியைத் தவறவிட்டவர்கள் வளர்ந்து பெரியவர்களான பின்னரும் தமது கல்வியைத் தொடரக்கூடிய சூழல் இன்று ஏற்பட்டுள்ளது. இதற்கெனத் திறந்த பாடசாலைகள் உள்ளன. தமக்கு வசதியான நேரங்களில் திறந்த பாடசாலைகளில் எவரும் கல்வியைத் தொடர முடியும்.

ஆரம்பக்கல்வி என்பது மிக இன்றியமையாதது.புத்தாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகளில் ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களிடம் பல்வேறு திறன்களும் வளர்க்கப்படுவது ஆரம்பப் பிரிவிலேயே ஆகும்.

தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பில் பெற்றோர்கள் கவனம் செலுத்துவது அவசியம். சிலரால்தான் ஏட்டுக் கல்வியினூடாக முன்னேற முடியும். அவர்களே ஐந்தாம், பதினோராம், பதின் மூன்றாம் வகுப்புக்களில் சான்றிதழ்களைப் பெறுகிறார்கள். அவர்களை ஊக்குவிக்கவும் அவர்களது திறமைகளைக் கௌரவப்படுத்தவும் சான்றிதழ்கள் அவசியம்.

### தொழில்நுட்பக் கல்வி

ஏட்டுக்கல்வியில் சிறப்புப் பெற முடியாத பல பிள்ளைகளிடம் தொழில்நுட்பத் திறன்களும், விளையாட்டுத் திறன்களும் காணப்படுகின்றன. எம்மால் செய்ய முடியாத தொழில்நுட்ப வேலைகளை அவர்களால் செய்யமுடிகிறது. அவற்றைத் தடுத்து நிறுத்தாதீர்கள். தட்டிக் கொடுத்து ஊக்குவியுங்கள். அவர்கள் 8 ஆம் வகுப்புச் சித்தியுடன் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயின்று படிப்படியாக முன்னேறக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

2008 ஆம் ஆண்டுமுதல் இலங்கையில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் செயற்படுகிறது. அப்பல்கலைக்கழகத்தின் வளாகங்களாகவே தொழில்நுட்பக் கல்லூரிகள் உள்ளன. ஏட்டுக்கல்வியில் சிறப்படைய முடியாதவர்களைத் தொழில்நுட்பக்கல்வியின்பால் ஆற்றுப்படுத்த முடியும்.

### மாணவனின் அனுபவம்

பெற்றோர் தொலைக்காட்சியைப் கவனிப்பது போல பிள்ளைகளையும் கவனிக்க முன்வரவேண்டும். ஓர் ஆசிரியர் மாணவனைப் பார்த்து ''நீ எதுவாக ஆக விரும்புகிறாய்? '' எனக் கேட்டார். அதற்கு அம் மாணவன்'' ஒரு தொலைக்காட்சியாக ஆக விரும்புகிறேன்'' எனப் பதிலளித்தான். அதற்காக அவன் கூறிய நியாயங்கள் ''என்னை அதிகம் பேர் பார்ப்பார்கள். பழுதானால் உடன் திருத்துவார்கள். என்னில் அதிகம் கரிசனை காட்டுவார்கள்.''என்பதாக இருந்தன. இது கவலைக்குரிய விடயமாகும்.

### பெற்றோர் அக்கறை

பெற்றோர்கள் பிள்ளைகளில் அக்கறை காட்டவேண்டும். அவர்களது உடலிலுள்ள காயங்களை அவதானிப்பதுமுதல் பாடசாலையில் அன்று படித்ததைக் கேட்பது வரை ஒவ்வொரு விடயத்திலும் அக்கறையோடு அணுகி அவர்களைத் தட்டிக் கொடுக்கவேண்டும். அதன் மூலமே பிள்ளைகளை முன்னேற்ற முடியும்- என்றார்.

சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நா.சுவாமிநாதன், மு. சிவபாதம், இளைப்பாறிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வ.குகவேள் ஆகியோர் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(உ- 38)

# கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள்

அம்பாறை, டிசெ.7

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 2009-2010ஆம் கல்வி ஆண்டுக்கான வெளிவாரிப் பட்டப்பரீட்சைகள் 18ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

கலைமாணி, வியாபார நிர்வாகமாணி, வணிகமாணி ஆகிய பொதுப்பட்டங்களுக்கான 2ஆம், 3ஆம் வருட வெளிவாரிப் பட்டப்பரீட்சைகளே இவ்வாறு நடைபெறவுள்ளதாக வெளிவாரிப் பரீட்சைகளுக்கான பொறுப்பாளரும், பல்கலைக் கழக சிரேஷ்ட [illegible] எம்.ஐ. நௌபர் [illegible].

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக் கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெறவிருக்கும் மேற்படி வெளிவாரிப் பட்டப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை அனுமதி [illegible] அனுப்பி வைக்கப் [illegible]வும், இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் நௌபர் கோரியுள்ளார்.

(ம-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழை, வெள்ள அனர்த்தம்

# முல்லை. மாவட்டத்தில் 2ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, நவ.7

கடந்த சில தினங்களாக விடாது கொட்டித் தீர்க்கும் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று வரை 2 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆயிரம் குடும்பங்கள் பாடசாலைகளில் தங்கியுள்ளதாகவும் அம்மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஓயாது தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மக்கள் தமது இருப்பிடங்களில் இருந்து இடம் பெயர்ந்து பாடசாலைகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் உயிலங்குளம், அமைதிபுரம், யோகபுரம், தென்னியாற்றங்கரை ஆகிய கிராமங்களும், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் நட்டாங்கண்டல், சிராட்டிபுரம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் முத்தையன்கட்டு, தம்பகாமம், ஒலுமடு, மாங்குளம், திருமுருகண்டி, இந்துபுரம், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் கள்ளப்பாடு தெற்கு, புதாரிக்குளம், வற்றாப்பளை, தனபாலசிங்க கிராமம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் விசுவமடு கிராமம் ஆகியனவே மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் ஆயிரம் குடும்பங்களும்,மேலும் மூவாயிரம்குடும்பங்கள் தமது உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

பாடசாலைகளில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு மாவட்டச் செயலகத்தால் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஏனையவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன - என்றார். (க-9)

## கூரைத் தகடுகள் வழங்கப்பட்டன

வவுனியா,டிசெ.7

வவுனியா கற்பகபுரம் புதிய குடியேற்றத் திட்டத்தில் உள்ளவர்களுக்கு பல லட்சம் ரூபா பெறுமதியான கூரைத் தகடுகளைத் தமது இயக்கம் வழங்கியதாக சிறீ தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஊடகச் செயலாளர்சிறீ அறிவித்துள்ளார்.

மழையினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் செயலாளர் நாயகமான ப.உதயராசாவிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து கூரைத் தகடுகள் வழங்கப்பட்டுள்ளன. (க)




## ஒட்டுசுட்டானில் பகுதிச் சேத வீடுகளுக்கு 90 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

முல்லைத்தீவு, நவ.6

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கற்சிலைமடு கிராம அலுவலர் பிரிவில் 36 வீடுகள் பகுதிச் சேத வீடுகளாகத் தெரிவு செய்யப்பட்டு அவைகளுக்கான முதற்கட்ட கொடுப்பனவாக ரூபா 90,000 பணமும் வழங்கப்பட்டது.

எஸ்.வேதவனம், என்.வன்னியசிங்கம், எம்.சிவசுப்பிரமணியம், ஆர்.தனபாலசிங்கம், கே.சந்திரலேகா, ஆர்.செல்லத்தம்பி, ஆர்.செந்தமிழ்ச்செல்வன், கே.பற்குணராசா, எ.சேனாதிராசா, எஸ்.கணேசலிங்கம், ஐ.சவுந்தரராசா, ஏ.விமலேஸ்வரன், எஸ்.செல்வராணி, எம்.சிவநேசன், கே.ஆறுமுகன், எ.வேலாயுதம், ஆர்.சிவபாலன், எஸ் சசிந்தன், எஸ்.மனோகரன், வி.சிவஞானலிங்கம், எம்.குணாஜினி, எஸ்.தமிழ்ச்செல்வி, ரி.தனராஜ், வி.எழிலழகன், பி.சின்னமணி, எம். செந்தூரன், ஆர்.வல்லிபுரம், எஸ்.நடராசா, ரி.செல்லத்தம்பி, எஸ்.புஸ்பாதேவி, வி.சிவானந்தம், கே.சதீஸ்வரன், எ.சவுந்தரராசா, எஸ்.குமாரசாமி, எஸ்.நாகலிங்கம், வி:நவரத்தினம் ஆகியோர்களே தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களில் சிலர் தமது வேலைகளைத் தொடராதுள்ளதால் அவர்களுக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவில் தாமதம் ஏற்படுமென தொழில்நுட்ப உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். எனவே கூடிய விரைவில் தமது வீடுகளைத் திருத்தி அமைப்பதில் ஆர்வம் காட்டி தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தொழில் நுட்ப உத்தியோகத்தர் அனைவரையும் கேட்டுள்ளார். இது வரையில் சில வீடுகளின் வேலைகள் முற்றுப்பெறும் நிலையில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-500)

## வெள்ளத்தின் மூர்க்கம்......



வள்ளம் தேடும் வீதி:-பூநகரி பிரதான வீதியில் இருந்து செல்லியாதீவு அ.த.க.பாடசாலை செல்லும் வீதி வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றது. (406)

## வவுனியாவில் எரியூட்டு தகன நிலையத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

வவுனியா நகர சபைக்கான மலர்ச்சாலையும், வாயு மூலமான எரியூட்டு நிலையமும் அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்களை வடக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் கோரியுள்ளார்.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி இதற்குரிய நிதியினைக் கடனாக வழங்கியுள்ளது. இந்த வேலைக்குரிய கேள்விப் பத்திரங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை சமர்ப்பிக்க முடியுமென அறிவிக்கப் பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சிக் கட்டடங்கள் பல நிர்மாணிக்கப் பட்டும், புனரமைக்கப்பட்டும் வருவது குறிப்பிடத்தக்கது. (க-121)

## சேதமடைந்த வீடுகள் புனரமைக்கப்படாமையால் மழையில் அல்லல்படும் கணேசபுரம் மக்கள்

கிளிநொச்சி, டிசெ.7

கிளிநொச்சி கணேசபுரம் கிராமத்தில் மக்கள் மீள்குடியேறி ஒருவருடம் கடந்த நிலையிலும் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்குரிய உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாகத் தற்போது தொடரும் மழையினால் இந்த மக்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவர்கள் குடியிருக்கும் தற்காலிக வீடுகள் தறப்பாள்களினாலும், கூரைத் தகடுகளினாலும் அமைக்கப் பட்டுள்ளன. ஆனால் பெரு மழைக்கு இவை தாக்குப் பிடிக்காது மழைநீர் வீட்டினுள் வருவதால் இவர்கள் பெரும் அவலங்களைச் சந்தித்து வருகின்றனர். மீள்குடியேறிய பின் இவர்களால் சேகரித்து வைக்கப்பட்டுள்ள பொருள்கள் யாவும் மழை நீரில் நனைந்து நாசமாகியுள்ளன. அத்துடன் கடந்த சிறுபோகத்தின் போது அறுவடை செய்யப்பட்ட நெல் உரிய விலை கிடைக்காததன் காரணமாக சேகரித்து வைக்கப் பட்டிருந்தன. தற்போது இந்த நெல்லும் மழை நீரில் நனைந்து பழுதாகிவிடக் கூடிய ஏதுநிலை காணப்படுகின்றது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் யு.என் ஹபிற்றாட் நிறுவன அதிகாரிகள் இக்கிராமத்துக்கு வந்து கிராம அலுவலருடனும் மக்களுடனும் கலந்துரையாடித் தாம் பகுதி சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கான நிதி உதவியினை வழங்குவதாக கூறிச் சென்றுள்ளனர். ஆனால் இது வரை இந்த மக்களுக்கு அந்த உதவிகள் எதுவும் கிடைக்கவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

தாம் தற்போது பெய்துவரும் அடை மழை காரணமாகப் பல்வேறு துன்பங்களை அனுபவிப்பதாகக் கூறும் இவர்கள் தமது வாழ்விடங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு உரியவர்கள் உதவவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கின்றனர். (க-405 )

## ஆறுகள் பல பெருக்கெடுத்து ஓடுவதால் ஒட்டுசுட்டான் மக்கள் பெரும் இக்கட்டில்

முல்லைத்தீவு, டிசெ.7

தொடரும் மழையினால் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள ஆறுகள் பெருக்கெடுத்தோடுவதால் மக்கள் வெளியிடங்களுக்குச் செல்ல முடியாத நிலையிலுள்ளனர்.

பண்டாரவன்னி கிராமசேவை அலுவலர் பிரிவில் பண்டார வன்னியனின் தங்கை குருவிச்சி நாச்சியாரைக் குறிக்கும் குருவிச்சை ஆறு, விரால் மடு ஆறு, கிடாரஞ்சன் ஆறு என்பன பெருக்கெடுத்ததாலேயே மக்கள் வெளியிடங்களுக்குச் செல்லமுடியாத நிலையில் அவலப்படுகின்றனர். குறிப்பாக அந்தப் பகுதியிலிருந்து வேலைக்கு வந்த கூட்டுறவுக் கடை முகாமையாளர் உட்பட சிலர் ஆற்றினைக் கடந்து தமது வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளனர். இவர்கள் மறுகரையிலுள்ள தமது மனைவி, மக்கள், உறவினர்களின் நிலை தெரியாது கலங்கி நிற்பதையும் காண முடிகிறது.

அப்பகுதியிலுள்ள ஆறுகளுக்கு மேலாக பாலங்கள் அமைக்கப்படாமையே இதற்குக் காரணமென மக்கள் தெரிவிக்கின்றனர். வழக்கமாக மழை காலங்களில் இந்தப்பகுதி மக்கள் இவ்விதமான துன்பங்களை அனுபவித்து வருகின்றமை வழக்கமானதாகும். கடந்த காலங்களில் படகுகள் மூலம் மக்கள் வெளியேற்றப் பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (க-500)

## பட்டிகளுக்கு இராணுவம் தடைவிதித்ததால் கால்நடைச் சொந்தக்காரர் கலக்கத்தில்

முல்லைத்தீவு,டிசெ.7

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் ஆறாம் கட்டையில் கால்நடைகளுக்கான பட்டிகளை அமைப்பதற்கு இராணுவத்தினர் தடை விதித்ததால் கால்நடைச் சொந்தக்காரர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிய வந்துள்ளது.

மன்னாகண்டல் ஆறாம் கட்டையில் வசிக்கும் மக்களில் அநேகமானோர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் இவர்கள் ஏராளமான பசு மாடுகளையும், எருமை மாடுகளையும் வளர்த்து வருகிறார்கள். இவர்கள் வழக்கமாக ஆறாம் கட்டை என்னும் இடத்தில் பட்டிகளை அமைத்து கால்நடைகளை அடைத்து விடுவது வழக்கம். ஆனால் இந்த முறை இராணுவத்தினர் அவ்விடத்தில் பட்டிகளை அமைக்க வேண்டாமெனத் தடை விதித்துள்ளனர். இதனால் இந்த மக்கள் என்ன செய்வதென்று புரியாது கலக்கத்தில் உள்ளனர்.

இந்த இடத்தில் நாலாபுறமும் ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுவதால் கால்நடைகளை எங்கே அடைத்து வைத்துப் பராமரிப்பதென இவர்கள் கவலையில் மூழ் கியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-500)

## வயல் நிலம் போலக் காட்சிதரும் மாங்குளம் - முல்லைத்தீவு வீதி

முல்லைத்தீவு, டிசெ.7

மாங்குளம் - முல்லைத்தீவு வீதி நீரும் சகதியும் நிறைந்து வயல் நிலத்தைப் போலக் காட்சி தருவதாக இதில் பயணம் செய்யும் மக்கள் கூறுகின்றனர்.

இந்த வீதி ஏற்கனவே கிரவல் மண்ணால் மூடப்பட்டு பெரும் சிரமங்களை மக்களுக்கு கொடுத்து வந்தது. தற்போது பெருமழை பெய்வதால் கிரவல் மண் ,கரைந்து சேறாகக் காட்சியளிக்கின்றது. அத்துடன் வீதியில் பாரிய குழிகள் காணப் படுவதால் சேற்று நீர் நிறைந்துள்ளது. இதனால் இந்த வீதியில் பயணம் செய்வோர் குழிக்கும் நிலத்துக்கும் வேறுபாடு தெரியாது இவற்றினுள் விழுந்து எழுந்து செல்வதைக் காண முடிகின்றது.

அத்துடன் உள்ளூர் வீதிகளும் மிகவும் மோசமான நிலையில் சீரழிந்து காணப்படுகின்றன. நீர் வடிந்து செல்லக்கூடிய பாலங்களோ அல்லது கால்வாய்களோ இல்லாததால் மழை நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் இந்த வீதிகளில் செல்வதற்கு மக்கள் தயங்குகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத நிலையிலுள்ள மாங்குளம் - முல்லைத்தீவு வீதியும், ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியும் திருத்த வேலைகள் முற்றுப்பெறாத நிலையில் உள்ளன. கோடை காலத்தில் கிரவல் புழுதிக் குளியலும், மழை காலத்தில் சேற்றுக் குளியலும் இந்த மக்களுக்கு வாடிக்கையாக உள்ளன.

உரிமையாளர்கள் இனியாவது கண் விழித்து இந்த வீதிகளைச் செப்பனிட்டுத் தரமாட்டார்களாவெனத் தொடர்ந்து பாதிக்கப்படும் மக்கள் எதிர்பார்க்கின்றனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் உற்பத்தி அதிகரிப்பதற்கு வாய்ப்பு பான் ஏஷியன் பவர் பொது நிறுவனமாகிறது

மின் உற்பத்தி அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட் டிருக்கிறது.

கொழும்பு பங்குச் சந்தையிலே நிரற்ப டுத்தப்பட்டு பங்கொன்று ரூபா 3/= வீதம் பான் ஏஷியன் பவர் லிமிட்டெட்டினது 200,000,000 பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளன. இந்த நடவடிக்கை எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதன்மூலம் பான் ஏஷியன் பொது நிறுவனமாகிறது.




மலேஷியாவின் Majulia குழுமத்தின் ஒரு துணை நிறுவனமாக Power Hub International (PPL),Malaysia நிறுவனத்தின் முற்று முழுதான உரித்துள்ள ஒரு துணை நிறுவ னமே Panasian Power Limited (PPL) ஆகும்.


மலேசிய அரசாங்கத்தினது சிறியளவிலான மீள உபயோகிக்கப்படக்கூடிய மின்வலு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழே மலேசியாவிலே சிறிய அளவிலான நீர்மின்வலு இயந்திரத் தொகுதியை அபிவிருத்தி செய்வதனைப் பொறுப்பெடுத்துக் கொண்ட முதல் நிறுவனமாக இது திகழ்கின்றது.

இதே நிபுணத்துவத்தின் வழிகாட்டலுடன் இலங்கையிலும் மீள உபயோகிக்கப்படக் கூடிய மின்வலுவை அபிவிருத்தி செய்வதற் கான முயற்சிகளிலே பான்ஏஷியன் பவர் ஈடுபட்டு வருகின்றது.

பான்ஏஷியன் பவர் லிமிட்டெட்டின் தலைவரான கலாநிதி பிரதாப் இராமானுஜம் கருத்துத் தெரிவிக்கையில், "நாடு தொடர்ந்தும் வளர்ச்சிப் பாதையிலே வீறு நடை போடவேண்டுமெனில் இலங்கையிலே மின்வலுத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியம். இலங்கையிலே காணப்படுகின்ற வளங்களை உபயோகித்து தேசிய உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்கின்ற முன்னெடுப்பிலே அங்கம் வகிப்பதையிட்டு பான்ஏஷியன் பவர் பெருமையடைகிறது.

நிறுவனத்தின் வெற்றிகளைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலே பொதுமக்களுக்கு முதலீட்டு வாய்ப்புகளை இந்த ஆரம்பப் பங்கு வழங்கல் ஏற்படுத்தும் என நாம் நம்புகின்றோம்'' என்று கூறினார்.



லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனியின் 35ஆவது அடகு வைத்தல் நிலையம் இல.37, ஸ்ரான்லி வீதி என்ற முகவரியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. நிலையத்தை பிரணக நகை மாளிகை உரிமையாளர் சு.பத்மநாதன் நாடாவை வெட்டித் திறந்துவைக்கிறார். (த-23)

# தகவல் தொழில்நுட்ப சுப்பர் மார்க்கெட் சில்லறை வியாபாரத்தில் PC House



PC House கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள தனது கட்டடத்தில் தகவல் தொழில்நுட்ப சுப்பர் மார்க்கட் ஒன்றை ஆரம்பித்து சில்லறை வியாபாரத்தில் இறங்கியுள்ளது.

PCH கட்டடத்திலே தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள புதிய காட்சியறையானது தகவல் தொழில்நுட்ப சில்லறை வியாபாரத்துறையிலே ஒரு புதிய சகாப்தத்தை தோற்றுவித்துள்ளது.


பல்வேறு வகைப்பட்ட வர்த்தக நாமங்களின் கீழே 3,000 இற்கும் மேற்பட்ட வெவ்வேறுபட்ட உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு காட்சியறையுடன் இலங்கையிலே முதன்முதலாக சுப்பர்மார்க்கட் பாணியிலே அமைந்துள்ள ஒரு தகவல் தொழில்நுட்ப நிலையமாக இது திகழ்கின்றது.

இந்தக் காட்சியறையினைத் திறந்து வைக்கும் நிகழ்விலே இலங்கைத் தொலைதொடர் பாடல்கள் ஒழுக் காற்று ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகமான அனுஷ பெல்பிட்ட உரையாற்றுகையில்,

''இந்த நிலையத்தில் உள்ள பரந்த வகைப்பட்ட தெரிவுகள் இலங்கை நுகர்வோர் மத்தியிலே வளர்ச்சியடைந்து வருகின்ற விழிப்புணர்வு மட்டங்களை PCH தெளிவாக இனங்கண்டு கொண்டுள்ளதனை பிரதிபலிக்கின்றன'' என்று குறிப்பிட்டார்.

வருடத்தின் 365 நாட்களும் திறந்திருக்கும் இந்தக் காட்சி யறை பல பிரபல்யமான வர்த்தகநாமங்களின் உற்பத்திகளை ஒரே கூரையின் கீழே வழங்கி வாடிக்கையாளர்களுக்கு பரந்த வகைப்பட்ட தெரிவுகளையும், சேவைகளையும் கிடைக்கச் செய்கின்றது. ஞாயிற்றுக்கிழமைகளிலும் பி.ப. 9 மணி வரை திறந்திருப்பதன் மூலம் வழமையான பரபரப்புக்கள் எதுவுமின்றி ஆறுதலாகப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பினை வாடிக்கையாளர்களுக்கு இது வழங்குகின்றது.

# சொக்லேட் தாஜ்மகால்




சொக்லேட் தாஜ் மஹால் ஒன்று கடந்த வாரம் சென்னையில் காட்சிக்கு வைக்கப்பட்டது. மக்கள் பெரும் எண்ணிக்கையில் சென்று வாயில் நீரூறப் பார்த்து வெகுவாக ரசித்தார்கள்.

சொக்லேட் தாஜ் மஹால் சுவிட்சர்லாந்தில் தலைமையகத்தைக் கொண்ட லிண்ட் சொக் லேட்ஸ் நிறுவனத்தின் எண்ணக் கருவாகும். இதற்கு 5 சமையல் நிபுணர்கள் 72 மணி நேரம் முயற்சி செய்து உருவம் கொடுத்தார்கள். இந்தச் சொக்லேட் தாஜ்மகாலை உருவாக்குவதற்கு 40 கிலோ சொக்லேட் பயன்படுத்தப்பட்டுள்ளது.

# சுவர்ணமஹாலின் நிதிச் சேவை யாழ்ப்பாணத்தில்

சுவர்ணமஹால் நிதி சேவைகள் லிமிட்டெட்டின் யாழ்ப்பாணக் கிளை 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நேற்று வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது யாழ்ப்பாணத்தில் எமது கிளையைத் திறந்துவைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம் என டாக்டர் சோமா எதிரிசிங்க கூறினார். யாழ்ப்பாணத்து மக்கள் தமது பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் பூரணத்துவம் பெற்றுச் செல்வந்தர்களாகச் செழிப்புறும் வகையில் எமது தாரள நிதி உதவிகள் அவர்களைச் சென்றடையும் எனவும் அவர் கூறினார்.

சுர்ணமஹால் நிதி சேவை நிலையத்தினால் வருடத்தில் 365 நாள்களுக்கும் தொடர்ச்சியாக ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி சேவைகள் இடம்பெறும்.

அந்தச் சேவைகளாவன:-

* நிலையான வைப்புக்கள்

அதியுயர் உத்தரவாதத்துடனான வட்டி - சிரேஷ்ட வாடிக்கையாளர்களுக்கு 1% மேலதிக வட்டி வீதம் வழங்கப்படும்.

* அடகுகள்

அதி குறைந்த வட்டி வீதத்தில் அதிகூடுதல் பணம், அடகு நகைகளுக்கு வழங்கப்படுகின்றது.

* குத்தகை/வாடகைக் கொள்முதல்:

உயர் வட்டி வீதம் - இலகு ஆவணங்களுடன் வாடிக்கையாளரின் நிலைமைக்கேற்ப மீளச்செலுத்த வேண்டிய பணத்திற்கான இலகு சலுகைகள்.

* சேமிப்புக் கணக்கு :

அதியுயர் வட்டி வீதம் வாடிக்கையாளர்கள் தமக்கு விருப்பமான வேளைகளில் எதுவித தடங்கலும் இன்றித் தேவையான தொகைப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எந்வொரு கிளைகளிலும் அடகுப் பகுதி உட்பட அனைத்து அடகு நிலையங்களும் வருடத்தில் 365 நாள்களும் மு.ப. 8.30 மணியில் இருந்து பி.ப. 6 மணி வரை திறந்திருக்கும்.

2010 இல் மேலும் 6 கிளைகளைத் திறக்கக் கூடியதான 6 இடங்களை இனங்கண்டுள்ளோம். 2010 இல் தொடர்ச்சியாகத் திறக்கப்பட்ட 4 கிளைகளுள் வட மகாணத்தில் இது தனித்துவம் பெற்றதாகும்.

அடுத்த காலாண்டில் இரு அடகு நிலையங்களைத் திறக்க இருப்பதுடன் வவுனியாவில் 02 தரமானகிளைகளையும் திறக்கவுள்ளோம் என அவர் கூறினார்.(த)

# செலிங்கோ லைப்ஃபுக்கு உலக காங்கிரஸ் விருது

செலிங்கோ லைஃப் தனது சமூக ஊடுருவல் மற்றும் சந்தைப்படுத்தலுக்காக உலக காங்கிரஸின் சிறந்த வர்த்தக இலச்சினைகளுக்கான 2010ஆம் ஆண்டு விருதைப் பெற்றுள்ளது. சமூக சந்தைப் படுத்தல் பிரிவில் உயர் விருது செலிங்கோ லைஃபுக்கு நவம்பர் மாதம் 23ஆம் திகதி மும்பை நகரின் தாஜ்லாண்ட்டில் நடந்த விழாவில் வழங்கப்பட்டது.

இரண்டாவது தடவையாக செலிங்கோ லைஃப் இந்த உயர் விருதைப் பெற்றுள்ளது. கடந்த வருடம் எல்லா வகைப்படுத்தலுக்குமான ஒட்டுமொத்த சிறந்த வர்த்தகச் சின்னத்துக்கான விருதை இந்த நிறுவனம் வென்றது.

செலிங்கோ லைஃப்பின் ''ஆரோக்கியமான தேசம்'' என்ற முன்னோடி சமூக சந்தைப் படுத்தல் திட்டத்துக்கான ஒரு அங்கீகாரமாகவே 2010 உலக வர்த்தகச் சின்ன காங்கிரஸ் மாநாட்டில் சமூக சந்தைப்படுத்தலுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.



செலிங்கோ லைஃப்பின் நிகழ்வுகள் மற்றும் ஊக்கு விப்பு சிரேஷ்ட முகாமையாளர் எச்.ஏ.சுரவீர (இடதுபக்கத்தில்) மற்றும் வர்த்தகச் சின்ன முகாமையாளர் ரஜீவ் டேவிட் (வலது பக்கத்தில்) ஆகியோர் மும்பாயில் இடம்பெற்ற விருதுவழங்கும் விழாவில்.

மும்பையில் வழங்கப்பட்ட சமூக சந்தைப்படுத்தலுக்கான விருதை செலிங்கோ லைஃப் சார்பாக அதன் நிகழ்வுகள் மற்றும் ஊக்கு விப்புக்கான சிரேஷ்ட முகாமையாளர் எச்.ஏ.சுரவீர மற்றும் வர்த்தகச்சின்ன முகாமையாளர் ரஜீவ் டேவிட் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். இம்முறை இடம் பெற்ற உலக வர்த்தக இலச்சினை காங்கிரஸில் 161 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

செலிங்கோ லைஃப்பின் தனிச்சிறப்பு மிக்க சமூக சந்தைப்படுத்தல் முன்னோடித் திட்டமான ''வைத்திய ஹமுவ'' (வைத்தியரை சந்தியுங்கள்) வருடாந்தம் நாடு முழுவதும் சராசரியாக 60 இலவச மருத்துவ முகாம்களை நடத்துகின்றது. கடந்த 7 வருட காலமாக இந்த முகாம்களின் மூலம் 90,000 இற்கும் அதிகமான மக்கள் மருத்துவப் பரிசோதனைகளையும், மருந்துகள் தொடர்பான ஆலோசனைகளையும் பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக விருப்பத்திற்குரிய இலங்கையின் இணையத்தளமாக www.sliit.lk தெரிவு

இலங்கையின் மிக விருப்பத்திற்குரிய ஆங்கில இணையத்தளமாக இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்தின் இணையத் தளமான www.sliit.lk தெரிவுசெய்யப்பட்டுள்ளது. 8000 இற்கும் அதிகமான இணையத் தளங்கள் இந்த விருதுக்காக போட்டியிட்டன.

இந்த விருது வழங்கும் நிகழ்வு தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக .lk இணைய பதிவு மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கான விருதுகள் அண்மையில் வழங்கப்பட்டன.

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இணையத்தளமொன்று இந்த விருதுக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தமை இதுவே முதல் தடவையாகும். இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகம் அதன் பட்டக் கீழ்ப்படிப்பு மற்றும் மாஸ்டர்ஸ் கற்கைகளுக்கு மாணவரிடத்தே சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

கல்வியகத்தின் இணையத்தளத்தை மென்பொருள் பொறியியல் பிரிவு பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நீதித்துறையில் நிறைவேற்று அதிகாரத்தின் அழுத்தமும் தலையீடும் இருக்கக் கூடாது

## சுமந்திரன் எம்.பி வலியுறுத்து

கொழும்பு, டிச.7

நீதித்துறையில் நிறைவேற்று அதிகாரத்தின் அழுத்தமும் தலையீடும் இருக்கக் கூடாது. நீதித்துறை தன்னிச்சையாகவும் சுதந்திரமாகவும் செயற்பட இடமளிக்கப்பட வேண்டும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கடந்த சனிக்கிழமை உரையாற்றும்போதே சுமந்திரன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இன்று அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம் என்பனவற்றைப் பயன்படுத்தி 18 வருடங்களுக்கு மேல் தமிழ் இளைஞர், யுவதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கெதிராக எந்தவொரு குற்றச்சாட்டுகளும் இல்லை. வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை. இது சட்ட விரோதமான ஒரு விடயமாகும். சிறைச்சாலைகளிலும், தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகள், சரணடைந்தவர்கள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் வெளிநாடுகளில் தவறான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படுமா என வெளிநாட்டு ஊடகங்கள் மீண்டும் மீண்டும் கேள்விகளைக் கேட்டபோது அவர் உண்மைகளைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக் குழு பொறுப்புக் கூறும் என்றும் பதில் அளித்திருக்கிறார். ஆனால் இவர் கூறும் நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு எந்தவிதமான பொறுப்புக் கூறவும் ஆணையிடவும் கூடிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. இப்படியான நிலையில் வெளிவிவகார அமைச்சர் வெளியுலகிற்குத் தவறான விளக்கம் கொடுத்துள்ளார்.

உண்மைகளைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் ஆயிரக்கணக்கான தாய்மாரும், மனைவிமாரும், சரணடைந்த மற்றும் காணாமல்போனவர்கள் எங்கே இருக்கின்றனர் என்பது தெரியவில்லை. இவர்கள் தொடர்பாக உண்மை கண்டறியப்பட வேண்டும் - என்று சாட்சியம் அளித்துள்ளனர்.

இந்தச் சாட்சிகளையும், ஆதாரங்களையும் அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் நடத்தப்படவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார் சுமந்திரன் எம்.பி.

இதற்கென அமைக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவுக்கு பொறுப்புக் கூறவும் ஆணை வழங்கவும் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை சரண் அடைந்த இளைஞர், யுவதிகளில் பெரும் தொகையானவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்க வேண்டும் எனவும் சுமந்திரன் எம்.பி கோரிக்கை விடுத்தார். (சி)

## தடைசெய்யப்பட்ட பாக்கு விற்ற இருவருக்கு தலா 5 ஆயிரம் அபராதம்

கைதடி, டிச.7

பாடசாலை அருகே உள்ள தமது கடைகளில் தடை செய்யப்பட்ட பாக்குத் தூளினை விற்பனை செய்த வர்த்தகர்கள் இருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்தனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை கைதடியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

குற்றத்தை ஒப்புக் கொண்ட வர்த்தகர்கள் இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதமாக அறவிட்டதுடன் எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். (ம-288)

## பன்றிக்கு வைத்த மின் பொறியில் சிக்கி தந்தையும் மகனும் பரிதாப மரணம்

மாத்தளை டிச.7

மாத்தளை, முவகலந்த பிரதேசத்தில் காட்டுப் பன்றிக்காக வைக்கப்பட்டிருந்த மின் பொறியில் சிக்கிய தந்தையும் மகனும் மரணமாகியுள்ளதாக மாத்தளை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தென்னமுவகல பிரதேச வாசியான ஜீ.ஜீ.குலரத்ன (43) எனும் நான்கு பிள்ளைகளின் தந்தையும் அவரது மூத்த மகனான ஜீ.ஜீ.உதார குலரத்ன (22) என்பவருமே இவ்வாறு பரிதாப மரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

அவர்களாலேயே வைக்கப்பட்ட பொறியில் பன்றி சிக்கியதா எனத் தெரிந்து கொள்ள தந்தை முதலில் சென்றிருக்கிறார். நீண்ட நேரமாக அவர் திரும்பி வராததால் அவரைத் தேடிச் சென்ற மகன் ஏற்கனவே மின்தாக்கிப் பலியாகியிருந்த தந்தையைக் கண்டு பதற்றமடைந்து அவரைத் தொடப் போன போது மின் தாக்கத்துக்கு உள்ளனார்.

இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்தவாறே மரணமாகியிருந்ததாகவும் அவர்களது சடலங்களுக்கு சற்று அப்பால் இறந்து போன காட்டுப்பன்றியொன்றும் கிடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கௌரவிப்பு....



உயர்வு: மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பலதுறைகளிலும் சிறந்த வீரனாகத் திகழ்ந்த மாணவன் ப.சுதர்சனுக்கு 2010 ஆம் ஆண்டிற்கான நினைவுப் பரிசான பதக்கத்தை விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி சிவதாஸ் சிவமங்கை அணிவிக்கிறார். அருகில் அதிபர் செ.பேரின்பநாதன் காணப்படுகிறார். (204)

## கோழி இறைச்சி, முட்டையை இறக்குமதி செய்ய நடவடிக்கை

கொழும்பு, டிச. 7

இந்தியா மற்றும் பிரேஸிலிலிருந்து கோழி இறைச்சி மற்றும் முட்டையை இறக்குமதி செய்ய வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது .

அடுத்தவாரம் பிரேஸில், இந்தியாவில் இருந்து இவற்றை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சு தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலங்களில் கோழி இறைச்சி மற்றும் முட்டை விலைகள் அதிகரிப்பதை கட்டுப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. முட்டை மற்றும் கோழி இறைச்சிப் பாவனை பண்டிகைக் காலத்தில் அதிகரிப்பதால் அவற்றின் விலைகளும் உயர்வடைகின்றன.

இதேவேளை, பெரிய வெங்காயம் இறக்குமதி செய்வது குறித்தும் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## வடக்கு மக்களின் நலனை மேம்படுத்த ஆஸ்திரேலியா ரூ.5 கோடி நிதி உதவி

கொழும்பு, டிச.7

வட பகுதி மக்களின் நலன்களை மேம்படுத்துவதற்கு ஆஸ்திரேலியா ரூபா 5 கோடி வழங்கத் தீர்மானித்துள்ளது.

யுத்தம் காரணமாக வடக்கு மக்கள் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், மக்களின் உளச் சுகாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதற்காக ரூபா 5 கோடி வழங்கப்படவுள்ளது எனவும் இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதர் கெத்தி க்ளுக்மன் தெரிவித்துள்ளார்.சுமார் ஒரு வருட காலத்திற்கு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது. (சி)

## லண்டனில் ஜனாதிபதிக்கு அவமதிப்பு; ஐ.தே.கட்சி மீது கோபம் வேண்டாம்

### தயாசிறி ஜயசேகர

கொழும்பு, டிசெ. 7

பிரிட்டனில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவமானப்படுத்தப்பட்டமைக்கு அவர் ஐ.தே.க. மீது கோபப்படத் தேவையில்லை. அவரை அங்கு அழைத்துச் சென்று இந்த நிலைக்குத் தள்ளியது யார் என்று தேடிப் பிடித்துத்தான் தாக்க வேண்டும் என்று ஐ.தே.கவின் எம்.பி. தயாசிறி ஜயசேகர சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் கூறினார்.

வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முழு நாட்டுக்குமே ஜனாதிபதியாவார். அவரை பிரிட்டன் அவமதித்திருந்தால் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய நாம் தயார்.

ஆனால், ஜனாதிபதியை அழைத்தது வேறு தரப்பு. மாணவர்கள் அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அங்கு அழைத்துச் செல்லப்பட்டு அவமதிக்கப்பட்டுள்ளார். இதற்கு ஜனாதிபதி ஐ.தே.க மீதோ அல்லது ஜயலத் ஜயவத்தன மீதோ கோபித்து வேலையில்லை. ஜனாதிபதியை பிரிட்டனுக்கு அழைத்துச் சென்றது யார் எனத் தேடிப் பிடித்து அவர் மீதுதான் தாக்குதல் நடத்த வேண்டும்.

ஜனாதிபதியை ஜயலத் ஜயவர்த்தன அவமதித்திருந்தால் அவருக்கு எதிராக நாம் எதிர்த்து நிற்கத் தயார் - என்றார்.

## விழிப்புணர்வு....



ஊக்குவிப்பு: சர்வதேச எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு கடந்த புதன்கிழமை தியாகி அறக்கொடை நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன் எய்ட்ஸ் தினம் தொடர்பாக நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் ஒருவருக்குப் பரிசு வழங்குகிறார். (201

## மாகாணசபை வைத்தியசாலைகளிலும் வெளிநோயாளர்கள் பிரிவு இரவு 8 மணிவரை

கொழும்பு, டிச.06

மத்திய அரசின் கட்டுப்பாட்டிலிருக்கும் 25 வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகள் தற்போது இரவு 8 மணிவரை இயங்குகின்றன.

இதுபோல் மாகாணசபை வைத்தியசாலைகளிலும் அந்த நடவடிக்கையை விரைவில் பின்பற்றுமாறு சுகாதார அமைச்சு அவ்வைத்தியசாலைகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

மாகாணசபை வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இந்நடைமுறையைப் பின் பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்சமயம் இரவு 8 மணி வரை திறந்துள்ள 25 வைத்தியசாலைகளின் வேலை நேரத்தை படிப்படியாக ஒவ்வொரு மணித்தியாலம் நீடிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்படி தகவலைத் தெரிவித்தார். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா இராஜேந்திரன்
(வைரமுத்து மாமா)

மலர்வு
20.07.1929

உதிர்வு
22.11.2006

**திதி: 07.12.2010**

அன்புடன் எம்மை வளர்த்து
அறிவினை எமக்கூட்டி
ஆற்றல்கள் ஆயிரம் ஊட்டி
காவல் தெய்வமாய் இருந்து - எம்மை
காத்து வளர்த்த எம் அன்பு அப்பாவே!
ஆண்டுகள் நான்கு என்ன?
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
மறவோம் உம்மை நாம் என்றும்

இன்று (07.12.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

830, கே.கே.எஸ் வீதி
(குட்டாதெருச் சந்தி),
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட வலி.வடக்கில் போக்குவரத்து வீதிகள் துரிதகதியில் புனரமைப்பு

## பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.7

வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளுக்குமான வீதிகள் துப்புரவு செய்யும் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

வித்தகபுரத்தில் கடந்த இரண்டு தினங்களில் மூன்று வீதிகள் 'புல்டோசர்' மூலம் துப்புரவாக்கப்பட்டுள்ளதாக வலி.வடக்குப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய பகுதிகளில் தற்போது பொது மக்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதேபோல் மேற்படி மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளிலும் வீதிகளைத் துப்புரவு செய்யும் பணிகள் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை முதல் வித்தபுரம் பகுதிகளுக்கு செல்வதற்கான பாதைகள் பற்றைகள் படர்ந்து அடர்ந்து ஓங்கி வளர்ந்திருப்பதால் அவற்றைப் 'புல்டோசர்' மூலம் துப்புரவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்போது வித்தகபுரத்தில் விழிசிட்டி வீதி, கூட்டுறவு வீதி, கனகசபை வீதி என்பன துப்புரவாக்கப்பட்டுள்ளன.

இன்னும் இரண்டு வாரங்களில் இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகளும் துப்புரவு செய்யப்பட்டு பணிகள் முழுமையாக்கப் பூர்த்தி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-9)

# மானிப்பாய் கோவிற்பற்றுப் பகுதியில முதியோர் இல்லம் அமைக்க ஏற்பாடு

சண்டிலிப்பாய், டிசெ.7

முதியோர்களின் நலன் கருதி மானிப்பாய் கோவில் பற்றுப் பகுதியில் முதியோர் பராமரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான முயற்சியில் யாழ். மாவட்ட மூத்த பிரஜைகளின் பேரவைத் தலைவர் சிவகுமார் ஈடுபட்டுள்ளார். நவாலியில் பல வருடங்களாக சிறுவர் பராமரிப்பு நிலையமாக இருந்து இயங்காமலிருக்கும் மணிமண்டபத்தை பெறுவதற்காக சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளார்.

வலி.தென் மேற்குப் பிரதேசத்திலுள்ள முதியோர் சங்கங்களில் அங்கத்தவர்களாக இருப்பவர்களில் அநேகமானவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் உட்பட்டவர்களாவர். இவர்களில் பலர் எவருடைய உதவியுமின்றி வாழ்ந்து வருகின்றார்கள்.

நோயினால் பாதிக்கப்படும் போது இவர்களைப் பராமரிப்பதற்கு எவரும் முன்வராததால் இவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகவுள்ளது.

ஆதரவின்றி அல்லற்படும் முதியோர்களின் நலன் கருதி இவர்களைப் பராமரித்து உணவு வழங்குவதற்கு வெளிநாட்டிலுள்ள ஒருவர் முன்வந்ததைத் தொடர்ந்து முதியோர் பராமரிப்பு நிலையம் அமைப்பதற்கான முயற்சியில் பேரவைத் தலைவர் ஈடுபட்டுள்ளார். சிறுவர் பராமரிப்பு நிலையமாக இயங்கி வந்த மணிமண்டபக் கட்டடத்தை இதற்குப் பயன்படுத்துவதற்காகச் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளார். (ம-115)

# புல்லுக்குளத்தை மீண்டும் மூடியது சல்பீனியா



யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ் முனிஸ்வரன் வீதியில் உள்ள புல்லுக்குளத்தில் மீண்டும் சல்பீனியாத் தாவரம் மூடி வளர்ந்துள்ளது. உரிய அதிகாரிகள் இது தொடர்பாகத் தொடர் நடவடிக்கை எடுக்காமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புல்லுக்குளப் பகுதி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும் பொழுது போக்கு இடமாக மாற்றவும் யாழ் மாநகர சபையால் புனரமைக்கப்பட்டு வந்தது. துரித வேகத்தில் மேற்கொள்ளப்பட்ட இக்குளத்தின் புனர்நிர்மானப் பணிகள் தற்போது கைவிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் குளத்தில் மீண்டும் சல்பீனியா படர்ந்து காணப்படுகிறது.

இதே வேளை இப்பகுதிகளில் பொலித்தீன் கழிவுகள் உட்பட கழிவுகள் கொட்டப்படுகின்றமையால் நுளம்புகள் பெருக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் உரிய அதிகாரிகள் இதற்கான கவனம் எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர். (ம-26-135)

# தொடர்ந்து பெய்யும் அடைமழையால் மாதகலில் 11 குடும்பங்கள் இடம்பெயர்வு

சண்டிலிப்பாய், டிசெ.7

தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக மாதகல் மேற்கிலுள்ள கத்திவெட்டுவான் முகாமிற்குள் மழை வெள்ளம் புகுந்ததால் முகாமிலுள்ள 11 குடும்பங்களைச் சேர்ந்த 45 உறுப்பினர்கள் அருகாமையிலுள்ள மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்குப் பாதுகாப்புப் படையினர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளார்கள்.

இதே நேரம் வலி.தென் மேற்குப் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் இவர்களுக்கு உணவு வழங்குவதற்கான ஒழுங்கு களை மேற்கொண்டுள்ளனர்.

மழை வெள்ளம் காரணமாக மானிப்பாய், கட்டுடை, மாதகல், பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், சங்குவேலி, சுதுமலை ஆகிய இடங்களிலுள்ள நெல் வயல்களில் வெள்ளம் நிரம்பி நிற்கின்றன.

சில வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தாழ்ந்த பிரதேசங்களான சாவல்கட்டு, காக்கை தீவு, அந்திக்குடி ஆகிய இடங்களிலுள்ள குடியிருப்புகளில் வெள்ளம் தேங்கிக் காணாப்படுகின்றது.

ஐந்து கண்பாலம் திருத்த வேலை நடைபெறுவதால் பாதசாரிகளுக்கும், சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்களுக்குமாகத் தற்காலிகமாக தெற்குப்பக்கமாக அமைக்கப்பட்ட பரதையும் சேதத்திற்குள்ளானது.

இதனால் சண்டிலிப்பாய்க்கும் மானிப்பாய்க்குமான போக்குவரத்துத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களுக்கு மாற்றுப் பாதையாகப் பயன்படுத்தப்பட்டு வந்த சண்டிலிப்பாய், உடுவில் டச்சு வீதி, வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளதாலும் மழை வெள்ளத்தாலும் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு மோசமாக சேதமடைந்துள்ளது. (ம-115)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## போதனா வைத்தியசாலை நடைபாதையில் வெள்ளம்

யாழ்ப்பாணம், டிசெ.7

தற்போது பெய்து வரும் மழையினால் யாழ். போதனா வைத்தியசாலை நடைபாதைகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

தற்போது அமைக்கப்பட்ட இந்த புதிய நடைபாதைகளின் கூரைகள் ஊடாக ஒழுக்கு ஏற்படுவதால் நடைபாதை இடங்களில் வெள்ளம் தேங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (204-26)

# வன்னி மாணவர்களுக்கு நிதி சேகரிப்பு

கொழும்புத்துறை, டிசெ.7

போரினால் பாதிக்கபட்ட வன்னிப் பிரதேச மாணவர்களுக்கு உதவும் முகமாக யாழ்.மறை மாவட்ட இளையோர் ஒன்றியத்தினால் நிதி சேகரிப்பு மற்றும் பாடசாலை உபகரணங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. கடந்த மாதம் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை யாழ் மறைமாவட்ட ஆலயங்களுக்கு விடுத்த சுற்று நிருபத்தில் வன்னி மக்களின் வாழ்வாதார கட்டுமான பணிகளுக்கு உதவுமாறு மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.(204-135)

# நெல்லியடி - மாலை சந்தி வீதி நாளை முதல் மூடப்படும்

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ்- பருத்தித்துறை வீதியின் விஸ்தரிப்புப் பணிகளுக்காக நெல்லியடி சந்தியில் இருந்து மாலை சந்தி வரை நாளையிலிருந்து யாழ்- பருத்தித்துறை வீதியை (ஏபி20) மறு அறிவித்தல் வரை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளையிலிருந்து சகல விதமான வாகனங்களும் பொது மக்களும் மறு அறிவித்தல் வரை மாற்றுப் பாதையாக வதிரி சந்திவரை பயணம் செய்து பின் மாலை சந்தியை அடையுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் கேட்டுள்ளார்.

இதனால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக மனம் வருந்துவதாக அவர் தெரிவித்தார். (ஜ-236)

# வலுவிழந்தோருக்கான விசேட பாதைகள் முக்கிய இடங்களில் அமைக்கப்பட வேண்டும்

## வலுவிழந்தோர் சங்க உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.7

வெளிநாடுகளைப் போல் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வலுவிழந்தோர்க்குத் தேவையான இலகுவான போக்குவரத்துப் பாதைகளை பல்கலைக் கழகம், வங்கி போன்ற இடங்களில் அமைத்துக் கொடுக்க வேண்டுமென வலுவிழந்தோர் சங்கத்தின் உறுப்பினர் துரைரட்ணம் தெரிவித்தார்.

ஆடிய பாதம் வீதியில் அமைந்துள்ள வலுவிழந்தோர் சங்கத்தின் விடுதியில் நேற்று இடம் பெற்ற வலுவிழந்தோர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் வலுவிழந்தோருக்கென புதன் கிழமை தோறும் இலவசமாக எமது சங்கத்தின் உதவியுடன் மருத்துவ சிகிச்சைகள் இடம்பெறுகின்றன. வன்னி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கிறோம்.



இவ்வாறான சேவைகளை நாம் வழங்கினாலும் சங்கத்திற்கென நிரந்தரக் காணி இல்லாதது எமது செயற்பாடுகளுக்கு தடையாக உள்ளது. நிறுவனங்களோ அல்லது அரசோ இதனை முன்னுரிமைப்படுத்தி உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சங்க உறுப்பினர்கள் மற்றும் சங்க உத்தியோகத்தர்கள், வலுவிழந்தோர் 25 பேர் ஆகியோர் கலந்துகொண்டனர். (201-313)

## உயிர் காப்போர்.....



தலை சிறந்த பணி: திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்திரு எம்.மரியசேவியர் அடிகளாரின் பிறந்ததினத்தையும் திருமறைக் கலாமன்றத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு இரத்ததான நிகழ்வு கலாமன்றப் பணிமனையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (207-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
மன நிம்மதி பாதிக்கலாம். ஒருவர் உங்களிடம் கடனாகக் கொடுத்த பணத்தை உடனே திருப்பக் கேட்கலாம். பேராசைப்பட்டு எந்த விடயங்களிலும் இறங்க வேண்டாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். விமர்சனங்களை தவிர்ப்பது நல்லது. சில பொருள்களை ஆசைப்பட்டு வாங்கியும் திருப்தி இல்லாமல் போகலாம்.

**இடபம்:**
மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடி கொள்ளும் நாள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். மனைவி, குழந்தைகளுடன் பொழுது போக்குவீர்கள். சிலரைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள்

**மிதுனம்:**
உறவினர் ஒருவருக்காக உங்களுக்குத் தெரிந்த ஒருவரிடம் உதவி கேட்கலாம். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் யோசனைகளுக்கு ஆதரவு தெரிவிப்பர். விருந்தினர்கள் வருகையால் சில வேலைகளை மாற்றி அமைக்க நேரிடலாம். காலை முதல் மாலை வரை அடுக்கடுக்காகப் பல வேலைகளைச் செய்வீர்கள். உதிரி வரவு கிட்டும்.

**கடகம்:**
உங்களுக்கு தெரியாமல் சில தவறுகளைச் செய்துவிட்டு அவமானத்திற்கு ஆளாகலாம். வெறுப்பு, விரக்தியால் சிலரிடம் வேதாந்தம் பேசுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் கேட்ட சில பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். வாங்கிய கடன் மிகுதி ஒன்றை திருப்பிக் கொடுப்பீர்கள்.பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிங்கம்:**
சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். பந்தா காட்டும் உறவினர்களைப் பார்த்து எரிச்சல் அடையலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். தாய் வழியில் அன்புத் தொல்லைகள் நேரும். நண்பர் ஒருவருக்குத் தெரிந்தவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். விரக்தி உண்டாகும்.

**கன்னி:**
மதிப்பு, கௌரவத்திற்குப் பங்கம் வராமல் நடந்து கொள்வீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். நீங்கள் ஆதாயம் பெற நண்பர்கள் சிலர் உதவிகரமாக இருப்பர். எதிர்பார்ப்பு ஒன்று எளிதில் நிறைவேறும். மூத்த உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். சிலர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். தைரியம் கூடும்.

**துலாம்:**
குடும்ப உறுப்பினர்கள் இடையே மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சிலரிடம் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொள்ளலாம். பிள்ளைகளின் எண்ணங்களை அறிந்து அதற்கேற்ற வகையில் நடந்து கொள்வீர்கள். திட்டமிட்ட காரியம் ஒன்றை நாளை செய்யலாம் எனத் தள்ளி வைக்கலாம்..

**விருச்சிகம்:**
நண்பர்கள் வட்டம் விரிவடையும். தம்பதியர் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும். அதிக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடியும். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள். வெளியூரில் இருக்கும் ஒருவரைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசுவீர்கள்.

**தனுசு:**
உறவினர்கள் அல்லது நண்பர்கள் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிகளுக்கு ஆள்படலாம். உங்களுக்கு அனுபவம் இல்லாத விடயம் ஒன்றை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வீர்கள். மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். கனவுத் தொல்லையுண்டு

**மகரம்:**
தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். பிரியமான உறவினர்களின் சந்திப்பு நிகழும். கடந்த காலத்தில் உங்களை விமர்சித்த நண்பர் ஒருவர் இப்போது பாராட்டலாம். உங்களுக்காக அல்லது மற்றவர்களுக்காக ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். விருந்து, விசேஷங்களால் சந்தோஷம் அடைவீர்கள்

**கும்பம்:**
ஓய்வாக இருக்க நேரமில்லாமல் ஏதாவது வேலைகளை செய்து கொண்டிருப்பீர்கள். உறவினர்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். நாளை நடக்க உள்ள காரியம் ஒன்றுக்காக இன்றே முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். குதூகலம் குடிகொள்ளும் நாள். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்

**மீனம்:**
ஏமாற்றங்களை தவிர்க்க எதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். நண்பர் ஒருவர் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றைப் பற்றி உங்களிடம் சொல்லலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும்.

## வெற்றிக்குப் பரிசு....




கௌரவிப்பு: பண்டத்தரிப்பு பரிஸ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் இந்த ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 25 மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா மேற்படி சங்கத்தால் நடத்தப்பட்டது.நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களுடன் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், சங்கப் பொது முகாமையாளர், நெறியாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோர் நிற்கின்றனர். (201-130)

# எய்ட்ஸ் தின போட்டி முடிவுகள்

தென்மராட்சி, டிசெ.7

சர்வதேச எய்ட்ஸ் தினத்தையொட்டி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் நடத்தப்பட்ட எயிட்ஸ் மற்றும் பாலியல் நோய் விழிப்புணர்வுத் திறந்த போட்டியில் 174 பேர் சரியான விடைகளை எழுதியுள்ளனர்.

உதவிப் பிரதேச செயலர் முன்னிலையில் இவர்களின் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவர்களின் விவரம் வருமாறு:-

செ. சுகன்யா (உசன் இராமநாதன் ம.வி), இ. நித்தியா (வரணி வடக்கு), அ. பாமினி (கச்சாய் தெற்கு)

**ஆறுதல் பரிசு பெற்றோர்**

செ. நிக்ஸன் (பாலாலி வடக்கு), பி. அகல்யா (மட்வில் தெற்கு), த.கஸ்தூரி (மீசாலை கிழக்கு), க.கணேஸ்வரி (மீசாலை கிழக்கு), எஸ். செல்வகுமார்(டச்சு வீதி சாவகச்சேரி), எஸ். பிரகாசினி (கொக்குவில் மேற்கு), ஆ. நிஷாந்தி ( கரம்பைக் குறிச்சி), எம்.எச். எம் ஹனா (ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி), ஸ்ரீ.மதிவக்சலா (நுணாவில் கிழக்கு), ஆர். தீபா (வரணி வடக்கு)

முதலாம் பரிசாக 5ஆயிரம் ரூபாவினை தென்மாரட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரும், இரண்டாம் பரிசாக 3ஆயிரம் ரூபாவினை சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரும், மூன்றாம் பரிசாக 2 ஆயிரம் ரூபாவினை சாவகச்சேரி பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினரும் ஆறுதல் பரிசுகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சிக் கிளையினரும் வழங்கியிருந்தனர். (204-207)

# மனநிலை பாதிக்கப்பட்டவர்கள்

அது ஒரு பைத்தியக்கார வைத்தியசாலை. ஓரளவு மனநிலை சீரடைந்த மூன்று நபர்கள் ஒரே அறையில் தங்கியிருந்தனர். ஒருநாள் காலை கண்விழித்த முதல் பைத்தியக்காரன் தன் தலைத் தொப்பியைக் காணாமல் அங்கும் இங்கும் பரபரப்பாகத் தேடிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்து இரண்டாவது பைத்தியக்காரன் ஹி... ஹி... ஹி... என்று கையைத் தட்டி பல்லைக் காட்டிக் குதித்துக் குதித்துச் சிரித்தான். ''ஏன் சிரிக்கிறாய்'' என்று மூன்றாவது பைத்தியக்காரன் கேட்ட போது. '' நான் தானே தொப்பியை ஒளித்து வைத்திருக்கிறேன்'' என்று கூறித் துள்ளிக் குதித்தான் இரண்டாவது பைத்தியக்காரன்.

அன்றிரவு தூங்கும் போது, தொப்பியை இழந்த முதல் பைத்தியக்காரன், தொப்பியை ஒளித்த இரண்டாவது பைத்தியக்காரனின் தலையை அரிவாளால் வெட்டி ஒளித்து வைத்தான். அதைப் பார்த்துக்கொண்டே இருந்த மூன்றாவது பைத்தியக்காரன் ஹி... ஹி... என்று கையைக் கொட்டியபடி ''நேற்று நீ தொப்பியைத் தேடினாய் தானே? இவன் நாளைக்கு எழுந்ததும் தலையைக் காணவில்லை என்று தேடப் போகிறானே.. ஹை.... தேடப்போகிறானே'' என்று எகிறிக் குதித்தான்.

கதை எப்பீடி? இதுதான் இன்று உலகம் முழுவதும் நடக்கிறது.

ஆனால் இந்தப் பைத்தியக்காரர்களை; மதத் தலைவர்கள், மதகுருமார்கள், இறைவன் அருள் பரப்புபவர்கள் என்று கூட்டம் கூட்டமாகப் பைத்தியங்கள் கொண்டாடுவதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. மதங்களின் பெயரால் கடவுளின் பெயரால் பல லட்சம் மக்கள் பல காலமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கடவுளைக் காப்பதற்காகத் தாங்கள் போர் புரிகின்றனர் என்று மதகுருமார்கள் ஓயாமல் உளறுகிறார்கள். சர்வ வல்லமை பொருந்திய கடவுள் பலவீனமான இந்த மதகுருமார்களை நம்பியா உயிர் வாழ்கிறார்? இவர்கள் காப்பாற்றாமல் போனால் பாவம் அந்தக் கடவுள் செத்துப் போய் விடுவாரா? கடவுளைக் காப்பாற்றுவோம் என்று இந்தப் பைத்தியங்கள் உளறுவதும் அதைக் கேட்டுப் பல பைத்தியங்கள் கை தட்டுவதும் வேடிக்கையாக இருக்கிறது. அதேசமயம் வேதனையாகவும் இருக்கிறது.

மதத்தின் பெயரால் சண்டைகள், மரணங்கள், மரணத்திற்கான பழிவாங்கல்கள், பழிக்குப் பழி என்று வெட்டிச் சாய்க்கும் இந்தக் கொடூரம் கடவுளின் பெயரால் நடக்கலாமா? இதற்கெல்லாம் மூலகாரணம் கடவுளுக்குத் தாங்கள் மட்டுமே முகவர்கள் என்று நம்பும் மூடமூர்க்க மதகுருமார்களே! இவர்களைவிட்டு மக்கள் விலகி நிற்க வேண்டும். ஆழ்ந்த படிப்பறிவும், உண்மை மெய்யுணர்வும்மிக்க எந்த ஞானியும் இந்த மதகுருமார்களின் அராஜகச் செயலை ஆதரிக்கமாட்டார்கள். போலி குருமார்கள் தங்களை நிலை நாட்டிக்கொள்ள கடவுள் தங்களை நம்பிக் காலூன்ற விரும்புகிறார் என்பது போல் காட்டிக் கொள்கிறார்கள்.



இந்துக்களின் கடவுள், இஸ்லாமியரின் கடவுள், கிறிஸ்துவரின் கடவுள் என்று நிஜமாகவே கடவுளர்கள் இருக்க முடியுமா? மனிதர்களைச் சண்டை போடச் செய்து அந்தக் கடவுள்களுக்கெல்லாம் உலகம் உண்மையில் தங்களில் யாருக்கு உரியது என்பதை நிலைநாட்ட விரும்புவார்களா? கடவுளைக் காப்பாற்ற மனிதர்கள் சாகவேண்டுமா? ஏன் இது குறித்துப் பலர் சிந்திப்பதே இல்லை? யோசியுங்கள்.

ஒரு வீட்டு வாசலில் இரண்டு பேர் சத்தம் போட்டு சட்டையைக் கிழித்தபடி அசிங்கமாகச் சண்டை போட்டுக்கொண்டிருந்தனர். பத்து வயதுச் சிறுவன் பரிதாபமாக இருவரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த வழியாகப் போன பெரியவர் ஒருவர் அந்தப் பையனைப் பார்த்து ''அங்கே யார் சண்டை போடுகிறார்கள்?'' என்றார்.''என்னுடைய அப்பா'' என்றான் சிறுவன். ''அதில் யார் உன்னுடைய அப்பா?'' என்றார் பெரியவர். ''அதுதான் சண்டை போடக் காரணமே" என்றான் சிறுவன். அப்பா பெயர் தெரியாத இந்தச் சிறுவனுக்கும் சண்டைபோடும் மதகுருமார்களுக்கும் வித்தியாசமே இல்லை.

அப்பா பெயர் தெரியாத அநாதையின் நிலையில் உலகத்தை நிறுத்திச் சண்டை போடும் மதகுருமார்களை ''கடவுளே.... மன்னிக்காமல் தண்டிக்க வேண்டுகிறோம்''. ஓம், ஆதமன், ஆமீன்.. அட அனைத்தும் ஒரே மாதிரி ஒலிக்கிறதே.

**சுகி சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு பின்தள்ளிப் போகப் போக எதிர்ப்பு மேலும் வலுவடையும்

உலகின் கண்களும் காதுகளும் கடந்த சில நாள்களாக பிரிட்டன் நாட்டை நோக்கியே இருந்து வருகின்றன. அதற்கு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. ஒன்று அங்கு புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள். அடுத்தாக அங்கிருந்து ஒளி பரப்பாகும்சனல்-4 தொலைக்காட்சிச் சேவை.

அதற்கு அடுத்தாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரிட்டனுக்கு மேற்கொண்ட விஜயம்.

இலங்கைக்கு எதிராக மட்டுமல்ல ஜனாபதியான மகிந்த ராஜபக்ஷவுக்கும் எதிராக உலகெங்கும் உள்ள மனித உரிமை அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றம் தொடர்பான மனுக்கள், ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நிபுணர்கள் குழுவால் எதிர்பார்க்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் ஜனாதிபதி மகிந்த பிரிட்டன்விஜயத்தைஆரம்பித்தார்.

ஏற்கெனவே திட்டமிட்டது போல பிரிட்டனில் வாழும் தமிழர்கள் அங்கு இயங்கிவரும் பிரிட்டன் தமிழர் பேரவையினரால் வழிநடத்தப்பட்டு ஜனாதிபதியின் வருகை தொடர்பான தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து அவரைப் பிரிட்டனில் வைத்து கைது செய்யும்படி அந்த நாட்டு அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அத்துடன் ஜனாதிபதி மகிந்த அந்த நாட்டுக்குள் பிரவேசிக்கும் போது அவரது வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் செய்யவுள்ளதைப்பற்றியும் அவர்கள் முன்னறிவித்தல் கொடுத்திருந்தார்கள்.

### எதிர்பாராத ஆர்ப்பாட்டம்

ஆனால் பிரிட்டனுக்கு பயணம் செய்தார் ஜனாதிபதி மகிந்த. யாருமே எதிர்பார்த்திருக்காத வகையில் லண்டன் ஹீத்ரூ விமான நிலையத்தில் கூடிய ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் ஜனாதிபதி மகிந்தவிற்கு எதிராகக் கோசங்களை எழுப்பிய வண்ணம் மிகவும் நிதானமாகத் தங்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன் காரணமாக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகப் பிரிட்டன் பொலிசாரால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஹீத்ரூ விமான நிலையத்தில் விருந்தினர் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு பிரிட்டன் அரசும் அதனோடு இணைந்த பொலிஸ் திணைக்களமும் அனுமதி வழங்கியிருந்தன. இதனால் ஜனாதிபதி மகிந்த ஹீத்ரூ விமான நிலையத்தில் இறங்கியதும் புலம்பெயர் தமிழர்களின் ஆர்ப்பாட்டம் திட்டமிட்ட முறையில் நடைபெற்றது. இதில் பல நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் கலந்து கொண்டனர்.

### சனல் 4 கொடுத்த அதிர்ச்சி வைத்தியம்

ஜனாதிபதி மகிந்த லண்டனுக்குச் சென்று இறங்கியது தான் தாமதம் மற்றொரு கைங்கரியமும் இடம்பெற்றது. சந்தர்ப்பம் வரும் வரை காத்திருந்தது போல சனல் -4 என்ற தொலைக்காட்சி சேவை வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான புதிய வீடியோ காட்சிகளை வெளியிட்டது. இது அந்தத் தொலைக்காட்சி முன்னர் வெளியிட்ட சில வீடியோக்களை விட வித்தியாசமானதாகவும் கொடூரம் நிறைந்தாகவும் இருந்தது. படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்படுவது போன்றும், யுவதிகள் கொலைசெய்யப்பட்ட நிலையில் நிர்வாணக் கோலத்தில் கிடப்பதும் அதில் அடங்கியிருந்தது. போர்க் குற்றங்களை மிகவும் தெளிவான முறையில் அது ஒளிபரப்பி இருந்தது. ஏற்கனவே ஜனாதிபதியின் வருகையால் கொதித்துப் போயிருந்த புலம்பெயர் மக்கள் சனல்-4 வெளியிட்ட வீடியோக் காட்சிகளால் மேலும் கோபத்துக்கு



உள்ளானார்கள். இதன் விளைவாக ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் விமான நிலையத்துடன் முடியாமல் அவர் உரையாற்றவிருந்த ஒக்ஸ்போர்ட் யூனியனுக்கு முன்பாகவும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. இதனால் ஜனாதிபதியின் உரை இரத்துச் செய்யப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களுக்காக அதனை இரத்துச் செய்ததாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருந்தனர்.

### லியாம் பொக்ஸ் சந்திப்பு

பிரிட்டனில் தனக்கு ஏற்பட்ட தோல்வியை மறைக்கும் முகமாக பிரிட்டன் பாதுகாப்புச் செயலாளர் லியாம் பொக்ஸை சந்தித்துப் புகைப்படம் எடுத்துக் கொண்டார் ஜனாதிபதி.

உண்மையில் ஜனாதிபதியின் லண்டன் பயணம் தோல்வியில் முடிந்ததன் பின்னணியில் பல காரணங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஜனாதிபதியின் லண்டன் பயணம் குறித்து பிரிட்டன் அரசும் எதுவும் அலட்டிக் கொள்ளவில்லை. ஜனாதிபதியின் உரை இரத்துச் செய்யப்பட்டதுக்கும் தனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை எனக்கூறி பிரிட்டன் அரசு வாயை மூடிக்கொண்டது. இந்த மௌனம் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் வாய்ப்பாக அமைந்து விட்டது.

இங்கே இலங்கை பற்றிய உலக நாடுகளின் பார்வையைக் கவனத்தில் எடுப்பது அவசியமாக உள்ளது. கடல் வழிப் பயணம்மேற்குலக நாடுகளின் வாழ்வாதார முக்கியத்துவம் பெற்ற நாளில் இருந்து இலங்கை தென் கிழக்கு ஆசியாவில் ஒரு கேந்திர மையமாக உருவாகி விட்டது. இலங்கையும் அதன் வழியாக இந்தியாவும் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்துக்கு உள்ளான நிலைக்கு இதுவே முதற் காரணியாகும்.

1948இல் பிரிட்டன் அரசு இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து என்ற பாதிச்சுதந்திரம் வழங்கவும் திருகோணமலைத் துறைமுகத்தை தன்னிடமே வைத்துக் கொண்டதும் கடல் வழிப் பாதையில் அதன் முக்கியத்துவம் கருதிய வெளிப்பாடே ஆகும்.

### சீனாவுடனான கூட்டு

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் சிங்கள இனம் நாட்டின் அதிகாரத்தைத் தமிழர் பிரதிநிதிகளுக்குப் பதவி, பணம் கொடுத்து நாட்டின் அதிகாரத்தைத் தானே எடுத்துக் கொண்டு விட்டது. அரசமைப்புச் சட்டத்தின் மூலம் முழு இலங்கைத் தீவின் இறையாண்மையும் சிங்கள இனத்துக்கு மட்டுமே உரிய ஒன்றாக மாறிவிட்டது.1956 இல் பதவிக்கு வந்த பண்டார நாயக்கா தேர்தல் கூட்டாக அமைந்த பிலிப் குணவர்த்தன போன்ற இடதுசாரிகளின் செல்வாக்குடன் முதலாளித்துவத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கினார். அன்றே சீனாவுடன் அரிசி, இறப்பர் வர்த்தக ஒப்பந்தம் செய்து தனது மேற்குலக எதிர்ப்பை அணி சேராக் கொள்கை என்ற சொல்லாடல் மூலம் வெளிப்படுத்தினார். அன்று சீனாவுடன் அவர் பேணிய நெருக்கம் பின்னர் இடைப்பட்ட காலங்களில் இல்லாமல் போய் விட்டது.

ஆயினும் இப்போது ஜனாதிபதி மகிந்த அந்தப் பணியைக் கனகச்சிதமாக முன்னெடுத்துச் செல்கிறார். சீனாவுடன் மிக நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்வதற்காக அவர் பல்வேறு வழிகளில் முயற்சிக்கிறார். இலங்கையில் வீதி அபிவிருத்தி, ரயில்ப் பாதை அமைப்பு, அம்பாந்தோட்டை துறைமுகக் கட்டுமானம் ஆகியவற்றில் சீனா பெரும் பங்காற்றி வருகிறது. இதனால் சீனாவின் தலையீடு இலங்கையில் அதிகரித்திருக்கிறது. இலங்கையில் இந்தியாவின் தலையீட்டைக் கட்டுப்படுத்துவதற்காக சீனா நன்கு திட்டமிட்ட முறையில் இலங்கையுடன் இணைந்து செயற்படுகின்றது.

### பின்னணி என்ன?

சீனாவுடனான இலங்கையின் உறவை மேற்குலக நாடுகள் அடியோடு விரும்பவில்லை. இதனால் இலங்கை தொடர்பில் அவை இப்பொழுது கடும் போக்கைக் கொண்டிருக்கின்றன. இதனால் தான் இலங்கையின் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவை அடிக்கடி இடித்துரைக்கின்றன.

இலங்கைக்கான ஜீ.எஸ்.பி + வரிச் சலுகை இரத்துச்செய்யப்பட்டதன் பின்னணியில் சீனாவுடனான உறவும் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராகப் பிரிட்டனில் நடந்த வலுவான ஆர்ப்பாட்டத்துக்கும் இலங்கை சீனாவுடன் கொண்டிருக்கும் உறவுக்கும் நேரடிக் காரணங்கள் உள்ளன போன்றே தோன்றுகின்றது. பிரிட்டனில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை அந்நாட்டு அரசு நினைத்திருந்தால் தடுத்திருக்க முடியும். ஒக்ஸ்போர்ட் யூனியன் அமைந்துள்ள வீதியை மூடி ஜனாதிபதியின் உரையை அச்சுறுத்தல் எதுவுமின்றி நடத்துவதற்கு எற்பாடு செய்திருக்க முடியும். ஆயினும் பிரிட்டன் அரசு அவ்வாறு செய்யவில்லை. இந்த சந்தர்ப்பத்தை ஒரு நல்ல தருணமாகப் பயன்படுத்தி ஜனாதிபதி மகிந்தவுக்கு முறையான பாடம் கற்பிக்க பிரிட்டன் அரசும் விரும்பியது போலவே தோன்றுகிறது. இதன் காரணமாக ஜனாதிபதி மகிந்த தனது உரையை ஆற்ற முடியாமல் நாடு திரும்பும் நிலைமை ஏற்பட்டது. உண்மையில் இந்தச் சம்பவம் ஜனாதிபதியைப் பெரிதும் பாதித்திருக்கிறது.

### தீர்வு தாமதமாவதன் எதிரொலி இது

யுத்தம் முடிவுற்று ஆண்டொன்று கடந்து விட்டது. புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர் என்று அரசு மார்தட்டிக் கொள்கிறது. அப்படியானால் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை முன்வைக்க இந்த அரசால் ஏன் முடியவில்லை? புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரே தீர்வு என்று சொல்லிய ஜனாதிபதி பின்னர் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னரே தீர்வு என்றார். அவை எதுவுமே நடக்கவில்லை. நாட்டுக்கு தற்போதைய நிலையில் அபிவிருத்தியே முக்கியம். நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்சென்று பொருளாதாரத்தை வளப்படுத்த வேண்டிய தருணம் இதுவென ஜனாதிபதி பின்னர் குறிப்பிட்டார். அபிவிருத்தி என்ற சுலோகத்தை வைத்து இனப்பிரச்சினையை மறைத்து விட அவர் இப்போது முயற்சிக்கிறார். இந்து பத்திரிகை ஆசிரியர் ராமுக்கு அண்மையில் வழங்கிய செவ்வியில் அவர் இனப்பிரச்சினைக்கு தன்னிடம் தீர்வு ஒன்று உண்டு என்றும் அதனை மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். அந்தத் தீர்வு எத்தகையது என்றுகூட அவர் தெரிவிக்கவில்லை. இவற்றை வைத்துப் பார்க்கும் போது இனப்பிரச்சினைக்கான தீர்வு இப்போதைக்குக் கிட்டும் என்று கனவிலும் நினைக்க முடியாது.

### வலுக்கும் எதிர்ப்பு

இனப்பிரச்சினைக்கான தீர்வு பின்தள்ளிப் போகப்போக ஜனாதிபதிக்கும் அரசுக்கும் எதிரான போக்குகள் வலுத்துக் கொண்டே போகும். இதை அறியாதவர்கள் போல ஜனாதிபதியும் அவரோடு இணைந்த கூட்டத்தினரும் செயற்பட்டு வருகின்றமை அனைவரையும் வெறுப்பேற்றுவதாகவே உள்ளது. இவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வு காலம் தாழ்த்திச் செல்லச்செல்ல பிரச்சினைகள் மீண்டும் வலுக்கொள்ளக் கூடிய சாத்தியங்களும் அதிகமாகவே தென்படுகின்றன. புலிகளின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டு விட்டதாக அரசு தொடர்ந்து கூறிவருகின்ற போதும் அரசுக்கு எதிரான தமிழர்களின் போராட்டம் இன்னும் முடிவடைய வில்லை எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட சபையில் அடிக்கடி கூறி வருகிறார்கள்.

இந்த வேளையில் அரசுக்கு எதிரான மற்றொரு போராட்டமும் இப்போது ஆரம்பமாகியிருக்கின்றது. அதுதான் புலம்பெயர்ந்த தமிழர்களின் போராட்டம். புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தாம் வலுவாக உள்ளனர் என்பதை ஈழத் தமிழர்கள் ஜனாதிபதிக்கு லண்டனில் வைத்து நிரூபித்திருக்கிறார்கள். இது வரை காலமும் புலிகளின் போராட்டத்தை எதிர்கொண்டுவந்த இலங்கை அரசுக்கு இனிமேல் புலம்பெயர்ந்த மக்களின் போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. லண்டனில் ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருப்பது போன்ற நிலைமை இனிவரும் காலங்களில் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் ஏனைய நாடுகளிலும் ஏற்படலாம் என்ற நிலை இப்போது உருவாகியிருக்கிறது. தமது வெளிநாட்டுப் பயணங்களை ஜனாதிபதியும் அமைச்சர்களும் மிகவும் கவனமாகவும் இரகசியமாகவும் மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் இவர்கள் மீது புலம்பெயர் தமிழர்கள் கொண்டுள்ள தனிப்பட்ட விருப்புவெறுப்பல்ல. ஜனாதிபதியின் லண்டன் பயணம் தோல்வியில் முடிந்தமையே. இதனால் கொதிப்படைந்துள்ள அரசு இனிமேல் லண்டனில் இருந்து இலங்கை வரும் தமிழர்களை பழிவாங்கக் கூடும் என்ற அச்சமும் இப்போது

**அதிரன்**

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வை - பை (Wi-Fi) கதிர்கள் மனிதர்களை தாக்குகின்றனவா?




வை-பை கதிர்களினால் தாவரங்களின் வளர்ச்சி பாதிக்கப்படுவதாகவும் சிலவேளைகளில் இவை மனிதர்களிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம் எனவும் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த வெகனிங்கன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வின் மூலம் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆய்வின் போது விஞ்ஞானிகள் வெவ்வேறு வகையான கதிர்களை 20 மரங்களுக்கு சுமார் 3 மாதங்கள் வரை வழங்கி ஆராய்ச்சி செய்துள்ளனர்.

இதன்போது வை-பை கதிர்களுக்கு அண்மையில் காணப்பட்ட மரங்களின் இலைகள் வேகமாக உதிர்ந்ததுடன், மரங்களில் கசிவுகளும் ஏற்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இதனூடாக வெளிப்படும் மின்காந்த அலைகள் சோளப்பயிர்களின் வளர்ச்சியைப் பாதித்ததாகவும், சிலவேளை இவை மனிதனையும் பாதிக்கும் சாத்தியம் அதிகம் எனவும் அவர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இது தொடர்பான ஆய்வு தற்போது ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளதெனவும் இதனை சரியாக உறுதிப்படுத்த சில மாதங்கள் ஆகலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கதிர்கள் மட்டுமன்றி வாகனங்களில் இருந்து வெளியாகும் புகை, கையடக்கத்தொலைபேசி கோபுரங்களில் இருந்து வெளியாகும் கதிர்கள் கூட தாவரங்களைப் பாதிக்கின்றமை நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

# படமாகிய புயல்



படத்தைப் பார்த்தால் எங்கேயோ பார்த்தது போன்ற உணர்வு அனைவருக்கும் தோன்றும். திரைப்படத்தில் காண்பிக்கப்பட்டது போன்ற படங்கள் இவை. புயல் காற்று வீசும் போது எல்லோரும் அச்சத்தில் வீடுகளுக்குள் முடங்கி இருப்பதுதான் வழக்கம்.

ஆனால் அந்த நேரத்தில் வானத்தில் ஏற்படும் மாற்றங்களை படம் பிடித்துள்ளார் பிரித்தானிய ஒளிப்படக்காரர்.

இந்த மேகக் கூட்டங்கள் கடந்த ஜூலை மாதம் அமெரிக்காவில் எடுக்கப்பட்டவை. மேற்கு 'க்ளாஸ்கோவில்' கடந்த ஜூலை மாதம் மிகப்பெரிய புயல் தாக்கிய போது ஆகாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அழகாக படம் பிடித்துள்ளார் ஷான் கிரிக் என்கிற படப்பிடிப்பாளர்.

மொத்தம் 400 படங்களுக்கும் மேல் 'கிளிக்' செய்துள்ளார். இயற்கையை நம் கண்முன்னே காட்டும் படங்கள் இவை. நான்கு வருடங்களாக சூறாவளியைப் படமெடுக்க கடும் முயற்சி செய்ததில் கடந்த வருடம் தான் வெற்றி கிட்டியுள்ளதாகக் கூறுகிறார் ஒளிப் படக்காரர். தற்போது இந்த படங்கள் இணையத்தில் பலராலும் பார்க்கப்பட்டு வருகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

# சமூக வலைப்பின்னல்களில் ஒரு புது வரவு

சமூக வலைப்பின்னல்களின் தாக்கம் மற்றும் அதன் மீதான ஈர்ப்பு தினமும் அதிகரித்த வண்ணமே உள்ளது. இதன் காரணமாகவே பல நிறுவனங்கள் இந்த வலையமைப்புக்களை உருவாக்குவதில் கடும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன.

'பேஸ்புக்' வலையமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரான 'கிறிஸ் ஹுகஸ்' என்பவரால் 'ஜூமோ' என்ற சமூக வலையமைப்பு உருவாக் கப்பட்டுள்ளது.


இதன் சிறப்பு அம்சம் யாதெனில் மற்றைய சமூக வலையமைப்புக்களைப் போல் பொழுதுபோக்கு அம்சங்களை அடிப்படையாகக் கொள்ளாமல் சமூக நலன் பிரச்சினைகள், அதற்கான தீர்வு ஆகியவை தொடர்பில் இந்த வலையமைப்பு ஆராய்கின்றது.

இந்த வலையமைப்பில் மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபடும் இலாபநோக்கற்ற சுமார் 3ஆயிரம் அமைப்புக்கள் தங்களைப் பதிவு செய்துள்ளன. இவற்றைப் பின்தொடர்வது மட்டுமல்லாமல் உதவிகளையும் வழங்கமுடியும்.

பெண்கள் தொடர்பான பிரச்சினைகள், எச்.ஐ.வி, குடிதண்ணீர் தொடர்பான பிரச்சினை, சுகாதார சீர்கேடுகள் தொடர்பான பிரச்சினைகள், கல்விசார் பிரச்சினைகள், காலநிலை தொடர்பான பல்வேறு விடயங்கள் இவ்வலையமைப்பின் ஊடாக ஆராயப்படுகின்றன.

மேலும் உறுதிப்படுத்தப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்புகள் 'ஜூமோவில்' தங்களைப் பதிவுசெய்துகொள்ளவும் முடியும்.

'பேஸ்புக்' கணக்கினைக் கொண்டிருப்பவர்கள் இதில் தற்போது இணைந்து கொள்ளமுடியும்




## எம்மாலும் முடியும்...



பறவை போல வானில் பறப்பதற்காக 'ஜெட் பேக்' என்ற வாகனத்தை உருவாக்கியிருக்கிறார் நியூசிலாந்து விஞ்ஞானி 'க்ளென் மார்ட்டின்'. இது அவரது 30 ஆண்டு கால உழைப்புக் குக் கிடைத்திருக்கும் வெற்றி.

அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப அதில் பற்பல மாற்றங்கள் செய்து சாதனையாளர் பட்டியலில் இடம் பிடித் திருக்கிறார்.

இறக்கை அசைத்துப் பறக்கும் வாகனம் கண்டு பிடிக்கப் போகிறேன் என்று அவர் முதலில் கூறியபோது உறவினர், நண்பர்கள், சக ஊழியர்கள் கேலி செய்துள்ளனர். ''அதைச் சிறி தும் பொருட்படுத்தாமல் ஆராய்ச்சியில் கவனம் செலுத்தியதால் இன்று சாதனையாளனாக நிற்கிறேன்'' என்று பெருமையுடன் சொல்கிறார். காற்றைக் கிழித்துக் கொண்டு பறக்கும் வகையில் 'ஜெட்பேக்கில்' இலைவடிவில் 2 இறக்கைகள், 200 குதிரைத் திறன் சக்தி கொண்ட இயந்திர உதவியுடன் உந்து விசையைப் பயன்படுத்தி தடையின்றி பறக்க முடியும்.

நீண்ட தூரப் பயணத்துக்கு ஏற்ற வகையில் எரி பொருளை வாயு நிலையில் சேமித்துக்கொள்ள முடியும். சக்தி வாய்ந்த இயந் திரம் என்பதால் 8 ஆயிரம் அடி உயரம் வரை பறக்க முடியும். அத்துடன் தொடர்ச்சியாக அரை மணித்தியாலம் வானிலேயே பறந்து 50 கி.மீ. தொலைவு வரை செல்ல முடியும். இதில் நின்று பயணிக்கும் வகையில் தற்போது வசதிகள் செய்யப் பட்டுள்ளன. விலை ரூ.45 லட்சம். மேலும் வசதிகளைச் சேர்ப்பது குறித்து ஆய்வு நடந்து வருகிறது.




## சனியிலும் 'ஒட்சிசன்'

அமெரிக்காவின் விண்வெளி மையமான நாசா சனி கிரகத்துக்கு 'காசினி' விண்வெளி ஓடத்தை கடந்த 2004ஆம் ஆண்டு அனுப்பியது. அந்த ஓடம் சனிக் கிரகத்தை சுற்றிப் பறந்து ஆய்வு மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் சனிக் கிரகத்தின் அருகேயுள்ள 'ரியா' விண்வெளிப் பாதையில் ஒட்சிசன் இருப்பது தெரிய வந்துள்ளது. இப்பாதையில் காந்த சக்தி உள்ளது. அது தான் ஒட்சிசனை தாங்கிப் பிடித்துள்ளது. ஒட்சிசன் ஐஸ் கட்டி நிலையில் உள்ளது என விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். ஐஸ் கட்டிகளில் ஒட்சிசன் மூலக்கூறுகளாக உள்ளன என்றும் கூறியுள்ளனர். இதனால் சனிக் கிரகத்தை சுற்றியுள்ள பகுதிகள் ஐஸ் கட்டிகளால் உள்ளது. மேலும் அங்கு காபனீர் ஒட்சைட் உள்ளது என்றும் அறிவித்துள்ளனர்.



# நான் பேச நினைப்பதெல்லாம்...



பொது இடங்களில் செல்போனில் பேசுபவர்களில் சிலர் உரக்கப்பேசி ஊரைக்கூட்டி விடுவார்கள். அவர்களின் அந்தரங்கத் தகவல்களை பிறர் கேட்டுக் கொண்டு இருக்கிறார்களே என்ற கவலையின்றி சத்தம் போட்டுக் கதைப்பார்கள்.


இப்போது இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண புதிய தொழில்நுட்பத்தை ஜெர்மனியில் உள்ள 'காரல் ஸ்ரூகி' தொழில்நுட்ப நிலையம் கண்டு பிடித்துள்ளது. இதன்படி உங்கள் உதடு அசைவை வைத்தே நீங்கள் என்ன பேசப்போகிறீர்கள் என்பதைக் கண்டு பிடித்து எதிர்முனைக்கு உங்கள் குரலில் தெரிவிக்கும் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

'எலக்ட்ரோ மையோகிராப்' எனப்படும் தொழில்நுட்பம் மூலம் இது இயங்குகிறது. முகத்தில் உதடு மற்றும் தாடைப்பகுதியில் பொருத்தப்படும் சென்சார் கருவிகள் உதடு மற்றும் முக அசைவை வார்த்தையாக மொழிமாற்றம் செய்கிறது. இந்தப்பணியைச் செய்ய சிறப்பு மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்த வார்த்தைகள் தொலைபேசி இணைப்பு வழியாக எதிர் முனையில் உள்ளவர்களுக்கு அனுப்பப் படுகிறது.

இது தவிர ஸ்பீக்கர் மூலமும் இந்தப் பேச்சைக் கேட்கலாம். இந்த நவீன கண்டுபிடிப்பின் மூலம் வாய்பேச இயலாதவர்கள் மற்றும் பக்கவாத நோய்த் தாக்குதலால் பேச முடியாதவர்கள் பலன் பெறலாம். இவர்களின் உதட்டு அசைவின் மூலம் இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை மற்றவர்கள் புரிந்துகொள்ள முடியும். இனி மௌன மொழியில் பேசலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் சிறந்த ஆரம்பப் பாடசாலையாக பரிணமித்து வரும் புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை



யாழ். மாவட்ட ஆரம்பக் கல்வியில் வடமராட்சியின் ஆரம்ப கல்விப் பாடசாலைகளுக்கு முக்கிய இடமுண்டு. இன்றைய சிறுவர்கள் நாளைய எதிர்கால நாட்டின் அபிவிருத்திக்கு வலுச்சேர்ப்பவர்கள். இவர்கள் கல்வியறிவு உடையவர்களாக இருந்தால் மாத்திரமே நாட்டின் எதிர்காலம் ஒளிமிக்கதாக இருக்கும்.

இந்த வகையில் வடமராட்சியின் கல்வித்துறையில் முக்கிய இடமாக விளங்குகின்ற புலோலிப் பதியிலே அமைந்த ஆரம்பப் பிரிவு மாணாக்கரை கல்வி ஒளிமிக்க சமுதாயமாக மாற்றி வருகின்றது புலோலி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.

இந்தப் பாடசாலை 13.06.1958 உருத்திராவத்தையில் நலன்விரும்பி ஒருவரால் வழங்கப்பட்ட காணியில் சிறிய கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பாடசாலை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் அனுசரணையுடன் எஸ்.டபிள்யு.ஆர்.டீ.பண்டாரநாயக்காவின் காலத்தில் கல்வியமைச்சராக இருந்த டாக்டர்.ஐ.தகநாயக்காவால் இந்தப் பாடசாலை அமைப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. அப்போதைய பருத்தித்துறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பொன்.கந்தையா அடிக்கல் நாட்டியவர்களில் முக்கியமானவர்.

பின்னர் 1958, 1959 ஆம் ஆண்டுகளில் தனியார் பாடசாலைகளை அரச பாடசாலைகளாகப் பிரகடனப்படுத்தும் நடவடிக்கைகளை இலங்கையரசு முன்னெடுத்தது. இதன் அடிப்படையில் இந்தப் பாடசாலை 27.07.1959 அன்று அரச பாடசாலையாகப் பொறுப்பேற்கப்பட்டது. இதனால் இக்கால கட்டத்தில் பாடசாலைக்கென நிரந்தரக் கட்டடங்கள், மலசல கூடங்கள், தளபாடங்கள் என்பன கிடைக்கப்பெற்றன. 1967 ஆம் ஆண்டளவில் 1-10 வரையான வகுப்புக்கள் நடத்தப்பட்டன. பிற்காலத்தில் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கும் மாணவர்கள் தோற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. 1970இல் ஏற்பட்ட அரசியல் மாற்றம் இந்தப் பாடசாலையின் அமைப்புக்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

இதனால் இந்தப் பாடசாலை 1-5 வரையான வகுப்பு மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் தரம் III பாடசாலையாக மாற்றப்பட்டது.

பல அர்பணிப்பு மிக்க அதிபர்களின் சேவையாலும் தலைமைத்துவத்தாலும் வளர்த்தெடுக்கப்பட்ட இந்தப் பாடசாலைக்கு தற்போது அதிபராக க.நித்தியானந்தன் பொறுப்பேற்று வழிநடத்தி வருகின்றார். இவரின் சேவை மூலம் பாடசாலை மேலும் வளர்ச்சியைச் சந்தித்து வருகின்றது.

இந்தப் பாடசாலைக்கு 'ஜீ.ரீ.சற்' நிறுவனம் 2002 ஆம் ஆண்டு மலசல கூடத்தைக் கட்டிக்கொடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (UNICEF) 2003 ஆம் ஆண்டு நீர்த்தாங்கிக் குழாய் அமைப்பு, மின் மோட்டர் என்பனவற்றினைப் பொருத்துவதற்கான நிதியுதவியை வழங்கியதோடு 2004ஆம் ஆண்டில் புத்தக அலுமாரி மற்றும் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதியுதவி என்பனவற்றையும் வழங்கியுள்ளது.

2006 ஆம் ஆண்டு 'எஸ்சிஎவ்' நிறுவனம் பாடசாலைக்கான சுற்றுமதிலை அமைப்பதற்கான நிதியுதவியை வழங்கியது. அத்துடன் 2006, 2008ஆம் ஆண்டு அதே 'எஸ்சிஎவ்' நிறுவனம் உருக்கு அலுமாரி, இரண்டு கணினிகள், பிறின்ரர், போட்டோப் பிரதி இயந்திரம், றோணியோ இயந்திரம் என்பவற்றையும் வழங்கியுதவியது.

புமைப்பரிசில் பரீட்சை மற்றும் ஏனைய பாடவிதானச் செயற்பாடுகளில் இந்தப் பாடசாலை மாணவர்கள் தமது ஆளுமையை வெளிப்படுத்திப் பாராட்டப் படக் கூடிய வெற்றிகளைப் பெற்று வருகின்றனர். இணைப் பாடவிதானச் செயற்பாடுகளைப் பொறுத்தவரையிலும் இந்தப் பாடசாலை மாணவர்கள் தமது திறமைகளை தொடர்ந்து சிறப்பாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

இப் பாடசாலையின் வளர்ச்சி தொடர்பாக அதிபரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது:

எமக்கு ஆளணிப் பற்றாக்குறை இல்லை. 5 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர். கணினி வசதிகளும் உண்டு. உலக உணவு நிறுவனம் சமையலறையைக் கட்டித் தந்துள்ளது. ஆனால் தளபாடங்கள் கொஞ்சம் போதாமலேயே இருக்கின்றன. களஞ்சிய அறையைக் கட்டித் தந்தால் அதுவும் பாடசாலைக்குப் பேருதவியாக இருக்கும்.

தற்சமயம் பாடசாலையில் இருபாலாருமாக மொத்தம் 76 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். இவர்கள் பரீட்சைகளிலும், பல்வேறு போட்டிகளிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தி பாராட்டக் கூடியளவுக்கு செயற்பட்டு வருகின்றனர்-என்றார்.



எனவே இப் பாடசாலைக்குத் தேவைப்படும் உதவிகளும் வளங்களும் கிடைக்கப்பெற்றால் வடமராட்சியில் நல்லதொரு ஆரம்பப்பிரிவுப் பாடசாலையாக புலோலி. அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை பரிணமிக்கும் என்பதை எதிர்பார்க்கலாம்.

# புதைந்துள்ள தொல்பொருள்கள் வெளிவருமா?


தொல்பொருள்கள் என்பன ஓர் இனத்தின் அடையாளம். ஓர் இனத்தின் இருப்பை உறுதிப்படுத்தவும் எமது மூதாதையரின் கடந்தகால வாழ்வியலை அறிந்து கொள்ளவும் பக்கபலமாக இருப்பவை. ஆய்வுகளின் போதோ அல்லது எதிர்பாராத விதமாகவோ மீட்கப்படுகின்ற தொல்பொருள்களே.
தொல்பொருள்கள் பற்றிய ஆய்வு பல்வேறு பிரதேசங்களுக்கும் விரிவு படுத்தப்படவுள்ளதாகவும், எதிர்காலத்தில் இந்துக் கோயில்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளதாகவும் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத்திசநாயக்க அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

வடமராட்சியில் தமிழ் மக்களின் - குறிப்பாக இந்து மக்களின் - இருப்பு தொன்மையானது என்பதை வெளிப்படுத்த தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் கோயிலில் இருக்கும் போர்த்துக்கேயர் கால விக்கிரகங்களை உதாரணமாகக் கொள்ளலாம். இந்துப் பண்பாடு போர்த்துக்கேயர் காலத்திலும் சிறப்போடு நிலவியது என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல வெளிப்படுத்தி நிற்கின்றது.

மாயக்கை தம்பசிட்டிப் பிள்ளையார் ஆலயம் போர்த்துக்கேயர் ஆளுகைக்கு முற்பட்ட காலப்பரப்பில் இருந்தே இந்துப் பண்பாடு வலுவடைந்து இருந்ததை வெளிப்படுத்தி நிற்கிறது. போர்த்துக்கேயர் 1505 இல் இலங்கைக்கு வருகை தந்திருந்தாலும் 1596 ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்டு தமது ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டனர். இதனை போர்த்துக்கேய ஆவணங்களும் உறுதிப்படுத்தியுள்ளன. இந்த நிலையில் 1616 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னனாகிய சங்கிலி மன்னன் கைது செய்யப்பட்டு கோவாவுக்குக் கொண்டுசெல்லப்பட்ட பின்னரே யாழ்ப்பாணம் போர்த்துக்கீசரிடம் முற்றுமுழுதாக வீழ்ந்தது எனப் போர்த்துக்கேயப் பதிவுகள் சொல்கின்றன. இவ்வாறு கடற்கரைப் பிரதேசங்களை தமது பிடிக்குள் கொண்டு வந்த பின்னர் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்திலிருந்த அனைத்து ஆலயங்களையும் இடித்துத் தரைமட்டமாக்கினர். அந்த ஆலயங்களை இடித்ததனூடாகப் பெறப்பட்ட கட்டப் பொருள்களைக் கொண்டு கோட்டைகள், தேவாலயங்கள் போன்றவற்றை அமைக்கத் தொடங்கினர்.

அவ்வாறு வடமராட்சியில் இடித்தழிக்கப்பட்ட முக்கியமான ஆலயங்களுள் மாயக்கை தம்பசிட்டி விநாயகர் ஆலயமும் ஒன்று. போர்த்துக்கேயர் காலத்தில் இந்த ஆலயம் முற்றுமுழுதாக இடித்தழிக்கப்பட்டு விக்கிரகங்கள் சூறையாடப்பட்டு ஆலயத்தின் இருப்பே இல்லாமல் போயிருந்தது.

இதேவேளை இந்த ஆலயத்தின் இடிபாடுகளை மூலப்பொருள்களாகக் கொண்டு போர்த்துக்கேயரால் ''துலுக்கன் கோட்டை'' என்று அழைக்கப்படும் நிர்வாகப் படைத்தளம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை ஆலயம் அழிக்கப்பட்டபோது விக்கிரகங்களைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டவர்கள் ஆலயத்திலிருந்த விக்கிரகங்களை எடுத்துச் சென்று ஆலயத்தின் அருகிலிருந்த கேணியில் போட்டதாகவும் பாதுகாப்பான இடங்களில் புதைத்ததாகவும் சொல்லப்படுகின்றது.



அவ்வாறு குளமொன்றில் போடப்பட்ட தொன்மையான இந்து விக்கிரகமான தம்பசிட்டி மாயக்கை பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமான கணபதி விக்கிரகம் தம்பசிட்டியில் 1935ஆம் ஆண்டளவில் கிடைத்ததாகத் தொல்லியல்துறை சார்ந்தோரால் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

தம்பசிட்டியில் உள்ள 'சிவனெழுவை' என்ற காணிப்பரப்பு முன்னைய [illegible]யாக இருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொன்மையான பண்பாடுகளைப் பேண சித்தமருத்துவ அறிவு மக்களுக்கு வேண்டும்

கோப்பாய், டிசெ.7

எமது பாரம்பரிய மருத்துவமான சித்த மருத்துவத்துறையை மக்கள் மத்தியில் எடுத்துக் கூறுவதன்மூலம் தொன்மையான பண்பாடு பேணப்படுகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் வலி.கிழக்கு பிரதேச செயலர் மருதலிங்கம் பிரதீபன்.

வலி.கிழக்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபையும் வலி.கிழக்கு பிரதேச சபையும் இணைந்து நடத்திய நடமாடும் மருத்துவ முகாம் கடந்தவாரம் உரும்பிராய் கிழக்கு, செல்வபுரம், உதயசூரியன் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

வலி.கிழக்கு பிரதேச சபையின் உப பணிமனையூடாக இயங்கிவரும் இலவச சித்த மருத்துவ சிகிச்சை நிலையத்திற்குப் பலநூற்றுக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சை பெறச் சென்று பரிகாரம் காணுவதாக அண்மையில் நடைபெற்ற பொதுமக்கள் கலந்துரையாடல் ஊடாகத் தெரியவந்துள்ளது.

இலவச மருத்துவச் செயற்பாட்டில் அதிக நோயாளர்கள் சிகிச்சைபெற வருவதால் பிரதேச சபையினருக்கு ஒதுக்கப்பட்ட திகதிக்கு மேலாக செலவு ஏற்படுவதாகவும், மருத்துவ உபகரணங்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் காலங்களில் எனது செயலகமூடாக இந்த மருத்துவத்துறையை வளர்த்தெடுக்க என்னாலான கூடுதல் பங்களிப்பைச் செய்யவுள்ளேன்.

வலி.கிழக்கு பிரதேச செயலர் உரை



மேலைத்தேய நாடுகள் பல எமது பாரம்பரிய மருத்துவத்தின் சிறப்புத் தன்மையை ஆராய்சிக்குட்படுத்தி பல்வேறு மேம்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதை ஊடகங்கள் வாயிலூடாக அறிய முடிகிறது.

'உணவே மருந்து மருந்தே உணவு' என்ற தத்துவத்திற்கு ஏற்ப எமது நாளாந்த உணவுடன் பல்வேறு மூலிகைகளைச் சேர்ப்பதால் எமக்கு ஏற்படும் சிறுநோய்கள் ஏற்படாது என்பதை எமது மூதாதையர்கள் அனுபவமூடாகக் கண்ட உண்மையாகும்.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான விழிப்புணர்வை பல்வேறு மட்டங்களிடையேயும் ஏற்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பலாம்-என்றார்.

வலி. கிழக்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபைத் தலைவர் வ.அனவரதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் த.நடராஜா, பிரதேச அலுவலர் மற்றும் பிரதேச பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் .

இந்த மருத்துவ முகாமில் 300இற்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றுள்ளனர். (204 -72)

## மகன் வெட்டியதில் தந்தை காயம்

தென்மராட்சி, டிசெ.7

தந்தையை கத்தியால் வெட்டிக் காயப்படுத்தினார் மகன்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை மீசாலை, அல்லாரை அ.த.க.பாடசாலைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த வீடியோ பாலு என அழைக்கப்படும் கந்தையா தனபாலசிங்கம் (வயது 50) என்பவரே வெட்டுக் காயங்களுக்கு இலக்காகியுள்ளார். 'கால், கை, தோள், முதுகு, வயிறு போன்ற இடங்களில் பத்துக்கு மேற்பட்ட வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார். (204-207)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்யப்பட்டது 480/= ரூபா சுத்தம் செய்யப்படாதது. 300/=. தொடர்பு: கி.செல்ரன், நீர்வேலி வடக்கு, (மாதா கோவில் முன்பாக).

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No.1 BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 08.12.2010 விநியோகிக்கப்படும். புறொயிலர் குஞ்சுகள் கொள்வனவு செய்பவர்களிடம் இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

ராஜீன், நாவலி வீதி, ஆனைக்கோட்டை.
021 222 2867, 0776090926

# உர விண்ணப்பப் படிவங்களுக்கு அதிக பணம் அறவிட வேண்டாம்

சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

சண்டிலிப்பாய், டிசெ.7

விவசாய சம்மேளனங்கள் காலபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உரம் வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்களுக்கு அதிகளவு பணம் அறவிடுவதைத் தவிர்த்துசேவை மனப்பான்மையுடன் இலவசமாகவோ அல்லது குறைந்த கட்டணத்திலோ வழங்குவதற்கு முன்வர வேண்டும் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.


வலி.தென் மேற்குப் பிரதேசத்தி லுள்ள சில விவசாய சம்மேளனங்கள் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளிடமிருந்து வருடாந்த சந்தாப்பணம் தவிர உரம் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவத்திற்கு 50 ரூபாவிலிருந்து 75 ரூபா வரை வசூலிக்கின்றனர்.

மேலும் இதற்கான பற்றுச்சீட்டு வழங்கப்படுவதில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் விவசாயிகள் தெரிவித்தனர். இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

விவசாயிகளின்நலன் கருதியும் நெல் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடனும் அரசாங்கம் இலவசமாக உரம் வழங்கி வருகிறது. விவசாய சம்மேளனங்கள் விண்ணப்பப்படிவத்திற்காகப் பெரும் தொகையான பணத்தை அறவிடுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. சேவை மனப்பான்மையுடன்செய்ய வேண்டிய இந்தவேலைக்குப் படிவத்தை இலவசமாக வழங்க வேண்டும் அல்லது ஒரு ரூபாவிலிருந்து இரண்டு ரூபாவரை அறவிட வேண்டும் என்று கூறினார். (201-115)

**23 ஆம் ஆண்டு நினைவு நாள்**



பிறப்பு:
12.09.1928
இறப்பு:
07.12.1987

அமரர்
வே.த.தணிகாசலம் (அதிபர்)
(குருமாமணி)

ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் ஆண்டுகளாயினும்
ஒன்றித்து தாம் வாழ்ந்த காலங்கள் நேற்றைய போல்!
நன்றாகும் நல்வாழ்வில் உங்களின் வழிகாட்டல்கள்!
நாமிதை உணர்கிறோம் நற்பெயர் பெற்றுமே!
அன்போடு ஊரவர்கள், ஆலயங்கள், பாடசாலைகள்
என்று பல சேவைகள் செய்கின்ற குருமாமணியே!
எந்நாளும் யாராலும் மறக்கலாமோ கல்வியில்
ஏணியாய் இருந்தவெம் ஐயாவுன் வதனமதை!

என்றென்றும் உங்களை மறவாத
மனைவி,
மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இராஜஸ்தலம்,
மனோகரா, அல்வாய்.

## வீதி சேதமடைந்ததால் மக்கள் அசௌகரியம்

தென்மராட்சி , டிசெ.7

வரணி படை முகாம் முன்பாக உள்ள மணல் வீதி மிகவும் மோசமாகச் சேத மடைந்துள்ளதால் இவ்வீதி ஊடான போக்குவரத்து எந்தநேரமும் தடைப்படலாமென பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதியின் பல இடங்களில் வெள்ளம் தேங்கிக் குண்டும் குழியுமாக காணப்படுகிறது. இந்த வீதியால் செல்லும் வாகனங்கள் மிகவும் சிரமங்களின் மத்தியிலேயே பய ணத்தினை மேற்கொள்கின்றன.இந்த வீதியில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றில் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோர் தேங்கி நிற்கும் வெள்ளத்தினால் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். (204-207-122)

## தீர்வு பின்தள்ளி......


(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டிருக்கிறது அப்படியானதொரு கட்டம் நிச்சயம் ஏற்படாது என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் இல்லை. எனவே இலங்கை அரசு புலம்பெயர் தமிழர்களின் மீது கோபம் கொள்வதை விடுத்து அவர்கள் அரசுக்கு எதிராகத் திரண்டுள்ளமைக்கான காரணம் என்ன என்பதில் உடன் அக்கறை காட்டவேண்டும்.

அந்தக் காரணம் வேறொன்றும் அல்ல. ஒன்றே ஒன்றுதான். இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதே அந்தக் காரணம். போர் முடிவடைந்த நிலையில் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வை அரசு முன்வைத்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது.ஜனாதிபதியும் மிகுந்த மரியாதையுடன் லண்டன் சென்றுவந்திருக்கலாம். சரியான ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டிருந்தால் அரசின் மீது போடப்படும் யுத்தக்குற்றச்சாட்டுக்களில் இருந்தும் அது ஒருவாறு தப்பிப்பிழைத்திருக்க - விமர்சனங்களில் இருந்து விலகியிருக்க வழி ஏற்பட்டிருக்கும். இவற்றில் எதையும் செய்யாமல் இனப்பிரச்சினையை அடியோடு மறந்து அரசு செயற்படுவதாலேயே இவ்வாறான துரதிஷ்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை எதிர்காலத்தில் மேலும் வலுப்பட்டு மீண்டும் ஒரு வன்முறைப் போராட்டம் உருவாகக் கூடிய ஏது நிலைகளே இப்போது அதிகம் காணப்படுகின்றன. இவையெல்லாவற்றிலும் இருந்து தப்பிக் கொள்ள இலங்கை அரசுக்கு இப்போதுள்ள ஒரேயொரு வழி இனப்பிரச்சினைத்தீர்வு மட்டும்தான். அரசு இதற்கு என்ன செய்யப் போகிறது என்பதே கேள்வி.

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு
01
05
1932



இறப்பு
29
11
2008

அமரர் மயில்வாகனம் இராமச்சந்திரன்
(பிரபல இரசாயனவியல் ஆசிரியர், இளைப்பாறிய அதிபர்-நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்)

கண்ணீர் கரைந்து ஆண்டுகள் இரண்டு
கண் முன்னே நீங்களில்லை உறவாட எம்மோடு
உங்களை எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
உங்கள் நினைவுகளே எம்மை ஆளுகின்றன
இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்?
எம் உயிர் உள்ளவரை உங்களை மறவோம்!

உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

பாரதி வீதி, கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.
(106798)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான மகனைக் கண்டுபிடித்துத் தருமாறு கண்ணீர் மல்க ஆணைக்குழு முன் தாய் கோரிக்கை

மூதூர், டிசெ.07

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தனது மகனை கண்டுபிடித்து தருமாறு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் பெண்ணொருவர் கண்ணீர்விட்டழுது கோரினார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் மூதூர்ப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன. இங்கு சாட்சியமளித்தபோதே பத்மநாதன் அன்னபூரணம் எனும் இப்பெண்மணி மேற்படி கோரிக்கையை விடுத்தார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் கூறியவை வருமாறு:-

'எனது மகன் பத்மநாதன் முத்துக்குமார் 1975.08.25 ஆம் திகதி பிறந்தார். 2007.04.04. ஆம் திகதி கடைக்குச் சென்ற அவரை பாலத்தோப்பூர்கண்டி எனும் இடத்தில் இராணுவத்தினர் பிடித்துச் சென்றனர் என நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

3 நாள்களாக இராணுவ முகாமில் சென்று கேட்டபோது, விட்டுவிடுவோம் என்று கூறினார்கள். அதன்பின் தாம் எனது மகனைக் கைது செய்யவில்லை எனக் கூறினார்கள்.

'என்னிடமிருந்து எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள், எனது மகனை விட்டு விடுங்கள்' என்று கேட்டபோது இராணுவத்தினர் என்னைத் திட்டி, துரத்திவிட்டனர்.

அதன்பின் எனக்கும் உயிர் அச்சுறுத்தல் வரக்கூடும் எனக் கருதி மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டேன்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் இது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்து 3 தடவைகள் வழக்குவிசாரணை நடைபெற்றும் எனக்கு நியாயம் கிடைக்கவில்லை.


மகன் இல்லாமல் என்னால் அன்றாட கடமைகளைக் கூட செய்ய முடியாமல் உள்ளது. எனது கணவருக்கு வயதாகி விட்டது. இந்நிலையில் எனது மகன்தான் எம்மைக் காப்பாற்றுவார் என்று எண்ணியிருந்தோம். இச்சமயத்தில் மகன் இல்லாமல் இருப்பது பெரும் துன்பமாக உள்ளது. என்னால் தொடர்ந்து வாழ முடியாத நிலை உள்ளது.

எனவே எப்படியாவது மகனைக் கண்டுபிடித்துத் தாருங்கள்' இப்படி அவர் ஆணைக் குழு உறுப்பினர்களைக் கரம் கூப்பி வணங்கி அழுதவாறு கோரினார். (ளி)

# வவுணதீவில் கடும் சுழல் காற்று ஆலயம் உட்பட 18 வீடுகள் சேதம்

மட்டக்களப்பு,டிசெ.7

மட்டக்களப்பு, வவுணதீவுப் பிரதேசத்தின் ஈச்சந்தீவு, சொறுவாமுனை ஆகிய பகுதிகளில் சுழல் காற்றினால் ஆலயம் உட்பட 18 வீடுகள் சேதமடைந்துள்ளன.



கடந்த புதன் கிழமை அதிகாலை மழையுடன் கூடிய சுழல் காற்று வீசியது. இதில் பத்து தகர வீடுகள் முழுமையாக சேதமடைந்தன. 8 கல்வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.




அத்துடன், சொறுவா முனை பிள்ளையார் ஆலயமும் பலத்த சேதத்திற்குள்ளாகியது.

நேரில் பார்வையிட்ட வவுணதீவு பிரதேச செயலாளர் என். வில்வரெட்ணம், பாதிக்கப்பட்ட வீட்டுரிமையாளர்களுக்கு தற்காலிக இருப்பிடங்களை அமைப்பதற்கான கூரைத் தகடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். (ளி)

# காத்தான்குடி– கொழும்புக்கான இரவு நேர பஸ்சேவை ஆரம்பம்

மட்டக்களப்பு, டிசெ.7

ஐந்து வருடங்களுக்குப் பின்னர் காத்தான் குடியிலிருந்து கொழும்புக்கான இரவு நேர பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இலங்கை போக்குவரத்துச்சபையின் காத்தான் குடி பஸ் டிப்போ முகாமையாளர் ஏ.எல். எம்.பளுள்ளாஹ் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை இரவு முதல் இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் இரவு 10 மணிக்கு காத்தான் குடியிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் பஸ், அதிகாலை 5மணிக்கு கொழும்பை வந்தடையும்.

கொழும்பிலிருந்து தினம் பிற்பகல் 2 மணிக்கு காத்தான் குடி நோக்கிப் புறப்படும் பஸ், இரவு 10 மணிக்கு காத்தான் குடியைச் சென்றடையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ளி)

# ஐரோப்பிய ஆணைக்குழு மட்டக்களப்புக்கு விஜயம்

மட்டக்களப்பு, டிசெ.7

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கடந்த வியாழக்கிழமை விஜயம் செய்த ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் அடுத்த வருடம் இந்த ஆணைக் குழுவால் வழங்கப்பட வேண்டிய உதவித் திட்டங்கள் பற்றி ஆராய்ந்தனர்.

ஐரோப்பிய ஆணைக்குழுவின் மத்திய ஆசிய நாடுகளுக்கான பணிப்பாளர் டேக் மெக்நெக் தலைமையிலான குழுவினர், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பணிமனைக்குச் சென்று மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், உள்ளூர் அரச திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள உதவித்திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின்போது யுத்தம், ஆழிப்பேரலை போன்ற அனர்த் தங்களால் பாதிக்கப்பட்ட பகுதி களில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுற்றுலா, வாழ்வாதார அபிவிருத்தி ஆகியவற்றுக்கு ஐரோப்பிய ஆணைக் குழு முன்னுரிமை அடிப்படையில் உதவிகளை வழங்க வேண்டுமென்று அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கோரினார்.

இந்நிலையில், ஐரோப்பிய ஆணைக் குழுவின் பிரதிநிதிகள் எதிர்வரும் 2011ஆம் ஆண்டில் அபிவிருத்திப் பணிகளுக்கு தாம் உதவி வழங்க ஏற்பாடு செய்வர் என உறுதியளித்தனர் என அரச தகவல் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது. (ளி)

# மழையால் முடங்கியது மலையகம்

நுவரெலியா, டிசெ.07

மலையகத்தில் தொடர்ந்து மழைபெய்து வருவதால் காட்டாறுகள் பெருக்கெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்துள்ளது.

லக்சபான மற்றும் காசல்ரீ நீர்த் தேக்கங்களை அண்டிய பகுதிகளில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையை அடுத்து நீர்த்தேக்கங்களின் அவசர வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதேபோல காசல்ரீ நீர்த் தேக்கத்தின் ஐந்து அவசர வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. அவசர வான்கதவுகள் திறக்கப் பட்டதையடுத்து களனி கங்கை, மகாவலி கங்கை ஆகியனவற்றின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது. இந்தப் பிரதேசங்களை அண்டியுள்ள மக்கள் அவதானமாக இருக்கும் படி எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலையால் மக்கள் பலத்த சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். பல பிரதேசங்களில் அடிக்கடி மின்சாரமும் தடைப்பட்டுள்ளது.

தம்புள்ளை ஆதார வைத்தியசாலையின் 2 விடுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மழை நீடிக்கும் பட்சத்தில் நோயாளர்களை வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்ற நேரிடும் என அதன் பணிப்பாளர் என். எம்.எம். இக்பால் தெரிவித்தார்.

இதேவேளை, அப்புத்தளை- பண்டாரவளை வீதி தாழிறங்கி வருவதால் வாகனப் போக்குவரத்திற்கு மாற்றுப் பாதையைப் பயன்படுத்துமாறு அப்புத்தளை பொலிஸார் அறிவித்துள்ளனர். போக்குவரத்துகளுக்கு அப்புத்தளை- தியத்தலாவ வீதியை பயன்படுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பதுளையில் பல இடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. பிபிலை மெதகம பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால் போக்கு வரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன. மஹியங்கனை - கண்டி வீதியின் 18 ஆம் வளைவுகளில் 10 ஆவது மற்றும் 11 ஆவது வளைவு வீதி தாழிறங்கியுள்ளதால் அது கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது. கண்டி - ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில் மண்சரிவில் 60 வயதான பெண்ணொருவர் பலியானார் என பொலிஸார் தெரிவித்தனர்.

அசாதாரண காலநிலை காரணமாக 75 குடும்பங்களைச் சேர்ந்த 225 பேர் இடம் பெயர்ந்து வேறிடங்களில் தங்கியுள்ளனர். (ளி)

# 5 சதவீத சம்பள அதிகரிப்பு ஏற்றுக்கொள்ள முடியாதது


## தோட்டத் தொழிலாளர் தெரிவிப்பு

நுவரெலியா,டிசெ.7

வரவு- செலவு திட்டத்தில் கூறப்பட்டுள்ளதைப் போன்று தோட்டத் தொழிலாளர்களுக்கும் 5 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படலாம் என்று மலையகப் பிரதிநிதிகள் தெரிவிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமல்ல - என பொகவந்தலாவை, சங்குகலை கழகச் செயலாளர் கமலதாசன் தெரிவித்துள்ளார். அவர் மேலும்தெரிவித்தவை வருமாறு:-

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 285 ரூபாவாகும். இதில் 5 சதவீதம் எனும்போது 14. 25 சதமே அதிகரிக்கப்படும். அவர்களின் அடிப்படைச் சம்பளம் அண்ணளவாக 300 ரூபாவாகவே இருக்கும். இது பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு சவால் விடுக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

எனவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இம்முறையாவது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் தலையீடு செய்து சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுக்க முன் வர வேண்டும் - இவ்வாறு கமலதாசன் தெரிவித்தார். (ளி)




## வைத்தியசாலையில் ஆளணிப்பற்றாக்குறை

மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் ஆளணி பற்றாக் குறை நிலவுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக பெண் தாதியர் 12 பேர் தேவைப் படுமிடத்து 4 பேர் மட்டுமே உள்ளனர். அதேபோல் சிற்றூழியர் 35 பேர் தேவையானபோதும் வெறும் ஆறுபேரே உள்ளனர். வைத்தியர்களுக்கும் பற்றாக் குறை நிலவி வருகின்றது. எனவே இந்தப் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுள்ளனர். (ளி)

# தோட்டக் காணிகளில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுத்தவும்

## மலையக மக்கள் முன்னணி கோருகிறது

நுவரெலியா, டிசெ.7

வலப்பனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தோட்டக் காணிகளை சுவீகரித்து திட்டமிட்ட குடியேற்றமொன்றை அமைக்க அரசு திட்டமிட்டு வருவதாக அறியமுடிகின்றது. இத்திட்டத்தை மலையக அரசியல், தொழிற்சங்கத் தலைமைகள் ஒன்றிணைந்து தடுத்து நிறுத்தவேண்டும் - என்று ம. ம. மு. உறுப்பினரும், அதன் வலப்பனை தொகுதிப் பொறுப்பாளருமான எஸ்.கோவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

உடப்புசல்லாவ ரம்பானொக் தோட்ட சந்திரசேகரன் ஞாபகார்த்த நூலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வலப்பனை தேர்தல் தொகுதியில் மஹா ஊவா, ஹைபொரஸ்ட், எல்மா, சூரியகாந்தி, றப்பானொக், அதிகாரவத்தை, டெல்மார் மற்றும் றொக்லேண்ட் பிரிவுகளில் பல் ஏக்கர் நிலங்களைச் சுவீகரித்து கிராமத்தவர்களுக்குப்பகிர்ந்தளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கென விளைச்சல்தரும் தேயிலை நிலங்கள் அளந்து அடையாளமிடப்பட்டுள்ளன. இது தொழிலாளர்களினது பூர்வீக மண்ணைப் பறிக்கும் செயலாகும். இதனால் தேயிலைத் தொழிலும் பாதிக்கப்படும்.

இவ்வாறான குடியேற்றத் திட்டங்கள் தமிழர்களுக்கும், பெரும்பான்மையினருக்கும் இடையில் இன முறுகலையும் ஏற்படுத்தும். அரசின் திட்டமிட்ட செயலாகவே இதை நாம் கருதுகின்றோம்.

எனவே, மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் அமைப்புகளும், சமூக அமைப்புகளும், புத்திஜீவிகளும் ஒன்றிணைந்து மக்களை ஒன்று திரட்டி இந்தத் திட்டத்தை தடுத்து நிறுத்துவது அவசியம் - இவ்வாறு கோவிந்தராஜ் தெரிவித்தார். (ளி)

# பரிசுப்பொதி போர்வையில் கஞ்சா கடத்தியவர் சிக்கினார்

நுவரெலியா, டிச.07

பரிசுப் பொதிபோன்று தயார் செய்யப்பட்டிருந்த பெட்டிக்குள் 350 கிராம் கஞ்சாவை மறைத்துவைத்து பஸ்ஸில் கொண்டு செல்ல முயன்ற நபர் ஒருவரை எல்ல பொலிஸார் கைது செய்துள்ளனர். மாத்தறையிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று இராவண எல்லையில் வைத்து சோதனை செய்யப்பட்டபோதே மேற்படி கஞ்சா சிக்கியதுடன் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொண்டிக் குதிரையும் பரமார்த்த குருவும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

''நாம் கொடாக்கண்டன் என்றால் இவன் விடாக்கண்டனாய் இருக்கிறானே!'' என்று நினைத்து ஐந்து பணம் கொடுத்தனர்.

''இன்னும் ஐந்து பணம் கொடுங்கள்''

''ஒரு குதிரைக்கு ஐந்து பணம்தானே வரி?''

''ஒரு பக்கம் மட்டும் போகும் குதிரைக்குத்தான் ஐந்து பணம். உங்கள் குதிரை பின்னாலும் போகிறதே!''

''இதென்ன அநியாயம்?'' என்று வருத்தப்பட்டு மேலும் ஐந்து பணம் தந்தனர்.

''இந்தக் குதிரையால் நமக்கு எவ்வளவு பணம் நஷ்டமாகிறது?'' என்று சொன்னபடி பயணத்தைத் தொடர்ந்தனர்.

ஒரு வழியாக ஊருக்குள் நுழைந்து, ஒரு மடத்துக்குப் போனார்கள். அப்போது இரவு நேரம். எல்லோருக்கும் களைப்பாக இருந்ததால், குதிரையைக் கட்டிப்போட மறந்து, தூங்கி விட்டனர்.


காலையில் எழுந்து ஆளுக்கொரு பக்கமாகத் தேடிக் கொண்டு போனார்கள்.

கடைசியில் ஒரு வயலுக்குப் பக்கத்தில் அந்தக் குதிரை கட்டப்பட்டு இருந்தது!

''இது இரவு முழுவதும் என் வயலில் இறங்கி பயிர்களை எல்லாம் நாசம் செய்து விட்டது. அதற்குப் பதிலாகப் பத்துப் பணம் கொடுத்தால்தான் குதிரையை விடுவேன்'' என்று சொன்னான், அதைக் கட்டி வைத்திருந்த உழவன்.

அவனிடம் பேரம் பேசி நான்கு பணம் கொடுத்து விட்டுக் குதிரையை ஓட்டி வந்தனர்.

''சீ...சீ...! இந்தக் குதிரையால் நமக்குப் பெரும் தொல்லை. என் மானமே போகிறது.! பேசாமல் இதை விட்டு விடலாம்!'' என்று வருத்தப்பட்டார் குரு.



அப்போது அங்கிருந்த ஒருவன், குதிரைக்குப் பீடை பிடித்துள்ளது. அதனால்தான் இப்படி ஆகிறது. அந்தப் பீடையைக் கழித்து விட்டால் எல்லாம் சரியாகி விடும். செலவோடு செலவாக எனக்கும் ஐந்து பணம் கொடுங்கள் என்று யோசனை சொன்னான்.

(தொடரும்...)



## ஒரு மனிதன் உயர்வதற்கான குணநலன்

விடாமுயற்சி, கடின உழைப்பு, திட்டமிடல் போன்ற பல குணநலன்கள் கூறப்படலாம். ஆனால் அவை எல்லாமே தன்னம்பிக்கை என்ற அடித்தளத்திலிருந்து தான் உருவாகி வெளி வருகின்றன.

தன்னம்பிக்கை என்பது ஓர் உந்து சக்தி வாழ்வதற்கும், வாழ்வில் உயர்வதற்கும், எல்லோருக்கும் தன்னம்பிக்கை இருக்கிறதா? என்றால் இருக்கிறது!! ஆனால் அது போதுமான அளவு இருக்கிறதா? என்றால் இல்லை!! நம்மை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்லும் தன்னம்பிக்கை நிரம்பப் பெற்றவர்கள் சோர்வு அடைவதில்லை. துவண்டு போவதில்லை. தோல்வியானது நம்மைத் துவண்டு போகச் செய்கிறது என்றால், நம்முடைய தன்னம்பிக்கையின் அளவு குறைவாக இருக்கிறது என்று பொருள். தாழ்வு மனப்பான்மை, தம்முடைய முயற்சியின் மீது நம்பிக்கையின்மை, மற்றவர்களுடைய வெற்றியைக் கண்டு வெதும்புதல், சோம்பேறித்தனம், மற்றவர்களோடு கலகலப்பாக இல்லாமல் இருத்தல் போன்றவை தன்னம்பிக்கை குறைவாக இருப்பதன் வெளிப்பாடு ஆகும். எனவே தன்னம்பிக்கையை அதிகப்படுத்தலும் அவ்வாறு வளர்ச்சியுற்ற தன்னம்பிக்கையைக் குறைய விடாது நிலைநிறுத்திக் கொள்வதும் மிகமிக முக்கியம்.


## மனிதனை விட அதிக ஆற்றல் மிக்கவை

- சீல்கள் மணிக்கு 23 கி.மீ. வேகத்தில் நீந்தும்.
- அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.
- கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும்.
- பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.
- மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும்.
- உலகில் முதுகெலும்புடன் தோன்றிய முதல் உயிரினம் மீன்.
- உலகிலேயே அதிக குரங்கினங்கள் வாழும் நாடு பிரேசில்.
- குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.
- புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் திறன் படைத்தது.
- ராஜஸ்தான் பறவைகள் சரணாலயத்தில் 374 பறவை இனங்கள் இருக்கின்றன.
- இந்தியாவில் இந்திராகாந்தி சரணாலயத்தில் மட்டுமே எறும்புத்தின்னி உள்ளது.
- காளான்களில் சுமார் 70 ஆயிரம் வகைகள் உள்ளன.

## பொதுஅறிவு

- பிறப்பு விகிதமே இல்லாத நாடு - வாடிகன் சிட்டி
- உலகில் பெரிய பங்குச் சந்தை - நியூயோர்க்
- வருடம் தோறும் பூமியில் புதைந்து வரும் நாடு -நெதர்லாந்து
- டாக்ஸி அதிகம் உள்ள நாடு - மெக்ஸிக்கோ
- கண்ணாடி தொழிலுக்கு பெயர் பெற்ற நாடு - பெல்ஜியம்
- படகு வடிவில் அமைந்து உள்ள நாடு - இத்தாலி
- கடல் மட்டத்துக்கு கீழே உள்ள நாடு - டென்மார்க்
- வருடம் தோறும் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் நாடு - சுவிட்சர்லாந்து
- உலகில் மிக பழமையான பாராளுமன்றம் உள்ள நாடு - ஐஸ்லாந்து
- நீரிலும் , நிலத்திலும் செல்லும் வாகனம் - ஹோவர் கிராக்பட்

## தங்கநிறக் குரங்குகள்



10 ஆயிரம் அடி உயரத்தில் குரங்குகள் மலைப்பகுதிகளில் அதிகம் காணப்படும் என்பது நமக்கெல்லாம் தெரிந்த விடயம்தான். ஆனால் மிக அதிகமான மலைப் பகுதியில் குரங்குகளைப் பார்க்க முடியுமா? முடியும். சீனா திபெத்திய பீட பூமியின் தென்பகுதிகளில் காணப்படும் தங்க நிறக் குரங்குகள் 10 ஆயிரம் அடி உயரமான மலையில் அதிகம் வசிக்கின்றன. இது அபூர்வ வகை இனக் குரங்காகும்.

பனி காலத்தில் இவை கடும் குளிரைத் தாங்க முடியாமல் மலையடிவாரத்திற்கு வந்து விடும்.

இதன் உடலின் நீள அளவிற்கு வாலின் நீளமும் இருக்கும். வால் இரண்டரை அடி நீளம் வரை வளரும்.

அண்மையில் சீனாவின் சான்டோங் நகரில் உள்ள மிருகக்காட்சி சாலையில் தங்க நிற பெண் குரங்கு ஒரு குட்டியை ஈன்றெடுத்தது. அந்தக் குட்டியை முதன் முறையாக பொதுமக்களின் பார்வைக்கு அனுமதித்தார்கள்.

## பாப்பா! பாப்பா!





பாப்பா! பாப்பா! பாரம்மா!
பச்சைப் பசுங்கொடி பாரம்மா.
ஆடும் மயிலை பாரம்மா - நீ
அழகு தமிழில் பாடம்மா.

கூவும் குயிலை பாரம்மா -தினம்
பூப்போல் நீயும் சிரித்திடம்மா.
அழகு அன்னம் பாரம்மா -நீ
அன்பாய் என்றும் பழகிடம்மா.

பச்சை பசுங்கிளி பாரம்மா - அது
பள்ளை மொழி பேசுதம்மா.
தாவும் கௌரிமான் பாரம்மா - நீ
தன் மானம் காத்திடம்மா.

## வெற்றிகள் தொடரட்டும்...





மழலைகளின் மகிழ்வு: மார்க்கண்டுசுவாமிகள் சபையால் நடத்தப்பட்ட மார்க்கண்டு சுவாமிகள் முன்பள்ளி மாணவர்களது விளையாட்டுப் போட்டி பிரான்பற்று இலுப்பையடி வைரவர் ஆலய முன்றலில் நடைபெற்றது. முன்பள்ளி மாணவர்கள் உடற்பயிற்சியில் [illegible] மாணவர்களுக்கு மார்க்கண்டு சுவாமிகள் முன்பள்ளி ஆசிரியர் திருமதி [illegible] பரிசில் வழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைத் துளி...

- நல்ல மனிதன் என்பவன் ஆபத்துக்களைப் பொருட்படுத்தாது, சிறந்த அல்லது உயர்ந்த செயல்களை எவன் தொடர்ந்து செய்து கொண்டிருக் கிறானோ அவன்தான்.
- நாளைக்கு உங்களால் நல்லதாகச் சிறப்பாகச் செய்ய முடியும். ஆனால் இன்று கண் எதிரில் உள்ள கடமையையும் சிறப்பாகச் செய்ய முடியுமே!
- ஆயிரம் நண்பர்கள் இருப்பதில் பெருமையில்லை ஓர் எதிரி கூட நமக்கு முளைத்து விடாமல் பார்த்துக் கொண்டால் தான் பெருமை!
- நம் தவறுகளை நாமே உணர்ந்து கொள்வதை விட உயர்ந்த மனத்துணிவு வேறு கிடையாது

- றோ.அபி

## யாழ்.பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கம்
### பொதுக்கூட்டம்- 2010

யாழ்.பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை (08.12.2010) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும். அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். 2011ஆம் ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு இடம்பெறும்.

செல்வி தே.தமிழ்ச்செல்வி
(106963) தலைவர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வைரமுத்து செல்லையா**

தோற்றம்
18.06.1925
மறைவு
22.11.2006
திதி: துதியை 07.12.2010

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
என்பதை உணர்த்திய தெய்வமே!
பிறந்தவர் யாவரும் இறப்பர் என்பதை
யாம் உணரவில்லையே!
நீர் எம்மை விட்டுப் பிரியும்வரை
எம் நினைவு நீங்கும்வரை உம்
நினைவுகள் எம்மைவிட்டு அகலாது ஐயா!

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (சி/5734403)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### Vacancies - Faculty of Arts

University of Jaffna will entertain applications upto **31st December 2010** from suitably qualified persons for the under mentioned posts **on contract basis.**

**Assistant Lecturer / Tutor**

Archaeology / Christian Civilization / Drama & Theatre Arts / Economics / Education / English Literature / Fine Arts (Art History) / Geography / Hindu Civilization/ Hindu Philosophy / History / Law / Linguistics Planning / Philosophy / Psychology / Political Science / Sociology / Sanskrit/ Tamil/ Media Studies.

**Assistant Lecturer / Instructor**

Art & Design / Dance (Bharathanatiyam / Kathakali) Music (Vocal/ Miruthangam / Pannisai / Violin / Veena/ Home Economics.

**Note:** Candidates awaiting the results of the final degree examinations may also apply.

Salary:

| | |
|---|---|
| Assistant Lecturer | Rs 25, 125/- per month fixed |
| Tutor/Instructor | Rs 20, 755/- per month fixed |

* In addition to the above salary, the allowances approved by the University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self-addressed stamped envelope 23x20 c.m. in size.

Applications for the above posts should be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/ Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation, Only short listed applicants will be called for interview.

Registrar
2010.12.06 (சி/5734011)

# 'போன்' விற்பனை நிலையத்தில் திருட்டு

வடமராட்சி.டிசெ.7

மந்திகையில் உள்ள போன் விற்பனை நிலையம் ஒன்றில் நள்ளிரவு வேளை கடையை பிரி த்து 5லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான கையடக்க தொலைபேசிகள், அவற்றின் உதிரிப்பாகங்கள் திருடப்பட் டுள்ளன என்று தெரிவிக்கப் படுகிறது.

நேற்றுமுன்தினம் (ஞாயிறு) இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

பூட்டப்பட்டிருந்த 'போன் சொப்' விற்பனை நிலையத்திற்கு நள்ளிரவு வேளை சென்ற திருடர்கள் பின்புறமாக சென்று அஸ்பெஸ்டஸ் கூரையைப் பிரித்து இறங்கி அவற்றை திருடிச்சென்றுள்ளனர்.

சாவகச்சேரி வீதியில் உள்ள இவ்விற்பனை நிலையத்தில் நடைபெற்ற இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-236)

## German Swiss மொழிகள்

German, Swiss மொழி வகுப்புகள் Embassy யால் கேட்கப்படும் A-1 Certificate ஏற்றவாறு தமிழ் விளக்கத்துடன் Germanyல் படித்து வந்த ஆசிரியரால் நடத்தப்படுகிறது. German Institute, 10, Palaly Road, Jaffna. T.P. 0771604823

## தவறிவிட்டது

29.11.2010 அன்று புதிய Casio ஆண்களுக்கான கைமணிக்கூடு, யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் செல்வி வி.திருவருள்சோதி, அப்புக் காத்துவளவு, அராலி மத்தி, வட்டுக்கோட்டையில் ஒப்படைத்துதவவும். அல்லது 0771107249 என்ற தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## வீடு, காணி உடன் விற்பனைக்கு

மீசாலை கிழக்கில் புதிய புகையிரத நிலையத்திற்கு முன் 4 பரப்பு வீட்டுடன் சுற்று மதிலுடன் கூடிய சதுரக் காணியும் 6 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு 0776466208

## பெயர் மாற்றம்

அராலி தெற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த கணேசு கனகரத்தினம் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து (07.12.2010) கணேச. காமல் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

அராலி தெற்கு. (106968) க.காமல்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், சித்திரை நட்சத்திரம், கிரகபாவம்21½, செவ்வாய் குற்றமற்ற 43 வயது நிரம்பிய, 5.9 உயரமுடைய அவுஸ்திரேலியாவில் நிரந்தர பிரஜாவுரிமை உடைய மணமகனுக்கு படித்த 35 வயது நிரம்பிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். குடும்ப விவரம், ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்

விளம்பர இல-4097
சே/பா உதயன்.
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## தவறி விட்டது

4ஆம் வட்டாரம், மண்கும்பான் எனும் முகவரியைச் சேர்ந்த ரவீந்திரன் துவாரகா என்பவது தேசிய அடையாள அட்டை (916623607V) 20.11.2010 அன்று யாழ்ப்பாணத்திற்கும் இராமநாதபுரத்திற்கும் இடையில் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

இல.410,ரவிகடை, கோவில் வீதி,
நல்லூர். தொ.இல-0779909405

## அறிவித்தல்
### காரைநகர் பிரதேச சபை
### காரைநகர்

2011ம் ஆண்டுக்கான சபையின் வரவு செலவுத்திட்டம் 07.12.2010 தொடக்கம் ஏழு(07) நாள்களுக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.


திரு இரா.லோகநாதன்
*செயலாளர்,*
*காரைநகர் பிரதேச சபை.*

## வீடு விற்பனைக்குண்டு

மானிப்பாய் சந்தை, முன் ஒழுங்கையில் 3 பரப்புக் காணியுடன் புது வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு 0213225583
0213002727

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொன்னம்பலம் முத்தையா**

முத்தொழியாய்
10.04.1927

விதிவழியாய்
29.11.2008

திதி: துதியை

பாசம் என்ற பதத்தை புரிந்து
பண்பு என்பதன் இலக்கணம் காத்து நின்று
எங்கள் உயர்வில் சிரித்து நின்று
சிறப்போடு எமை வாழ வைத்த எம் தெய்வமே!
ஆண் டாண்டு சென்றாலும் உங்கள் நினைவுகளுடன்....

6, இரண்டாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
06 . 03 . 1937
உதிர்வு
07 . 11 . 2010

அமரர் **முருகன் திருநாவுக்கரசு** (பழனி)

கடந்த 07.11.2010 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (07.12.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத் தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி,
உரும்பிராய் வடக்கு,உரும்பிராய். குடும்பத்தினர்.


## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்
வாரம் 183
சீட்டிழுப்புத் திகதி 05.12.2010

வெற்றி இலக்கங்கள்: 03 18 22 47
சுப்பர் இலக்கம்: 05

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 9,697,700/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏந்த 1 இலக்கத்துக்கும் | 82549 | ரூ. 20/= | ரூ. 1,650,980/= |
| சுப்பர் இலக்கமுடன் ஏந்த 1 இலக்கத்துக்கும் | 7464 | ரூ. 40/= | ரூ. 298,560/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏந்த 2 இலக்கங்களுக்கும் | 6360 | ரூ. 100/= | ரூ. 636,000/= |
| சுப்பர் இலக்கமுடன் ஏந்த 2 இலக்கங்களுக்கும் | 589 | ரூ. 200/= | ரூ. 117,800/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏந்த 3 இலக்கங்களுக்கும் | 142 | ரூ. 1,500/= | ரூ. 213,000/= |
| சுப்பர் இலக்கமுடன் ஏந்த 3 இலக்கங்களுக்கும் | 17 | ரூ. 3,000/= | ரூ. 51,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000/= |
| சுப்பர் இலக்கமுடன் ஏந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 9,697,700/= | |
| மொத்த எண்ணிக்கை | 97122 | | ரூ. 3,967,340/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 9,947,900/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை
Website: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச்சுடர்
O/L மாவட்ட வலம்
கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்குரிய ஆசிரியர்
கே.சசிதரன்,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776903257

கணிதம் 32 - T

முற்றுமுழுதான எதிர்பார்ப்பு வினாக்களுடன் யாழ் பிரபல ஆசிரியர்களின்

# முன்னோடி வெளியீடு - 03

## கணிதம் I — 2 மணித்தியாலங்கள்

### பகுதி A

01. 9m துணியின் விலை ரூ. 450 எனின் 1m துணியின் விலையைக் காண்க.

02. (-4) + 3ஐச் சுருக்குக.

03. X எனும் எண்ணின் ஐந்து மடங்கிலிருந்து 2 குறைவான எண்ணை அட்சரகணித கோவையாக எழுதுக.

04. 27% ஐ பின்னமாகத் தருக.

05. $\sin 50^0 = \cos A$ எனின், <A இன் பருமன் யாது?


06. 3500ml ஐ l இல் தருக.

07. சுருக்குக. 10.6 + 0.65

08. A = {1, 4, 9, 16} எனின், n(A) யாது?

09. 3/.... = 12/16 எனின், வெற்றிடத்தில் வரவேண்டிய எண் யாது?

10. உருவில் உள்ள செவ்வகத்தின் சுற்றளவைக் காண்க.




11. $2y + 8xx = 6$ என்ற நேர்கோட்டின்
 1) படித்திறன் யாது? 2) வெட்டுத்துண்டு யாது?

12. $v = 1/3\, \pi r^2 (4r + h)$ இல் h ஐ எழுவாயாக மாற்றுக.

13. கூட்டுக. $1011_{இரண்டு} + 101_{இரண்டு}$


14. $2^{x+1} = 1/16$ எனின், X இன் பெறுமானம் யாது?

15. சுருக்குக. $\frac{5}{m-n} + \frac{2}{n-m}$

16. 2 இற்கும் 18 இற்கும் இடைப்பட்ட 3 கூட்டல் இடையைக் காண்க.


17. 5 மாணவர்களின் இடைநிறை 47Kg. அதில் 2 மாணவர்களின் நிறைகள் முறையே 49Kg, 51Kg ஆகும். மீதி 3 மாணவர்களினதும் நிறையின் இடையைக் காண்க.

18. உருவில் X இன் பெறுமானம் யாது?




19. வியாபாரி ஒருவன் ரூ. 10 பங்குகளை ரூ. 12 படி வாங்குவதற்கு ரூபா 9,600 ஐ முதலீடு செய்தான்.
 1) அவன் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை யாது?
 2) பங்குகளின் பெயர்மாத்திரைப் பெறுமானம் யாது?

20. படத்தில் X இன் மூலம் காட்டப்பட்ட கோணத்தின் பெறுமதி யாது?





21. A எனும் நிலையத்திலிருந்து B எனும் நிலையத்திற்கான திசைகோள் 065° எனின், B இலிருந்து A இன் திசைகோள் யாது?

22. $x^2 + \square x + 49$ என்ற கோவை நிறைவர்க்கக் கோவையாக்குவதற்கு
 1) சேர்க்க வேண்டிய நடுவுறுப்பு யாது?
 2) நிறைவர்க்கக் கோவையாக தருக.

23. lg2 = 0.3010 எனின், lg5 இன் பெறுமானம் யாது?

24. $x + 1/x = 4$ எனின், $x^3 + 1/x^3$ இன் பெறுமானம் யாது?

25. முக்கோணி ABC இல் AX : XB = 3 : 2, AY : YG = X + 2 : X , XY // BC எனின், X இன் பெறுமானம் யாது?





26. $3x - 2y = 8$, $2x - 3y = 2$ என்பவற்றைத் தீர்த்து x, y ஐ காணாமல் x+y இன் பெறுமானத்தைக் காண்க.

27. $\sqrt{44} : \sqrt{11}$ எனும் விகிதத்தை எளிய வடிவில் தருக.

28. a : b = 3 : 2, a : c = 2 : 6 ஐ காண்க.

29. மடக்கைவாய்ப்பாடின்றிப் பெறுமானம் காண்க. lg35 - lg7 + lg20

30. இம்மூன்று கோடுகளில் இருந்தும் சமதூரத்தில் அமையும் புள்ளியைக் காண்பதற்கான பரும்படிப் படத்தை உமது தாளில் வரைந்து காட்டுக.



### பகுதி B

01. வருட வருமானத்தில் முதலாவது ரூபா 200,000 இற்கு வரிவிலக்களிக்கப்பட்டுள்ளது. அடுத்த ரூ. 150,000 இற்கு 12% வருட வரியும், அடுத்த ரூபா 200,000 இற்கு 15% வருட வரியும் எஞ்சிய தொகைக்கு 20% வருட வரியும் அறவிடப்படுமாயின், ரூபா 800,000 ஐ வருட வருமானமாகப் பெறும் ஒரு நபர்,
 1) எவ்வளவு வருமானத் தொகைக்கு 20% வருட வரி செலுத்த வேண்டும்?
 2) செலுத்த வேண்டிய மொத்த வரித்தொகை யாது?
 3) இந்நபரின் வருட வருமானம் ரூபா 20a ஆகவும். வரிவிலக்குத் தொகை ரூபா 4a அடுத்த ரூபா 5a இற்கு r% வருட வரியும் அடுத்த 8a இற்கு 2r% வரியும், மீதித் தொகைக்கு (r+2)% வரியும் அறவிடப்படுமாயின் அவரின் மொத்த வரியை T எனக் கொண்டு T = 3a/50 (4r+1) எனக்காட்டுக.


02. சார்பு $y = 5 - x^2$ இன் வரைபை வரைவதற்குப் பெற்ற x இனதும், y இனதும் பெறுமானங்கள் இடம்பெறும் பூரணமற்ற ஓர் அட்டவணை கீழே காணப்படுகின்றது.

| X | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | -11 | -4 | 1 | 4 | 5 | ...... | 1 | -4 | -11 |

 1) 1. இவ்வட்டவணையை உங்கள் விடைத்தாளில் பிரதிசெய்து அதில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.
  2. வரைபுத்தாளில் X அச்சு வழியே பத்துச் சிறிய சதுரங்கள் ஓர் அலகையும் Y அச்சு வழியே பத்துச் சிறிய சதுரங்கள் இரு அலகுகளையும் வகைக்குறிக்குமாறு உள்ள அளவிடையை எடுத்து மேற்குறித்த சார்பின் வரைபை வரைக.
 2) உங்கள் வரைபைப் பயன்படுத்தி,
  1. சார்பின் உயர்ந்தபட்சப் பெறுமானத்தைக் காண்க.
  2. சார்பு நேராகக் குறையும் X இன் ஆயிடையைக் காண்க.
  3. $\sqrt{5}$ இன் பெறுமானத்தைக் கிட்டிய ஒரு தசம தானத்துக்குப் பெறுக.
  4. $5 - x^2 = x$ என்ற சார்பின் மூலங்களைக் காண்க.

03. 1) காரணிப்படுத்துக. $9x^2 - (y-2)^2$
 2) தீர்க்குக. $3x + 2y = 4$
  $2x - 3y = 7$
 3) அடுத்து வரும் இரு ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை 52 ஆகும். அதில் ஓர் எண் X எனின்,
  1. மற்றைய எண்ணை X இல் தருக.
  2. X இல் ஒரு சமன்பாட்டை அமைக்குக.
  3. சமன்பாட்டைத் தீர்த்து அவ்விரு எண்களையும் காண்க.

04. பிரபல பாடசாலையொன்றில் க. பொ. த (உ/த) பரீட்சையில் கணிதப்பிரிவில் தோற்றிய மாணவர்க ள் சித்தியடைந்த பாடங்கள் தொடர்பான விவரம் கீழுள்ள வென்னுருவில் காட்டப்பட்டுள்ளது.




 1) இணைந்த கணிதத்தில் மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் எத்தனை பேர்?
 2) இம்மூன்று பாடங்களிலும் சித்தியடையாத மாணவர்கள் எத்தனை பேர்?
 3) இணைந்த கணிதம், பௌதீகவியல் ஆகிய இரண்டிலும் சித்தியடைந்து ஆனால், இரசாயனவியலில் சித்தியடையாத மாணவர்கள் எத்தனை பேர்?
 4) இவர்களில் ஒருவரை எழுமாற்றாக தெரிவுசெய்தால் அவர் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்தவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
 5) இணைந்த கணிதம், இரசாயனவியல் ஆகிய இரண்டிலும் சித்தியடைந்து ஆனால், பௌதிகவியலில் சித்தியடையாதோரைக் குறிக்கும் பிரதேசத்தை நிழற்றுக.

05. 

> வாடகைக் கொள்வனவு முறையில் எமது நிறுவனத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்வதாயின் பொருளின் விலையில் 10%ஐ உடன் செலுத்த வேண்டும். மிகுதி ஆண்டுக்கு 24% வட்டியுடன் சேர்த்து 18 சமமாதக் கட்டணங்களாகச் செலுத்தலாம்.

இது ஒரு நிறுவனத்தின் விளம்பரம் ஆகும். இந்நிறுவனத்தில் ரூ. 40,000 பெறுமதியான ஒரு பொருளை வாடகைக் கொள்வனவு முறையில் கொள்வனவு செய்வதாயின்,
 1) உடன் செலுத்த வேண்டிய பணம் யாது?
 2) மாதம் ஒன்றிற்கான கடன் பகுதி எவ்வளவு?
 3) மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
 4) மாத அலகொன்றிற்கான வட்டியை காண்க.
 5) ஒரு மாதத் தவணைக் கட்டணம் யாது?


## கணிதம் II — 2 மணித்தியாலங்கள்

### பகுதி A

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.


01. மழைக்காலம் ஒன்றின்போது திறந்தவெளியில் இருந்து தகரப்பேணி ஒன்றின் 1/9 பங்கு முதலாவது நாளிலும், முதல் நாளின் இரு மடங்கு இரண்டாவது நாளிலும், முதல் நாளின் மும்மடங்கு மூன்றாவது நாளிலும் முறையே மழை நீரினால் நிரம்பின எனின்,
 1) இரண்டாம் நாளில் முழுத்தகரப்பேணியின் என்ன பகுதி நீரினால் நிரம்பியது?
 2) இரண்டாம் நாளிலே தகரப்பேணியின் இன்னும் எவ்வளவு பகுதி நிரப்பப்படுவதற்கு எஞ்சியுள்ளது?
 3) மூன்றாம் நாளின் இறுதியிலே தகரப்பேணியை நிரப்புவதற்கு 1500ml நீர் இடநேரிட்டது எனின், முழுத்தகரப் பேணியின் கொள்ளளவைக் காண்க.

02. அருகில் நிறத்துணிகளால் வடிவமைக்கப்பட்ட அலங்காரம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. அதில் பச்சை நிற சதுரவடிவத்துணியின் நீளம் 14cm ஆகும்.





 1) இந்த அலங்காரத்தின் விளிம்பு வழியே மஞ்சள் நிற றிபன் பொருத்தப்பட்டுள்ளது எனின் அதற்கு தேவையான றிபனின் நீளம் யாது?
 2) இதற்கு தேவையான பச்சை நிறத் துணியின் அளவு யாது?
 3) தேவையான சிவப்பு நிறத்துணியின் அளவைக் காண்க.
 4) இதில் சிவப்பு நிறத்துணியில் $2cm^2$ இன் விலை ரூ. 15. பச்சை நிறத்துணியில் $7cm^2$ இன் விலை ரூ. 10 எனின், துணிக்குச் செலவாகும் மொத்தப்பணத்தைக் காண்க.

03. வெவ்வேறு அளவுகளிலான உலோகக்கோல்களை உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனத்தில் நாளொன்றில் உற்பத்தி செய்யப்பட்ட உலோகக்கோல்களின் விவரம் கீழுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது.





 1) 10 - 20 என்ற வகுப்பாயிடையில் உற்பத்தி செய்யப்பட்ட கோல்களின் எண்ணிக்கை யாது?
 2) 70cm இற்கும் 100cm இற்கும் இடைப்பட்ட நீளம் கொண்ட கோல்களின் எண்ணிக்கையைக் காண்க?
 3) நாள் ஒன்றில் உற்பத்தி செய்யப்படும் கோல்களின் மொத்த எண்ணிக்கையைக் காண்க.
 4) இவ்வலையுருவரையத்தைப் பயன்படுத்தி 1m இலும் குறைந்த நீளமுடைய கோல்களின் எண்ணிக்கைக்கும் 1m இலும் கூடிய கோல்களின் எண்ணிக்கைக்குமான விகிதத்தை எளிய வடிவில் தருக.
 5) இக்கோல்கள் உள்ள பையிலிருந்து ஒரு கோலை எழுமாற்றாக எடுத்தால் 70cm இலும் கூடியதாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

04. a) $A = \begin{pmatrix} 2 & x \\ -1 & 6 \end{pmatrix}_{2\times2}$, $B = \begin{pmatrix} a & 5 \\ y & 3m \end{pmatrix}_{2\times2}$ என்பன சமுதாயம் எனின்,
  1. x, y, a, m இன் பெறுமானங்களைக் காண்க.
  2. A + B = 2A எனக்காட்டுக.
 b) முக்கோணி ABC இல் AB = x, BC = x + 3 ஆகும். இம் முக்கோணியின் பரப்பளவு $20cm^2$ எனின்,
  1. x இல் ஒரு சமன்பாட்டை அமைக்குக.
  2. சமன்பாட்டைத் தீர்த்து x ஐ காண்க.





05. a) மூன்று விமான நிலையங்களின் தளங்கள் A, B, C ஐ உரு காட்டுகின்றது A இலிருந்து B இற்கான தூரம் 70km உம் A இலிருந்து B இன் திசைகோள் 060° ஆகும். <BAC = 90° உம் AC = 100km ஆகும். 20km இற்கு 1cm ஆக எடுத்து அளவிடை வரிப்படத்தை வரைந்து,




(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலைக் காட்சிகள்



உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராசா தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை பெண்கள் கல்வி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளரும் பேராதனைப் பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளருமான திருமதி செல்வி திருச்செந்தூரன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (86)



உடுவில் அ.மி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் சமையற்கூடத் திறப்பு விழாவும் அண்மையில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் உலக உணவுத் திட்டத்தின் யாழ்.உப அலவலகப் பொறுப்பதிகாரி டிவேஷ் சண்கண்டர் சமையற் கூடத்தைத் திறந்துவைக்கிறார். (204)




புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட க.ஆனந்தராசா மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் நிற்கிறார்கள். (204)




வல்வை சிவகுரு வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் பி.கிருஸ்னானந்தன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். மேடையில் பாடசாலை அதிபர் அ.சிவநாதன் அமர்ந்திருகிறார். (319)

1. BC இன் தூரத்தைக் காண்க.
2. ஒரு விமானம் B இலிருந்து மு.ப 10.45 இற்கு புறப்படும் C ஐ மு.ப 11.03 இற்கு அடையுமாயின் விமானம் பறந்த சராசரிக் கதியை $kmh^{-1}$ இல் காண்க.

b) 8m நீளமான AB என்ற ஏணி உருவில் உள்ளவாறு சாய்ந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஏணி தரையுடன் 68° கோணத்தை அமைக்கிறது.




1. BC இன் நீளத்தைக் காண்க.
2. ஏணியின் அடியானது சுவரிலிருந்து 3m நீளமான CB திசையில் நகர்த்தப்பட்டால் இப் போது ஏணி தரையிலிருந்து எவ்வுயரத்தில் சுவரைத்தொடும்.

06. ஒரு பிரபல பாடசாலையில் எழுமாற்றாக எடுக்கப்பட்ட 30 நாட்களுக்கான மாணவர்களுக்கான மாணவர்களின் வரவு அவதானிக்கப்பட்டது. அதன் விபரம் கீழுள்ள அட்டவனையில் தரப்பட்டுள்ளது.

| மாணவர்களின் எண்ணிக்கை | 301-400 | 401-500 | 501-600 | 601-700 | 701-800 | 801-900 | 901-1000 |
|---|---|---|---|---|---|---|---|
| மாணவர்களின் வருகை தந்த நாட்களின் எண்ணிக்கை | 3 | 4 | 7 | 6 | 5 | 3 | 2 |

1) இப்பரம்பலின் ஆகாரம் யாது?
2) 601 - 700 என்ற வகுப்பாயிடையின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாக கொண்டு மாணவர்களின் இடையைக் காண்க. ( விடையை கிட்டிய முழு எண்ணில் தருக.)
3) இப்பாடசாலையில் மதிய உணவிற்காக உரு நாளுக்கு ஒரு மாணவனுக்கு ரூபா 60 செலவிடப்படும் எனின், 30 நாட்களுக்கு செலவாகும் மொத்தப்பணம் எவ்வளவு?


## பகுதி B

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

07. நவீன் நாள்தோறும் சிறுதொகைப் பணத்தைத் தனது உண்டியலில் இட்டுவந்தார். முதல் நாள் இட்ட பணத்திலும் பார்க்க மறுநாள் ரூபா 3.00 அதிகமாக இடும் பழக்கத்தை அவர் கொண்டிருந்தார்.
1) இப்பழக்கத்தை ஆரம்பித்து 8ஆவது தினத்தில் 24 ஐ உண்டியலில் இட்டால் முதல் நாள் எவ்வளவு பணத்தை இட்டு ஆரம்பித்தார்?
2) ஆரம்ப தினத்தில் ரூபா 2.00 ஐ இட்டிருந்தால் 15 நாட்கள் முடிவில் எவ்வளவு பணத்தைச் சேமித்திருப்பார்?
3) ரூபா 5 ஐ ஆரம்ப தினத்தில் இட்டு சில தினங்களின் முடிவில் ரூபா 670.00 ஐச் சேமிக்க முடிந்தது. அவன் n தினங்களில் இப்பணத்தைச் சேமித்திருப்பின் $3n^2+7n-1340=0$ எனக் காட்டுக.
4) இச்சமன்பாட்டைத் தீர்த்து n ஐக் காண்க.


08. நேர்விளிம்புகள் cm/mm அளவுகருவி, கவராயம் என்பவற்றைப் பயன்படுத்தி,
1) BC = 6cm, <ABC = 60°, AB = 5cm ஆகவுள்ள முக்கோணி ABC ஐ வரைக.
2) A இனூடாக BC இற்கு சமாந்தரம் அமைக்குக.
3) கோடுகள் AB, BC இற்கு சமதூரத்தில் அசையும்படியும், நீங்கள் வரைந்த சமாந்தரக் கோட்டில் இருக்கும்படியும் புள்ளி D ஐக் குறிக்குக.
4) BD ஐ அளந்து எழுதுக.
5) முக்கோணிகள் ABC, BCD இன் பரப்பளவுகள் சமனாகும். இதற்கான காரணத்தை எழுதுக.

09. h உயரமும் r ஆரையும் உடைய ஓர் உருளை வடிவப் பாத்திரத்தினுள் அதே ஆரையும் அதே உயரமும் கொண்ட செவ்வட்டத் திண்ம உலோகக் கூம்பு ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளவாறு வைக்கப்பட்டுள்ளது. கிடை மேசை ஒன்றின் மீதுள்ள அப்பாத்திரத் தொகுதி நீரால் முற்றாக நிரப்பப்படுகிறது.





1) நிரப்பப்பட்ட நீரின் கனவளவு $2/3\ \pi r^2h$ எனக்காட்டுக.
2) h = 2r ஆயின், இந்நீரின் கனவளவு அவ்வுருளைப் பாத்திரத்தின் ஆரையின் பருமனுடைய கோளம் ஒன்றின் கனவளவுக்குச் சமன் எனக் காட்டுக.
3) h = 2r, r = 3.5cm நிரப்பப்பட்ட நீரின் கனவளவைக் கிட்டிய முழு எண்ணில் தருக.

10. a) ஒரு வட்டத்திற்கு வெளிப்புள்ளியில் இருந்து அவ்வட்டத்திற்கு வரையப்பட்ட இரு தொடுகோடுகளின் நீளங்கள் சமன் எனவும், இத் தொடுகோடுகள் தொடுபுள்ளிகளை இணைக்கும் கோட்டுடன் சம கோணங்களை ஆக்குமெனவும் நிறுவுக.
b) O ஐ மையமாக உடைய வட்டத்திற்கு AP யும், CQ வும் இரு சமாந்தரத் தொடலிகளாகும். PQ ஆனது இவ்வட்டத்தை R இல் தொடுகின்றது. பின்வருவனவற்றை நிறுவுக.
1) A, O, C ஒரு நேர்கோட்டுப் புள்ளிகள்.
2) <QOP = 90°





11. உருவில் PU//DT//RS ஆகும்.கக் இல் யாதுமொரு புள்ளி A ஐயும், RS இல் யாதுமொரு புள்ளி B ஐயும் குறிக்குக.




1) முக்கோணி PQT யின் பரப்பளவுக்குச் சமனான முக்கோணி ஒன்றைப் பெயரிடுக.
2) முக்கோணி PTR இன் பரப்பளவு = முக்கோணி SQU இன் பரப்பளவு என நிறுவுக.
3) தரப்பட்ட உருவில் A, B ஐக் குறிக்குக.
4) நாற்பக்கல் AQBT இன் பரப்பளவு = முக்கோணிகு SQU இன் பரப்பளவு என நிறுவுக.

12. a) a = { 1, 2, 3, 4, 5, 6, 7, 8 }
A = { "46216" என்ற எண்ணில் உள்ள இலக்கங்கள் }
B = { x : 1 ≤ x < 8, x - சதுர எண்கள் }
1) தொடைகள் A, B இன் மூலகங்களை எழுதுக.
2) தரவுகளை வென்னுருவில் குறிக்குக.
3) $B' \cap A$ ஐ நிழற்றிக்காட்டுக.

b) பெட்டி A இனுள் 3 சிவப்புநிற மாபிள்களும், 2 நீலநிற மாபிள்களும் உள்ளன. பெட்டி B இல் 4 சிவப்புநிற மாபிள்களும் 3 நீலநிற மாபிள்களும், உள்ளன. பெட்டி A இலிருந்து ஒரு மாபிளை எழுமாற்றாக எடுத்து பெட்டி B இனுள் இடப்பட்ட பின்னர் பெட்டி B இலிருந்து ஒரு மாபிளை எழுமாற்றாக எடுத்து பெட்டி A இனுள் இடப்பட்டது.




1) இத்தகவலை மரவரிப்படத்தில் குறிக்குக.
2) பெட்டி A இல் 3 சிவப்புநிற மாபிள்கள் இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கிறது இங்கிலாந்தின் ஆதிக்கம் தோல்வியைத் தவிர்க்க ஆஸி. போராட்டம்

அடிலெய்ட், டிச. 07

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் இரண்டாவது சமரில் இங்கிலாந்து



அணியின் ஆதிக்கம் தொடர்ந்த வண்ணமே இருக்கிறது. அதேவேளை, தோல்வியைத் தவிர்க்க ஆஸி. கடும்போராட்டத்தில் ஈடுபட்டுவருகிறது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகிறது.

முன்னர் நடந்த முதலாவது போட்டி சமனிலையில் முடிந்தது.

இந்நிலையில் இரண்டாவது போட்டி கடந்த வெள்ளியன்று ஆரம்பமாகியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதல் நாளிலேயே 245 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பின்னர் தனது இனிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் 4 விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து 551 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

பீற்றர்சன் (213), பெல் (41) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

நேற்றுத் தனது இனிங்ஸை மீண்டும் தொடர்ந்த இங்கிலாந்து அணி, மேலதிகமாக ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து மொத்தமாக 620 ஓட்டங்களைக் குவித்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

பீற்றர்சன் 227 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந் தார். பெல் 68 ஓட்டங்களுடனும், பிரேயர் 27 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

பின்னர், 375 ஓட்டங்கள் பின்னிலையுடன் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலியா, ஓரளவு சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய வோட்ஷன் - கடிச் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

ஆஸ்திரேலிய அணி 84 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை ஸ்வான் வீசிய பந்தில் கடிச் (43) ஆட்டமிழந்து சென்றார்.

பின்னர் வந்த அணித்தலைவர் பொண்டிங் (9) ஏமாற்றிச் சென்றார்.

அவரைத் தொடர்ந்து அரைச்சதம் கடந்த வோட்ஷனும் (57) ஆட்டமிழந்து சென்றார்.

அதன் பின் களம் புகுந்த ஹஸி, மறுமுனையில் நின்று ஆடிக்கொண்டிருந்த கிளார்க்குடன் இணைந்து அணியைச் சரிவிலிருந்து மீட்கும் பணியைச் செய்தார்.

அடிலெய்டிலும் மழை அடிக்கடி புகுந்து விளையாடியதால் ஆட்டமும் இடையிடையே தடைப்பட்டது.

நேற்று ஆட்ட நேரம் முடியும்போது ஆஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 238 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

நேற்றைய நிலவரப்படி ஆஸ்திரேலிய அணி 137 ஓட்டங்களால் பின் தங்கியுள்ளது.

அதேவேளை, இன்று ஆட்டத்தின் கடைசி நாள் என்பதால் ஆஸ்திரேலிய வீரர்கள் நிலைத்து நின்று ஆடினால் ஆட்டத்தைச் சமனிலைப் படுத்த முடியும். மாறாக விரைவாகவே ஆட்டமிழந்து சென்றால் இங்கிலாந்து வெற்றிபெற்றுவிடும்.

# சிம்பாப்வேயுடனான ஆட்டத்தில் பங்களாதேஷுக்கு 2ஆவது வெற்றி

சிம்பாப்வே அணிக்கு எதிரான மூன்றாவது போட்டியில், 65 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றுள்ளது.

பங்களாதேஷ் - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்றுவருகிறது.

முன்னர் நடந்து முடிந்த இரண்டு போட்டிகளிலும் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றன.

இந்நிலையில் இரண்டாவது போட்டி நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 246 ஓட்டங்களைச் சேர்த்தது.

அந்த அணி சார்பாக ஆகக்கூடுதலாக சஹிப் அல்ஹசன் 73 ஓட்டங்களையும், ராஹிம் 63 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பின்னர் 247 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது.

இதன் மூலம் 65 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக சஹிப் அல்ஹசன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் 5 போட்டிகளைக் கொண்ட தொடரில் 2-1 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி முன்னிலை பெற்றுள்ளது.



# பார்சிலோனா-ரியல் மாட்ரிட் அணிகளுக்கு வெற்றி

பாம்பலோனா, டிச. 07

'ஸ்பானிஷ் லீக்' உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த போட்டிகளில் பார்சிலோனா, ரியல் மாட்ரிட் அணிகள் வெற்றிபெற்றன.

ஸ்பெயினின் பாம்ப்லோனா நகரில் நடந்த, ஸ்பானிஷ் லீக் உதைபந்தாட்டத் தொடரின் 'லீக்' போட்டியில் பார்சிலோனா - ஓசாசுனா அணிகள் மோதின.

இதில் லயனல் மெஸி 2 கோல்களை அடித்து கைகொடுக்க, பார்சிலோனா அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் பார்சிலோ அணி, 37 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

மற்றொரு போட்டியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ 2 கோல்களை அடித்து கைகொடுக்க, ரியல் மாட்ரிட் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வாலன்சியா அணியை வீழ்த்தியது.

# இந்தியா - நியூஸிலாந்து 4ஆவது மோதல் இன்று

பெங்களூர், டிச. 07

இந்தியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடரின் நான்காவது போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இந்தியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் இந்தியாவில் நடைபெற்றுவருகிறது

இத்தொடரில் ஏற்கனவே முடிந்த 3 போட்டிகளிலும் இந்திய அணி வெற்றிபெற்று தொடரையும் கைப்பற்றியது.




இந்நிலையில், 4ஆது ஒருநாள் போட்டி இன்று பெங்களூரில் பகல்-இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது. பிற்பகல் 2.30 மணிக்கு தொடங்குகிறது.

# கொச்சி அணியில் விளையாட ஆசை!

திருவனந்தபுரம், டிச. 07

ஐ.பி.எல். போட்டிகளில் பஞ்சாப் அணிக்காக விளையாடி வந்த இந்தியக் கிரிக்கெட் அணியின் வீரரான ஸ்ரீசாந்த், கொச்சி அணியில் விளையாட விருப்பம் தெரிவித்துள்ளார்.



கேரள மாநிலத்தை சேர்ந்தவர் ஸ்ரீசாந்த். தற்போது கேரள மாநிலத்திற்காக கொச்சி அணி உருவாக்கப்பட்டுள்ளது. அந்த அணி மீதான சர்ச்சைகள் தீர்க்கப்பட்டு அடுத்த ஐ.பி.எல். தொடரில் விளையாட அனுமதியும் கிடைத்துள்ளது.

இந்நிலையில், அடுத்த ஐ.பி.எல். தொடரின்போது கொச்சி அணிக்காக ஆட ஸ்ரீசாந்த் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

எனது சொந்த மாநிலமான கொச்சி அணியில் விளையாட ஆர்வமாக இருக்கிறேன். நான் அணியில் நேரடியாக இடம்பெறுவேனா அல்லது ஏலம் மூலம் எடுக்கப்படுவேனா என்பதைச் சொல்லமுடியாது.

உள்ளூர் அணியில் விளையாடுவது மனதுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்பதால் கொச்சி அணிக்காக விளையாட விரும்புகிறேன்.

கொச்சி அணி உருவாகியிருப்பதன் மூலம் கேரளாவில் விளையாட்டு மேம்பாடு அடையும் என்பது மட்டும் அல்ல சுற்றுவாத்துறையும் வளர்ச்சி அடையும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

# கெய்லைத் தக்க வைக்க கல்கத்தா அணி விருப்பம்



புதுடில்லி, டிச. 07

ஐ.பி.எல். போட்டிகளுக்காக கல்கத்தா அணி கிறிஸ்கெய்லைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ளவிரும்புகிறது.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இந்த முறை ... புதியதாக ஏலம் விடப்படவுள்ளார்கள்.

இருப்பினும், ஒவ்வொரு அணிகளும் விருப்பமிருந்தால் 4 வீரர்களை மட்டுமே தக்க வைத்துக்கொள்ளலாம்.

அந்த வகையில் கல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மேற்கிந்தியத் தீவுகள் வீரரான கிறிஸ் கெய்லை மட்டும் தக்க ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பிரதேச சபை

## மரக்கறிச் சந்தைகள் இறைச்சிக்கடைகள் கருவாட்டுக்கடைகள் மீன் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோருதல் - 2011

பூநகரி பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ் காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மரக்கறிச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், 01.01.2011 முதல் 31.12.2011 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி 08.12.2010 - 09.12.2010 நண்பகல் 12.00 மணிவரை.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி-13.12.2010 நண்பகல் 12.00 மணிவரை .

கேள்வி திறக்கும் திகதி 14.12.2010 பி.ப 1.00 மணிவரை.

1. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி செயலாளர் பிரதேச சபை பூநகரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்படல் வேண்டும். அன்றைய தினம் அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் விண்ணப்பத்தினை இடலாம். இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
2. , உள்ளூராட்சி மன்றத்தின் அங்கத்தவராக இருக்கும் எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டாலும் தவறுகள் இனங்காணப்பட்டால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. ஆகக் குறைந்த கேள்வித் தொகையினை விட குறைந்த கேள்வி கோருபவருக்கு கேள்வி நிராகரிக்கப்பட்டு கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
4. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது நிராகரிக்க செயலாளருக்கு அதிகாரம் உண்டு.
5. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் மூன்றிலொரு பகுதியினை 21.12.2010 திகதிக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்தல் வேண்டும். மிகுதித் தொகையினை சமனான தொகைகளில் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதியில் சபைக்கு செலுத்த வேண்டும்.
6. கேள்விதாரர் கேள்விப்பத்திரக்கட்டணம் கேள்வித்தொகை மற்றும் மாத வாடகை என்பவற்றிற்கு வற்வரி 12% தே.க.எ வரி 3% செலுத்த வேண்டும்.
7. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
8. சகல உப அலுவலகங்களிலும் உள்ளடங்கும் ஒவ்வொரு சந்தைக்கான துவிச்சக்கர வண்டி மற்றும் வாகன தரிப்பிடங்களுக்குமான கட்டணம் மீளளிக்க முடியாத கேள்வித் தொகை ரூபா 100.00 உம் மீளளிக்க கூடிய கேள்வித்தொகை ரூபா 1000.00உம் செலுத்தப்படல் வேண்டும். ஆகக் குறைந்த கேள்வித்தொகை ரூபா 12000.00 ஆகும் .
9. மேலதிக விவரங்களை தலைமை அலுவலக, அலுவலக நேரத்தில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்
பிரதேச சபை, பூநகரி.

2011 ஆம் ஆண்டு மரக்கறிச் சந்தைகள் இறைச்சிக்கடைகள் கருவாட்டுக்கடைகள் விபர அட்டவணை

| தொ.இல | குத்தகைகளிற்கான கடை விபரம் | ஆரம்ப கேள்வித்தொகை (VAT + NBT) நீங்கலாக | மீளளிக்ககூடிய கேள்வித்தொகை | மீளளிக்க முடியாத கேள்வித்தொகை(VAT + NBT)நீங்கலாக |
|---|---|---|---|---|
| | **பூநகரி உப அலுவலகம்** | | | |
| 1 | பூநகரி மரக்கறிச்சந்தை | 108000.00 | 2000.00 | 500.00 |
| 2 | பூநகரி மீன் சந்தை | 96000.00 | 2000.00 | 500.00 |
| 3 | பூநகரி மாட்டிறைச்சிகடை | 84000.00 | 2000.00 | 500.00 |
| 4 | பூநகரி ஆட்டிறைச்சிகடை | 24000.00 | 1000.00 | 250.00 |
| 5 | பூநகரி கோழி இறைச்சிககடை | 14000.00 | 500.00 | 100.00 |
| 6 | பூநகரி கருவாட்டு கடை | 12000.00 | 500.00 | 100.00 |
| 7 | பள்ளிக்குடா மீன் சந்தை | 96000.00 | 1000.00 | 250.00 |
| 8 | பள்ளிக்குடா மாட்டிறைச்சி கடை | 84000.00 | 1000.00 | 250.00 |
| 9 | முட்கொம்பன் மரக்கறிச்சந்தை | 14000.00 | 500.00 | 100.00 |
| 10 | முட்கொம்பன் மீன்சந்தை | 24000.00 | 500.00 | 100.00 |
| 11 | முட்கொம்பன் மாட்டிறைச்சிக்கடை | 36000.00 | 1000.00 | 250.00 |
| 12 | மண்ணித்தலை மீன் மரக்கறிச்சந்தை | 24000.00 | 500.00 | 100.00 |
| 13 | கனாமி மீன் சந்தை | 24000.00 | 500.00 | 100.00 |
| 14 | நாகதேவன்துறை மீன் சந்தை | 12000.00 | 500.00 | 100.00 |
| | **பல்லவராயன்கட்டு உப அலுவலகம்** | | | |
| 1 | ஜெயபுரம் மரக்கறிச்சந்தை | 60000.00 | 2000.00 | 500.00 |
| 2 | ஜெயபுரம் மீன் சந்தை | 72000.00 | 2000.00 | 500.00 |
| 3 | ஜெயபுரம் மாட்டிறைச்சிக்கடை | 72000.00 | 2000.00 | 500.00 |
| 4 | ஜெயபுரம் கோழி இறைச்சிகக்டை | 12000.00 | 500.00 | 100.00 |
| 5 | ஜெயபுரம் கருவாட்டு கடை | 6000.00 | 500.00 | 100.00 |
| 6 | 19 கட்டை மரக்கறிச்சிடை | 12000.00 | 1000.00 | 250.00 |
| 7 | 19 கட்டை மாட்டிறைச்சிக்கடை | 24000.00 | 1000.00 | 250.00 |
| 8 | கிராஞ்சி மரக்கறிச்சந்தை | 6000.00 | 500.00 | 100.00 |
| 9 | கிராஞ்சி மீன்சந்தை | 6000.00 | 500.00 | 100.00 |
| 10 | கிராஞ்சி மாட்டிறைச்சிகடை | 12000.00 | 500.00 | 100.00 |
| 11 | வலைப்பாடு மீன்சந்தை | 24000.00 | 500.00 | 100.00 |
| 12 | வலைப்பாடு மாட்டிறைச்சிக்கடை | 24000.00 | 500.00 | 100.00 |
| | **இரணைதீவு கிராம உப அலுவலகம்** | | | |
| 1 | நாச்சிக்குடா மரக்கறிச்சந்தை | 72000.00 | 2000.00 | 500.00 |
| 2 | நாச்சிக்குடா மீன் சந்தை | 72000.00 | 2000.00 | 500.00 |
| 3 | நாச்சிக்குடா கடற்கரை மாட்டிறைச்சிகடை | 60000.00 | 2000.00 | 500.00 |
| 4 | நாச்சிக்குடா கோழி இறைச்சிக்கடை | 15000.00 | 1000.00 | [illegible] |

# யுத்தத்தினால் மரணித்தவர்களை விட நீரிழிவால் இறப்போர் வீதம் அதிகரிப்பு

## ஐ.தே.க. உறுப்பினர் குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.07

யுத்தத்தினால் இறந்தவர்களை விட நீரிழிவு வியாதியினால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என குற்றம் சாட்டிய அநுராதபுர மாவட்ட ஐ.தே.க. உறுப்பினர் பி.ஹரிசன், இலவச சுகாதார சேவை என்பது பெயரளவில் மட்டுமே என்றும் விமர்சனம் செய்தார்.

சுகாதார மற்றும் சுதேச வைத்தியத் துறைகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றும்போதே இப்படிக் கூறினார்.

இன்று நாட்டின் மொத்த சனத்தொகையில் 15 வீதமானவர்கள் நீரிழிவு நோயாளர்களாக இருக்கின்றனர். குழந்தைகள் பிறப்பு விகிதத்தில் மூன்றுக்கு ஒரு குழந்தை எடை குறைந்து காணப்படுகின்றது.

தாய்மாரில் நான்கு பேருக்கு ஒருவர் மந்த போஷாக்கால்பாதிக்கப்பட்டுள்ளார்.

கர்ப்பிணித் தாய்மாருக்குப் போஷாக்குப் பொதியும் குழந்தைகளுக்குப் பாணும் தருவோம் என்று கூறிய மஹிந்த சிந்தனை காணாமற் போய் விட்டது.

இன்று வைத்தியசாலைகளில் பனடோல், பன்டேஜ், ஊசி - ஊசி மருந்து ஆகியன கடைகளில் வாங்கி வரும்படி டாக்டர்கள் கூறுகின்றனர்.

அப்படியானால் இலவச மருத்துவ சேவை என்பது கண்துடைப்பு. இன்று நவலோகாவிலும், லங்கா ஹொஸ்பிட்டலிலும் நிறைந்திருக்கும் நோயாளர்கள் பெரும் தனவந்தர்கள் அல்லர். கிராமப் புறங்களில் தமது காணிகளையும் சொத்துகளையும் விற்று நோயைக் குணப்படுத் திக்கொள்ள வேண்டும் என்று வரும் ஏழைகள்தான் அவர்கள்.

அரச வைத்தியசாலைகளில் இருதய சத்திர சிகிச்சைக்காகப் பெரும் எண்ணிக்கையானவர்கள் வரிசையில் காத்து இருக்கின்றனர்.

இவர்களுடைய முறை வரும்போது அந்த நோயாளர்கள் இறந்துவிடுகின்றனர். அரசு சகல வைத்தியசாலைகளிலும் விசேட சத்திரசிகிச்சை நிபுணர்களை நியமிக்க வேண்டும் - என்றார்.

## தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பு பிரசாரம் தீவிரம்

டெங்கு நோய் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

வாகனங்களின் சாரதிகள், சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையளார்கள், சுகாதாரத் தொண்டர்கள், நலன்புரி நிலைய மக்கள், பொதுமக்கள் ஆகியோரிடையே கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

பிரதேசம் முழுவதும் ஒலிபெருக்கி பொருத்திய வாகனங்களில் பிரசாரம் செய்வதுடன் இனங்காணப்பட்ட டெங்கு நோயின் தாக்கம் உள்ள இடங்களில் சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றின் உதவியுடன் புகை [illegible] நடைபெற்று வருகின்றன. (ஒ-207)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

அல்சேசன் நாயும் 3 குட்டிகளும் விற்பனைக்கு உண்டு

தொடர்பு:-021-4909717

# மரண அறிவித்தல்கள்

## சரவணை சின்னத்துரை



கிளானை கொல்லன் கலட்டியைப் பிறப்பிடமாகவும் கற்பக்குனை உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட சரவணை சின்னத்துரை நேற்று (06.12.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை முத்துப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பூதாத்தை தம்பதியரின் மருமகனும், செல்வத்தின் பாசமிகு கணவரும், செல்வராசா (பெரியண்ணை), தியாகராசா(தியாகு), மகராசா(வவ்வன்), ஸ்கந்தராசா(ஈசன்), காலஞ்சென்றவர்களான சண்முகராஜா, சுந்தரம்பாள், மற்றும் சாந்தினி தேவி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், ரஞ்சிதமலர், கமலாதேவி, மைதிலி, இராசலட்சுமி, சிவராசன்(கண்ணன்), புஸ்பநாதன் ஆகியோரது மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07.12.2010 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை இந்துமயானத்தில் பி.ப 1.00 மணிக்கு தகனம் செய் யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பக்குனை,*
*உடுவில்.* (573422)

தகவல்:
குடும்பத்தினர்,

## முத்தையா நடராசா (விக்கினராசா)



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா நடராசா நேற்று திங்கட்கிழமை (06.12.2010) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை அம்மான் - கனகம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற மகாலட்சுமி அம்மாவின் கணவரும் கமலாதேவி, சுசிலாதேவி, சிவராசா, வசந்தகுமாரி ஆகியோரின் தந்தையும் இராசையா (வேலாயுதம்) காலஞ்சென்றவர்களான சொர்ணாம்பிகை, பரமசிவம் மற்றும் மனோன்மணி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*
*0777111732* (106989)

தகவல்:
செல்வராசா (மருமகன்),
சுசிலாதேவி (மகள்)

## திருமதி செல்லத்துரை மீனாட்சியம்மா
(இளைப்பாறிய ஆசிரியை)



வதிரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை மீனாட்சியம்மா இன்று 06.12.2010 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சமூகஜோதி ஆ.ம. செல்வத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், பேரின்பநாயகம் (சட்டத்தரணி), சபாநாயகம், இராசநாயகம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரலேகா, இந்திராணி, ராதாமணி ஆகியோரின் அன்பு மாமியாரும், மங்களேஸ்வரன், மீரா, முரளி, பாரதி, மதுரா, மயூரன், ஜெயசேகரன் சிந்துஜா, வாகீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபராஜிதனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மாலை 5 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஆனந்த பவனம்"*
*மாலுசந்தி, கரவெட்டி.*
T.P.: 021-2263247, 0777554331

தகவல்:
செ.சபாநாயகம் J.P.

(ஒ/573420)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறிவிட்டது

பரந்தன் சந்திக்கும் இரணைமடு (55ஆம் கட்டை) சந்திக்கும் இடையில் பிறப்புச் சான்றிதழ், திருமண சான்றிதழ், அடையாள அட்டை, குடும்பப் படங்கள் IC அடிக்கட்டை உள்ளடங்கிய Bag ஒன்று தவறிவிடப்பட்டது. இதனைக் கண்டு எடுத்தவர்கள் கீழ் காணும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்புகொள்ளவும். சன்மானம் தரப்படும்.

**0776951920 (சந்திரன்)**
**0776540624 (சிவகாமி நாதன்)**

**விலாசம்:**
*கிளிநொச்சி விளையாட்டு மைதானத்துக்கு (ரோட்டிக்கோ பக்கத்தில், உள்ள பிள்ளையார் கோயிலில் கொடுக்கவும்.*

# ஜி.சீ.ஈ. மாணவருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 7

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் உள்ள ஆங்கில விரிவுரையாளர்களால் க.பொ.த (சா.த) பரீட்சையை மேற்கொள்ளவிருக்கும் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மூன்று மணிநேரம் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இணைய விரும்பும் அயற்பாடசாலை மாணவர்கள் கலந்து பயன் பெறுமாறு கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கேட்டுக் கொள்கின்றார்.

(ஒ-ஐ)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி பிலோமினா பாக்கியநாதர்

வலிகாமம் வலய பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க. பாடசாலை மனைப்பொருளியல் ஆசிரியை யசிந்தா பாக்கியநாதர் அவர்களின் அன்புத் தாயார் சிவபதமடைந்த அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா இறைவனடி சேர பிரார்த்திக்கின்றோம்.

**வலிகாமம் வலயம்,**
**மனைப் பொருளியல் ஆசிரியர்கள் கழகம்.**

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் அசிரியயை

**திருமதி வசந்தாதேவி தவபாலசிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு, அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

(சி/573406)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# FACULTY OF ARTS

## Postponement of Examinations

Due to unavoidable circumstances the following examinations have been rescheduled as follows:

1. Third Examination in Arts - 2009 Second semester
2. Third Examination in Fine Arts - 2009 Second semester

**Venue : Ramanathan Hall, University of Jaffna**

| Unit No. | Subject | Old date & Time | New date & Time |
|---|---|---|---|
| ASYC 32023 | Social Work & Practice | 08.12.2010 1.00 p.m. - 4.00 p.m. | 11.12.2010 9.00 a.m. - 12.00 noon |
| AEGA 32010 | English | 14.12.2010 1.00 p.m. - 3.00p.m. | 01.01.2011 9.00 a.m. - 11.00 a.m |
| ADNC 32033 | Western Dances | 13.12.2010 1.00 p.m. - 4.00 p.m. | 01.01.2011 12.00noon - 3.00 p.m. |
| ATAE 32033 | Tamil for Dance | 14.12.2010 9.00a.m. - 12.00 noon | 08.01.2011 9.00a.m. - 12.00 noon |

Candidates are kindly requested to take note of the new dates and time and be present at the scheduled Time.

Registrar.
06.12.2010

(C/573409)


**படிவம்**

01. தேசிய கல்வி நிறுவகம் டிப்ளோமா கற்கை நெறி 2011/2012.
02. இலங்கை நிர்வாக சேவைதரம் III திறந்த போட்டிப் பரீட்சை - 2010.

படிவங்கள் உண்டு

Bharathy Pathippakam.
430, K. K. S. Road, Jaffna



இதோ!
சித்த ஆயுள் வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல், நிவாரணி!
தீராத இருமல், சளி, இளைப்பு, மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg:-6382)AR/NO.228

யாழ். மாவட்ட ஏக விநியோகத்தர்கள்
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு-சத்திரச் சந்திக்கு அருகில்)


# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பனையை வசிப்பிடமாகக் கொண்ட

**திருமதி பரிமளம் ஜெயம்**
*(கல்யாணி)*

மலர்வு
23.02.1953

உதிர்வு
07.12.1998



எம் அன்புத் தெய்வமே அம்மா!
கண்களில் நீர் கலங்கி நிற்க
ஆழ்துயரம் எமை வதைக்க
பன்னிரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்ததம்மா
ஆனாலும் உங்கள் ஐந்து செல்வங்களும் -கணவரும்
நித்தம் நித்தம் ஈரவிழிகளோடு கலங்கித்தவிக்கின்றோம்.
ஈடு இணையில்லா எங்கள் தெய்வமே!
ஈடு இணையில்லா ஈசனடி சென்றீர்கள்.
உங்கள் உருவம் மறைந்தாலும்
உங்கள் நினைவு எம்மைவிட்டு
எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்
உங்கள் பிரிவு எமை விட்டு நீங்காது தாயே!
உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**உங்கள் பிரிவால் வாடும்:**
**கணவர்:-** வ.ஜெயம் (பனை)
**பிள்ளைகள்:-** ஜெயந்தி (சுவிஸ்), சுகந்தி (கொழும்பு), ஜெயந்தன் (சுவிஸ்), வசந்தி (நெல்லியடி), சுமிதா (நெல்லியடி).
**மருமக்கள்:-** சிறிஸ்வரலிங்கம் (சுவிஸ்), தவஞானம்(லண்டன்), விஜிதா (சுவிஸ்), சுகந்தகுமார் (நெல்லியடி), தசிராகன் (நெல்லியடி).
**பேரப்பிள்ளைகள்:-** சியானா, சிந்துஜா (சுவிஸ்), டனக்சாந், கோபிநாத் (கொழும்பு), யலுசன் (சுவிஸ்), அபோஜன், டனோஜன் (நெல்லியடி), மதுஷா, கபிஷா, கிஷான் (நெல்லியடி).

தற்காலிக முகவரி:
துன்னாலை தெற்கு,
மாலி ஒழுங்கை, கரவெட்டி.

கணவர் [illegible]

# மரண அறிவித்தல்

## சொர்ணலிங்கம் தனபாலசிங்கம்



புங்குடுதீவு, சரவணையைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி, சில்வா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சொர்ணலிங்கம் தனபாலசிங்கம் நேற்று (06.12.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொர்ணலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் தரணிதரனின் அன்புத் தந்தையும் விஜயலட்சுமி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் இராசேந்திரன், சகுந்தலா (சுவிஸ்), சாந்தகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற சாந்தமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசதுரை, வேணுகோபால், ஸ்ரீ ஆனந்தராசா (சுவிஸ்), பாலநந்தினி மஞ்சு (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2010) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் (வட்டக்கச்சி) நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*375, சில்வா வீதி,*
*வட்டக்கச்சி,*
*கிளிநொச்சி. 0778176100 - 021 320 8940.*

**தகவல்:**
**இராசேந்திரன் (தம்பி).**

# மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இல. **2327**
திகதி **05.12.2010**

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து **A** வெற்றி எண்கள் **2 5 7 2 2 9**

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | A | 2 | 5 | 7 | 2 | 2 | 9 | ரூபா. 14,708,328/= | பரிசு - |
| 1ம் பரிசுகள் | | 2 | 5 | 7 | 2 | 2 | 9 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் 01 |
| 2ம் பரிசுகள் | | | 5 | 7 | 2 | 2 | 9 | ரூபா. 100,000/= | பரிசுகள் 08 |
| 3ம் பரிசுகள் | | | | 7 | 2 | 2 | 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 63 |
| 4ம் பரிசுகள் | | | | | 2 | 2 | 9 | ரூபா. 1,000/= | பரிசுகள் 650 |
| 5ம் பரிசுகள் | | | | | | 2 | 9 | ரூபா. 100/= | பரிசுகள் 6409 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 9 | ரூபா. 20/= | பரிசுகள் 63726 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 2 | 5 | 7 | 2 | 2 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 06 |
| 8ம் பரிசுகள் | | 2 | 5 | 7 | 2 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 66 |
| 9ம் பரிசுகள் | | 2 | 5 | 7 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 664 |
| 10ம் பரிசுகள் | | 2 | 5 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 6375 |
| 11ம் பரிசுகள் | A | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 25447 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. **14,708,328.00**

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,015,510.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை

முடிவுகளை அறிய www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை வளர்ப்போர் சங்கங்களுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க ஏற்பாடு

## யு. என். எயிட்ஸ் நிறுவனம் நிதியுதவி

அச்சுவேலி.டிசெ.7

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது செயற்பட்டுக்கொண்டிருக்கும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிரந்தரமான கட்டடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு யு.என். எயிட்ஸ் நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு யு.என். எயிட்ஸ் நிறுவனம் 10 மில்லியன் டொலர்களை வழங்குகிறது.

யாழ். மாவட்டத்தில் தற்போது செயற்பட்டுக்கொண்டிருக்கும் 12 கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்களிலேயே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் தனியாருக்குச் சொந்தமான கட்டடத்திலேயே செயற்பட்டு வருகிறது.

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டை ஸ்திரப்படுத்தி அதன் ஊடாக அங்கத்தவரின் வாழ்வாதாரத்தையும், போசாக்கையும் மேல்நிலைப்படுத்துவதோடு பால், பால் உற்பத்தி பொருள்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் யு.என். எயிட்ஸ் நிறுவனம் சங்கங்களுக்கு நிரந்தரமான கட்டடங்களை நிறுவிக்கொடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அடுத்த வருடத் தொடக்கத்தில் கட்டட நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கவுள்ளது.

யு.எஸ். எயிட்ஸ் நிறுவனத்தின் உதவியை பெற்று கட்டட நிர்மாணப் பணியை மேற்கொள்வதற்கு சங்கத்தின் பெயரில் சொந்தமாக காணி இருக்கவேண்டும் அல்லது நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணி இருக்கவேண்டும்.

சொந்தமாக அல்லது நீண்டகால குத்தகையில் காணியை கொண்டுள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் காணி உறுதி மற்றும் ஆவனங்களுடன் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள வடமாகாண பிரதிப்பணிப்பாளர் திருமதி வக்ஸலா அமிர்தலிங்கத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-11)

## வர்த்தகர்களை விடுவிக்குமாறு ஜனாதிபதிக்கு சங்கரி கடிதம்

கொழும்பு, டிச.07

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தபோது அவர்களுக்கு நிதி உதவி செய்ததாகக் குற்றம் சாட்டி, யாழ்ப்பாணத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டுவரும் வர்த்தகர்களை விடுவிக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதி உள்ளார்.

இந்த நடவடிக்கை தொடர்பாக, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்களையும், தொழில் புரிந்தவர்களையும் விசாரணைக்கு உட்படுத்த நேரிடும் என்றும், கடந்த காலங்களில் பலவிதமான துன்பங்களை அனுபவித்தவர்கள் இந்த நடவடிக்கையால் தேவையற்ற தொந்தரவுக்கு உள்ளாக நேரிடும் என்றும், இதனால் வர்த்தக சமூகத்தைச் சேர்ந்த பலர் ஏற்கனவே மன ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஆனந்தசங்கரி தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

(மற்றொரு செய்தி 07ஆம் பக்கத்தில்)

### ஒளிவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 7

மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் ஒளி விழா நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கத்தோலிக்க மாணவர் மன்றத் தலைவர் செல்வி. டோ. மரியகொறற்றி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக மிருசுவில் பங்குத்தந்தை ம. பத்திநாதர் அடிகள் கலந்துகொள்வார்.

(ஐ)

### கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 7

காரைநகர் பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம் பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் பழைய மாணவர் சங்க நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளதால் பழைய மாணவர்களையும் நலன் விரும்பிகளையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

(201)


### திருத்தி வாசிக்கவும்

05.12.2010 உதயனில் 14ஆம் பக்கத்தில் பிரசுரமான இராஜலிங்கம் தசரதன் என்பவரின் மரண அறிவித்தல்ல இராமலிங்கம் தசரதன் எனத் திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.

### தேவை

முன் அனுபவமுள்ள ஒட்டுனர் (Welder) தேவை. தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை 13.12.2010 ஆம் திகதிக்கு முன்பாக கீழ்வரும் முகவரியில் நேரடியாக ஒப்படைக்கவும்.

**யுநரோவில்,**
**866, பருத்தித்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### மரண அறிவித்தல்



**சிவசுப்ரமணியம் சிவானந்தன்**

(முன்னாள் சிவான் அன்கோ உரிமையாளரும், ஓய்வுபெற்ற சொலிசிட்டர்,சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், அல்வாய் மேற்கு திக்கத்தை வதிவிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமாகிய சிவசுப்ரமணியம் சிவானந்தன் 01.12.2010 புதன்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்ரமணியம் சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கதிரித் தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும்,

பரமேஸ்வரியின் (லண்டன்)அன்புக் கணவரும், தர்ஷினி (லண்டன்), தயாபரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், சிவயோகலட்சுமி, சிவலிங்கம், சிவஞானலட்சுமி, சிவகுருநாதன், சிவகாமலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கணபதிப்பிள்ளை (அவுஸ்திரேலியா), தங்கவேலாயுதம் (இலங்கை), சிவகாமசுந்தரி (இலங்கை), காலஞ்சென்றவர்களாகிய திருநாவுக்கரசு, பூபேந்திரநாதன், குமாரரத்தினம், கண்மணிப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், ஜனார்த்தன், மகாலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அர்ஜுன் (லண்டன்), ஷாலினி (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 08.12.2010 புதன்கிழமை லண்டனில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பரமேஸ்வரி சிவானந்தன் (மனைவி)
பிரித்தானியா
தொலைபேசி: +442089060949

தகவல்:
(சி/513177) குடும்பத்தினர்.

### "நாட்டிய மயில் -2010"

Eu Lanka Forum நிறுவனத்தினால் எதிர்வரும் 11.12.2010 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்/இந்து மகளிர் கல்லூரிக் கலையரங்கில் நடத்த ப்படவுள்ள நாட்டியமயில் நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் போட்டியிடும் நாட்டியத் தாரகைகளில் ஒருவர் நாட்டிய மயிலாகத் தெரிவுசெய்யப்படவுள்ளார்.

இந்த நிகழ்வைக் கண்டுகளிக்க அகில இலங்கை ரீதியில் பல முக்கியமான கலைஞர்கள், கல்விமான்கள், நாடளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அதிதிகளாகக் கலந்துகொண்டு சிறப்பிக்க இருப்பதால் இந்த நிகழ்வை நேரில் கண்டுகளிக்க விரும்புவோர் 08.12.2010க்கு முன்னராக எமது Eu Lanka Forum நிறுவனத்தின் தொலைபேசிகளினூடாக ஆசனப்பதிவுகளினை உறுதிப்படுத்துமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

பிரவேசம் இலவசம்

★★★

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:
021-7200157, 021-2227542

(106975)

### பாடசாலை உபகரணம் கூறுவிலை கோரல்

எமது தேவைக்குப் பின்வரும் பாடசாலை உபகரணங்கள் தேவைப்படுகின்றன.

| | |
|---|---|
| 03 கட்டு மொனிற்றர் கொப்பி | 24,000 |
| 04 கட்டு மொனிற்றர் கொப்பி | 20,000 |
| பேனை | 8,000 |

மேற்படி கூறுவிலை வழங்குவதற்கான இறுதித் திகதி 15.12.2010 ஆகும். விண்ணப்பம் எதிர்வரும் 15.12.2010ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக மேற்படி பொருள்களின் தரம், வகை என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். இவ் விண்ணப்பங்கள் அன்றைய தினமே திறக்கப்பட்டு ஆராயப்படும். அத்தருணம் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமளிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது கூறுவிலையை மூடிய கடிதவுறையில் அதன் இடதுபக்க மேல் மூலையில் "கூறுவிலை" எனக் குறிப்பிட்டு கீழ் காட்டப்பட்ட முகவரிக்கு 15.12.2010 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும்.

தொடர்புக்கு:

பொதுமுகாமையாளர்
வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து),
இல. 52, சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021 222 5072.

### மரண அறிவித்தல்

**தம்பிப்பிள்ளை சுதாகரன் (அரசன்)**



பலாலியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சுதாகரன் (29.11.2010) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் சத்தியபாமாவின் அன்புக் கணவரும், கவிஷனின் பாசமிகு தந்தையும் பூமணி, சாந்தினிதேவி, சந்திராதேவி (லண்டன்), சந்திரசேகர் (சேகர் - சுவிஸ்), கேதீஸ்வரன் (கிளியன்), சரோஜாதேவி (ஜேர்மனி), சசீஸ்வரன் (சிவா - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம், ரஞ்சன், நிர்மலன், பாலகிருஷ்ணன், பிறேமாவதி, பவானி, சோபனா ஆகியோரின் அன்பு மைத்துனரும், இதயகுமார் (சுவிஸ்), சுபாஸ்குமார் (லண்டன்), லுமேஸ்குமார் (இத்தாலி), துஷாந்தகுமார் (சுவிஸ்), றொசாந்தகுமார், நிஷாந்தகுமார், கீர்த்தனா, நிரோஜினி (பிரான்ஸ்), நிதர்ஷனா, நிரோஜன் (லண்டன்), நிதுஷா (லண்டன்), பகிதா (ஜேர்மனி), சகிதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் பிரீத்தி (சுவிஸ்), சகீர்த்தி (சுவிஸ்), அபிநயா (லண்டன்), தசானா (லண்டன்) அஜந்திகா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2010) புதன்கிழமை அவுஸ்திரேலியாவில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
021 300 6792.

தகவல்:
குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்



**பரமு தெய்வேந்திரன் (கோபதி)**

(ஓய்வு பெற்ற இலிகிதர் - எழுத்தாளர்)

கந்தரோடை இக்கிராணையைப் பிறப்பிடமாகவும், இல.07, பேக்கரி ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரமு தெய்வேந்திரன் நேற்று (06.12.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமு - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் (நாகம்மா) அன்புக் கணவரும், பாலகணேஷின்(சயன்ஸ் அக்கடமி, நல்லூர், அரியாலை)அன்புத் தந்தையும் பிரேமலதாவின் அன்பு மாமனாரும், தணிகைவாணனின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், லட்சுமி, ஆகியோரின் சகோதரரும், சுப்பிரமணியதாஸ் (தாசன்), செம்பொற்சோதி, ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2010)புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.07, பேக்கரி ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
(106983) பாலகணேஷ் (மகன்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரையில் எந்தவித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. 480 மாடுகளும், 10,627 வீடுகளும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. (ஒ-சி) (முன்னர் வந்த செய்தி 03 ஆம் பக்கத்தில்)

## உண்ணாவிரதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏறி உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை மின்சார சபையில் மத்திய மாகாணம் முழுதும் ஒப்பந்த முறையிலும் தற்காலிகமாகவும் பணிபுரியும் ஊழியர்கள் சுமார் 400 பேர் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

நேற்று இரவு 7 மணி அளவில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் போராட்டத்தை கைவிடுமாறு கோரினர். எனினும் இதனை அவர்கள் ஏற்றுக்கொள் ளாததன் காரணத்தால் கண்ணீர் புகை மற்றும் நீர் பீரங்கிகளால் பிரயோகம் நடத்தினர்.

இதில் ஆர்ப்பாட்டக்காரர்களில் இருவர் காயமடைந்து சிகிச்சை பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பதற்றநிலை ஏற்பட்டபோதும் ஊழியர்கள் தொடர்ந்தும் தமது போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

(எ)

## தென்னிந்தியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லக்ஷர் - இ - தொய்பா அமைப்பு தன்னை விஸ்தரிப்பது குறித்தும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான், நேபளம் ஆகிய நாடுகளைத் தளமாகக் கொண்ட லக்ஷர் இ தொய்பா உறுப்பினர்களின் உதவியுடன் தென்னிந்தியாவில் இரு அணிகளை நிலைப்படுத்துவதற்கு லக் ஷர் தலைவர்களில் ஒருவரான ஷபீக் கபா கடுமையாக முயற்சி செய்தார் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது என அந்த இணையம் தெரிவித்துள்ளது. (ஒ-சி)

## பிரிட்டன்தான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்பட்டார்.

பிரிட்டன் ஐந்து நட்சத்திர ஜனநாயகம் உள்ள நாடு என்பதால், தமது உரைக்கு எதுவிதத் தடையும் ஏற்படுத்தப்படமாட்டாது என்று நம்பி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பை ஏற்று அங்கு சென்றார்.

புலிகள் அமைப்புக்கு தடை விதிக்கப்பட்டுள்ள அந்த நாட்டில் புலிக்கொடிகளை ஏந்தி மஹிந்தவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் எமக்கு எதுவித அவமானமும் ஏற்படவில்லை.

ஐந்து நட்சத்திர ஜனநாயக நாட்டில் இப்படியொரு சம்பவம் நடந்ததையிட்டு அவமானப்படவேண்டியவர்கள் நாம் அல்லர். - என்றார். (ஒ-சி)

## கரு ஜயசூரியவுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இவ்வாறு கூறியிருந்தால் அது பாரதூரமான விடயமாக நோக்கப்பட்டிருக்காது. நாட்டின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஐ.தே.க. இவ்வாறு கூறியதுதான் பாரதூரம். வெளிநாடுகளில் உள்ள புலி ஆதரவாளர்கள் இதை ஓர் ஆதாரமாகத் தூக்கிப் பிடிப்பர்.

தேசிய ஆடையை அணிந்துகொண்டு கரு ஜயசூரிய நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டார்.

அவர் தேசிய ஆடை அணிந்த புலியாகிவிட்டார். அந்தத் தேசிய ஆடையைக் கழற்றிவைத்துவிட்டு வேறு ஆடையை அணிவது நல்லது. அவர் புலிகளின் பிரதம கொறடா வாகிவிட்டார்.

கருவுக்கு எதி ராக நாம் விரை வில் நாடாளு மன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவோம். அவரது அரசியல் செயற்பாட்டை நாட்டுக்கு வெளிப்படுத்துவோம் - என்றார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நாடாளு மன்றத்தில் அறிவித்திருந்தது தெரிந்ததே.

(ஒ-சி)


நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
புதிய கல்வியாண்டு - 2011
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம்:-11-12-2010 (சனி)பி.பகல் 3.30 மணி
*அனுமதிகள் இன்று முதல் வழங்கப்படுகின்றன

ஐடியல் அக்கடமி
தரம் 6 முதல் O/L, A/L வரை
கல்வியாண்டு 2011
ஆரம்பம்: 09.12.2010 வியாழன் 3.30Pm
★ ஒழுங்கும், கட்டுப்பாடும் நிறைந்த நிறுவனம்.
கணிதஆசானும் நிர்வாகியும்
V.N.பத்மநாதன்.

விற்பனையாகிறது
பொது நிதி முகாமைத்துவம்
ஆக்கம் - கில்பேட் குணம்
ஏக விநியோகத்தர்
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம் - சாவகச்சேரி
2229881 2270003

யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
To Study in UK(London), Canada, Australia, Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now
FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT
100% நல்ல சம்பளம்
கல்வித் தகமை: G.C.E.O/L போதுமானது
After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½ Years Diploma & Degree
IELTS (International English Language Testing System) (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We Gurantee Minimum 6.5 Band upwards
Diploma in English [2 Months] Advanced Diploma in English [2 Months]
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
100 % பயிற்சி 100 % வெற்றி
புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.
பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.
Quick Learning Course திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913 0714299935
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 11.12.2010 காலை : 10.00 மணி

மரண அறிவித்தல்
திருமதி மிக்கேல் ஞானம்மா
கூழாவடி கிழக்கு, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மிக்கேல் ஞானம்மா நேற்று திங்கட்கிழமை (06.12.2010) காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
கூழாவடி, கிழக்கு, ஆனைக்கோட்டை. (106990) தகவல்: பிள்ளைகள்.

உடனடியே.....
2011 January கல்வி ஆண்டில் U.K. கனடா செல்வதற்கான அரிய வாய்ப்பு!
* குறைந்த பட்ச G.C.E. O/L உள்ளவர்களுக்கும் இறுதிச்சந்தர்ப்பம்
* பல நிறுவனங்களை முந்திக்கொண்டு செல்லும் இலங்கையில் முன்னணி நிறுவனமான European college of higher Studies வழங்கும்
* IELTS அவசியம் இல்லை
* Sponsor வசதி குறைந்த விலையில்
* முன்கட்டிய கட்டணம் எதுவும் இல்லை.
* அனைத்துச் செலவுகளும் அடங்கலாக 700,000/-
* London city, out of city என்பவற்றின் கல்லூரிகளின்
* நெருங்கிய ஒரே ஒரு நிறுவனம்.
* நீண்ட நாள் அனுபவம்.
* கல்லூரிகளின் கட்டணம் ReFund ஆக குறுகிய காலத்தில் பெற்றுத் தரப்படும்
Study in U.K, Canada.
- தொழில் வாய்ப்புக்கான உறுதி மொழி.
- வடக்கு மாணவர்களின் நம்பிக்கையுடனான தெரிவு
தொடர்பு:- European college of higher Studies
190, Grandpass Road, Colombo-14 Tel.no:- 0114366331, 0773823872
315½, Parameaswara junction, Palaly Road Jaffna. Tel.no:- 0213734747, 0773537378.

Royal Academy
Navalar Road, Nallur (Near TCT)
Gr. 6 to O/L
English Medium Classes
Maths - S.Sutharsan B.Sc. (Jaffna College)
Science - A.Thabesan B.Sc.; S.Srikumar B.Sc. (Jaffna Hindu College); S.Gobinath (St. Patrick's College)
History - A.Gunasingam B.A. (History Spl.) (Jaffna Hindu College)
Health Science - S.Srikumar B.Sc. (Jaffna Hindu College)
English - Language, Literature - P.Mathan B.A. (Eng Lit) Dip. in Eng.
Classes Commence on 9th Dec.2010 at 3.30 pm
Admissions from 3 pm Today

நல்லூர் புனித பூமியில் ஓர் புதிய உதயம்!
பல கல்வி நிறுவன மாணவர்களின் சாதனைகளுக்கு வழிகோலிய முன்னணி ஆசிரியர்கள் ஒன்று சேருகின்றார்கள்
றோயல் அக்கடமி
தரம் 6 முதல் O/L வரை
தமிழ் மொழி மூல வகுப்புகள்
கணிதம் - K.வேலாயுதம், F.அருள்நேசன், R.பிரதீப்
விஞ்ஞானம் - இரா. செல்வவடிவேல், A.தபேசன், N. துரைராஜ்
தமிழ் - M.G. ஜனகன்
வரலாறு - R.S.சந்திரன், N.நந்தீஸ்வரன்
ஆங்கிலம் - P.மதன், V.S.சூரி
வணிகக்கல்வி - A. சுபேசன்
புவியியல் - S.ஜெயா
சமயம் - T.ஸ்ரீ
ஆரம்பம்: 09.12.2010 பிற்பகல் 3.30
இன்று பிற்பகல் 3 மணி முதல் அனுமதியைப் பெறலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.